



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் மாயம்

எம்.ஏ. மாஹிறா

ஹில்மா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Hila Publication - 01**
ISBN : 978-624-5224-05-0

* Book : Manathim Maayam
* Type : Poem
* Author : M.A. Mahira
* Copyright : Author
* First Edition : September 2024
* Pages : xx + 232
* Published by : Hilma Publication,
  No. 91, Al-Hambra Road, Maruthamunai-04,
  Sri Lanka. #32314
  Tel : 077 967 9464
* Book Layout : Jesa Grafix
* Print : Jesa Grafix,
  No. 281, Main Street, Maruthamunai, Sri Lanka.
* Price : Rs. 1000/=

**ஹில்மா பதிப்பக வெளியீடு – 01**
ISBN : 978-624-5224-05-0

* நூல் : மனதின் மாயம்
* வகை : கவிதை
* ஆசிரியர் : எம்.ஏ. மாஹிறா
* உரிமை : ஆசிரியருக்கு
* முதல் பதிப்பு : செப்டம்பர் 2024
* பக்கங்கள் : xx + 232
* வெளியீடு : ஹில்மா பதிப்பகம்,
  இல. 91, அல்–ஹம்றா வீதி, மருதமுனை-04,
  இலங்கை. #32314
  தொலைபேசி : 077 967 9464
* நூல் வடிவமைப்பு : ஜெஸா கிரபிக்ஸ்
* அச்சு : ஜெஸா கிரபிக்ஸ்,
  இல. 281, பிரதான வீதி, மருதமுனை, இலங்கை.
* விலை : ரூபா 1000/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் மாயம்

## எம்.ஏ. மாஹிறா

இயற்பெயர் முஹம்மது அமீர் மாஹிறா
கிழக்கிலங்கையின் அம்பாரை மாவட்டத்தின்
கல்முனைப் பிரதேசத்தின் மருதமுனையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்
கொண்டவர்.

1985 களிலிருந்து ஆக்க இலக்கிய செயற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

இது இவரது முதலாவது கவிதைத் தொகுதியாகும்.

இல. 91, அல்–ஹம்றா வீதி,
மருதமுனை–04,
இலங்கை.
தொலைபேசி : 077 967 9464



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் காதுகளை திறக்கும் மாஹிறாவின் கவிதைகள் - ஒரு பார்வை

ஐ. எல். மொகமட் அமீர் புகழ் பெற்ற ஒரு சிறந்த கலைஞன். மேடை நாடகத்தயாரிப்பாளரும் நடிகரும் பாடலாசிரியருமான அன்னாருக்கு மகளாக 1971 இல் பிறந்து அல்-ஹம்றா, அல்-மனார் என மருதமுனையின் பாடசாலையில் பயின்று உயர்தரக் கல்வியை முடித்துக்கொண்ட பின்னர் கவிதை புனைய வந்தவர் மாஹிறா. ஹில்மா, கலீறா, மருதமுனை மாஹிறா ஆகிய புனைப்பெயர்களில் கவிதைகளை மாத்திரமன்றி கதை, கட்டுரைகளையும் எழுதி வந்தார். உதய தாரகை விருது, இரத்ன தீப விருது எனப் பத்திற்கும் மேற்பட்ட விருதுகளை வென்றவர் என்பது ஒன்றே இவரது கவித்துவ ஆற்றலை நமக்கு காட்டித் தருகிறது.

மாஹிறா சிறந்த செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்து இயங்கி வருபவர். மூத்த படைப்பாளியான மாஜிதா அப்துல் ஹமீத் (மாஜிதா தௌபீக்) போன்ற மூத்த எழுத்தாளர்களின் ஆதர்ஷமாக அமைந்து ஹரீஸா, சூபா, ஜெஸீமா முஜீப், ஷிபானா அஸீம் ஆகிய விரல்விட்டு எண்ணக்கூடிய தொகுதிகள் படைத்த பெண் கவிதாயினிகள் வரிசையிலே தன்னையும் இருத்திக் கொண்ட மாஹிறா என்ற படைப்பாளியின் தொகுதி இன்று புதுவரவாகின்றது. எதிர்காலத்தில் இனி கவிதைத் தொகுதிகளை தரக் காத்திருக்கும் மாஜிதா தௌபீக், ஹைறுன்நிஸா சக்காப், ஹைறுன்நிஸா போன்ற கவிதாயினிகள் தங்களது தொகுதிகளை விரைவுபடுத்துவார்கள் என்ற நம்பிக்கை விதையை இத்தருணத்தில் ஊன்றிவிடுவதில் மகிழ்ச்சியடைவதோடு மாஹிறாவின் கவிதைத் தொகுதியை மனம் நெகிழ்ந்து வரவேற்போம்.

கவிதை என்பது இத்தகையது, இத்தன்மையது, இவ்வரம்பினுள் அடங்குவது, இவ்வெல்லையில் ஒடுங்குவது போன்ற வரையறைகள் அனைத்தையும் தாண்டியது. கவிஞனால் உணர்ந்து அனுபவிக்கப்பட்ட மூலாதாரப் பொருள் அவனுக்கே உரிய பாணியில் பிரசவிக்கப்படும் போது அதன் உண்மை, அதனைப் படிப்பவரின் அனுபவம், கல்வி, வயது, போன்ற பரப்புகளுக்கேற்ப விரிந்து கொண்டே போகும். இத்தகைய தன்மையில் மாஹிறா என்ற கவிதாயினி 'மனதின் மாயம்' பல்வேறு தரிசனங்களாய் கூடு விட்டுக் கூடு பாய்கிறது.

ஒடுக்கங்கள் மீதான எதிர்க்குரல்கள், பெண்ணிலை சார்ந்த வினாத் தெறிப்புக்கள், தனிமனித சுதந்திரத்திற்கான வேண்டுதல்கள், வாழ்வைப் போராடுதல், ஏழைகள் மீதான கழிவிரக்கம், குடும்பப்பணி, இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்பு, தாய்மை, தந்தைமை,கனவுகள், கவலைகள், ஏக்கங்கள், மருத்துவம், மரணம், அல்குர்ஆன், பலஸ்தீனம், கழாகத்ர், காலம் என்ற மாஹிறாவின் சமூக அரசியல் கவிதைகள் மாறி மாறிப் பயணிக்கின்றது.

பொதுவாக இவரது எல்லாக் கவிதைகளுமே வானொலிப் பண்பலைகளுக்காக எழுதப்பட்டவை என்பது தான் விஷேட பண்பாகிறது. இலங்கை வானொலி, வசந்தம், பிறை, ஊவா, தென்றல், சூரியன், வெளிச்சம், வெற்றி, தமிழ் FM, அலை FM, சக்தி FM என மனதின் மாயம் உலா வந்தவைகள் தான். வெவ்வேறு அறிவிப்பாளர்களின் வெவ்வேறு குரல்வழி உயிரூட்டப்பட்டு பட்டியும் தொட்டியும் செவி நுகர்ந்தவைகள் தான். பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கூட இவருக்கான இடத்தை அவ்வப்போது வழங்கி வந்திருக்கின்றன.

சிந்தனையின் படைப்புத் தெறிப்புக்கள் அழகியல் சார்ந்து வெளிப்படும் போது கவிதைக்குரிய பரவசம் இயல்பாக கிடைத்து விடுகிறது. இந்தப் பொழுதை வாழ்வதென்பதே, அழகான வாழ்வு என்பதே நகரும் நொடிகள் கவிதையில் இப்படி காட்டிச் செல்கிறார்.

நகரும் நொடிகள் என்றும்
மீள வருவதில்லை
இருக்கும் நொடிகளுக்குள் நாம்
இனிப்புற வாழ்வதே
எம்மவர் வாழ்வாகட்டும்.

இதேபோல் அழகு கவிதை பிரலாபிக்கும் விதத்தை

கடலுக்கு அலை அழகு
வானத்திற்கு நிலவழகு
மேகத்திற்கு மின்னல் அழகு
பூமிக்கு மலை அழகு
மரத்திற்கு தென்றல் அழகு
மனிதர்க்கு நல்ல நட்பே அழகு

எனத் தங்களை நிகழ்காலப்படுத்திக் கொள்ள வேண்டுமெனக் காட்டுகின்றார்.

எளிமையான சொற்களின் தெரிவு கைதேர்ந்த புகைப்படக்காரன் ஒருவனின் காட்சிப்படுத்தல்கள் போல் காட்டப்பட்டு ஈற்று அடிகளில் தனது கருத்துப் புலப்பாட்டை முன்வைத்து செல்வதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை இரசிக்கும்
இளகிய மனதின் ஓரத்தில்
ஆயிரம் கதைகளை பேசிச் செல்கிறது
அழகிய கடற்கரை.

ஓராயிரம் மர்மத்தை
தன்னகத்தே கொண்டிருக்கும்
எங்கள் கடல் மாதாவின்
கல்புதனை யார்தான் கண்டறிவார்?

இயற்கை அழகியது
அதனுள் மூழ்கும் போதெல்லாம்
மனம் லேசாகிப் போகிறது
சகலதும் மறந்து - இதற்குள்
இந்த கடல் மாதா மட்டும்
விதி விலக்கா என்ன?

அனுபவ பூர்வமாக உணர்ந்து மாஹிறாவினால் வரையப்பட்ட கவிதைகள் பல உணர்வுபூர்வமானவை. கவிதாயினியின் தூய இருதயமாகிய பளிங்கியில் பதிந்து போன மறக்க முடியாத அனுபவங்களின் வெளிப்பாடு களாக அவை இருக்கின்றன. சுய வாழ்வின் முழுமை எவருக்கும் எளிதில் வாய்த்து விடுவதில்லை. ஒரு மனிதன் எப்படியும் அடுத்தவன் மீது சாய்ந்து வாழ்கின்றான். அடுத்தவன் மற்றொருவன் மீது, கணவன் மனைவியின் மீது, நண்பர்கள் மீது, அரசாங்கத்தின் மீது இப்படி சாய்வுகள் தொடர்கின்றன. இச்சாய்வுகளுக்கு பெயர்தான் உறவுகள் எனப்படுகிறது. இந்த உறவுகள் தூரமாகும் போது அல்லது கிடைக்கப்பெற்றது இல்லாமல் ஆக்கப்படும் போது அனுபவிக்கும் துயரங்கள் கவிதைகளாக வரிக்கப்பட்டு வாசக நட்புகளிடம் பரிமாற்றப்படுவது கூடச் தனிச் சுகமேதான். அவ்வகையில் ஓட்டம், விளைநிலம், பெற்றோரின் அன்பு, எதுவும் புரியவில்லை. எனக்கொரு பதில்கூறு, பதட்டம், மாயை, செய் அல்லது செத்து மடி, மனம், ஆச்சரியம், பச்சோந்தி போன்ற கவிதைகள் ஆசிரியரின் மறக்கமுடியாத உணர்வலைகளாய் மீண்டும் மீண்டும் அடிக்கின்றன.

சாவின் விளிம்பை
நெருங்கி விடுகிறது மனது...
வெறுப்புக்கள் தொடராய்
நம்மைச் சூழும் போது.
விதிமீது கோபம் வருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதி என்ற ஒன்றை அது
தராது விலகும் போது.

உறவுகளை நினைத்தால்
அருவருப்பாகி விடுகிறது மனம்
ஏறிமிதிப்பதும்
இழுப்பதும்
அறுப்பதுமாய்
அது இருப்பதைப் பார்க்க.

ஒரு தர வாழ்விற்குள்
ஓராயிரம் இன்னல்கள்
அடிக்கடி செத்துப்பிழைப்பதில்
வெறுப்பாகி நிற்கிறது மனம்
முடிவிலியைத் தொடரும் பூச்சியங்களாக.

எனவரும் 'வெறுப்பு' கவிதை அதிக உள்ளங்களின் கையேறு நிலையைப் பற்றி பதிந்து செல்கிறது.

கொரோணா தாக்கம் அதன் பின்னரான சமூக அரசியல் மாற்றம், விலைவாசி உயர்வு, மின்வெட்டும் மின் கட்டண அதிகரிப்பும் எனப் பல கவிதைகள் நாட்டு நடப்பியலை அலசிச் செல்கின்றன. கவிதைகள்...

நம் தேசத்தில் அடிக்கடி
வந்து வந்து போன
மின்வெட்டில்
வெந்துதான் போய்விட்டது
இன்றைய மனிதம்.

பலகோடிகளில் புரண்டு
பல கோடிகளை
மென்று விழுங்கிய
கொரோணா வைரஸ்
சப்பித் துப்பிய
மிச்சம் மீதி வாழ்வும்
இன்று மின்வெட்டில்
மண்ணாய் போனதென்று
புலம்பியே அழுகிறது மனிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே 'விலைவாசி' கவிதையில் ஆசிரியரின் ஆதங்கம் வெளிப்படும் விதம் சிறப்பாகும்.

ஆளுக்கொரு விலையில்
ஆளுக்கொரு நிறுவையில்
ஆளுக்கொரு தயாரிப்பிலென்று
அனைத்து பொருட்களும் இங்கே
அலை மோதிக் கிடக்கிறது
அதீத விலையேற்றத்தில்.

பாவம்!...
என் தேசத்தின் மக்கள்
விடியலைத் தேடி
அழும் கோரமது
என்றுதான் மாறும்?

பதவி மாற்றங்கள் தனில்
சமூக எழுச்சி பெற்று
என் தேசத்து மக்களின்
வாழ்வியலைச் சீர்படுத்தும்
காலமது எப்போது வரும்?

என கால மாற்றத்தையும் வாழ்வியல் எழுச்சியையும் வேண்டி நிற்கிறார் மாஹிறா. வரிகளின் இடையிடையே கேள்விகளைத் தொடுத்து வாசகரைச் சிந்திக்கத் தூண்டும் ஆற்றல் ஒரு கவிஞருக்கே உரித்தான அடிப்படை பண்புகளில் ஒன்றாகும். இவ்வினாத் தொடுப்பு முறையை அல்லது சமூகத்தை நோக்கி அடுக்கும் கேள்விகளை கவிதாயினியின் அனேக கவிதைகளில் காணலாம். அவற்றில் பல நினைவோட்டங்களாகவும் உள்ளுணர்வுப் பெருக்குகளாகவும் சிறப்புச் செய்கின்றன.

'கணக்கு' கவிதையில்

வறுத்தெடுக்கும் வறுமைக்குள்
வதங்கிவிடும் உயிரெல்லாம்
வாடித்தான் வீழ்கிறது அனைத்திலும்
கால ஓட்டத்தில்
எல்லாம் சகஜமென்று
எல்லோராலும் இருந்திடமுடியுமா?
பதிலின்றி நகர்கிறது
காலத்தின் பதிவுகள்
கழுத்தை நெரிக்கும் சுவடுகளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் போதைவஸ்துப் பாவனை பற்றிய விடயங்கள் மாஹிறாவினால் பல இடங்களில் எடுத்தாளப் பட்டுள்ளன. 'போதை' கவிதையில்

மாய உலகில் இளம் சமுதாயம்
இறந்து கொண்டிருக்கிறது
இழந்து போகும் இளமையோடு
எல்லாமே தொலைந்து போக.

கட்டுப்பாடுகள் எதனை
விதித்த போதும்
சிறைக்கூடங்களை அடிக்கடி
எட்டிப் பார்க்கிறது
சின்னஞ் சிறுசுகள்
எதிலும் திருந்தாத ஜென்மங்களாய்
போதை சிதைந்த
செல்களோடும் - மனங்களோடும்.

மாற்றம் நிகழும் உலகில்
மாறியே போகட்டும் மானிடர் வாழ்வு
போதை தொலைந்த சமூகமாய்
மாயை தெளிந்த மனங்களாய்.

என தன்னைச் சூழ்ந்த சமூகத்திற்காக வேண்டுதல் விடுக்கின்றார்.

இப்படியாக மாஹிறாவின் இப்புத்தகத்தில் வரும் நூறு கவிதைகளும் வெவ்வேறு பொருண்மைகளில் வெவ்வேறு வகைகளில் நயக்கத்தக்கதாக விளங்கினாலும் வாசகர் விரிந்து பரந்த சிந்தனை வெளிக்குள் எறிவிக்கப்படவில்லையென்பது என்னைப் பொருத்தவரை சிறு குறைதான். ஒருமையும் குவிதலும் கொண்ட Poster தன்மையானதாகவே எல்லாக் கவிதைகளும் இருக்கின்றன. பிரச்சாரமாக போதனையாக மாத்திரம் இல்லாமல் வாசகர்களுக்கான இடைவெளியும் இறுக்கமும் இணைந்தால் இன்னும் நன்கு அழகியதான தரிசனங்களைப் பெற வாய்ப்பிருக்கும்.

இறுக்கத்தை கைவிட்ட நிலையில் நீண்ட கவிதைகளாகத்தான் அனேகம் உள்ளன. வானொலிக்காக எழுதப்பட்ட தன்மையில் அப்படியான நீட்சி தவிர்க்க முடியாததாக இருந்திருக்கலாம். மேலும் கவிதை சொல்லும் ஆசிரியரே முடிவொன்றையும் வைத்து விடுகின்றார். சொல்லப்பட்ட திலிருந்து சொல்லப்படாததை வாசகர்கள் எடுத்துக் கொள்ள இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலே சிறப்பாகும். அதாவது நவீன கவிதைப் பரிமானங்களுக்கான பண்புகளில் கைதேர வேண்டும். அவ்வகையில் செங்குத்தாக யோசிக்கும் தன்மையும் அகலமான வாசிப்பும் வளர வளர மாஹிறா என்னும் கவிதாயினி இதைவிடவும் மேலெழ வாய்ப்புக்கள் நிரம்பியுள்ளன.

ஆண்டாள், மாலதிமைத்ரி, குட்டி ரேவதி, சல்மா, அனார், ருத்ரா போன்ற கவிதாயினிகளின் துணிச்சலும் மொழிப்பாங்கும், பெண்மொழித் தன்மையும் மாஹிறாவை வந்து அடையத்தான் போகிறது என்பதில் சந்தேகமில்லை. நவீன கவிதை, உலகப் பொதுவான வடிவமாக இருப்பதால் இவரது உயர்ச்சியும் முதிர்ச்சியும் தேடிக்கண்டடைவதிலும் வாசிப்பிலும் தங்கியிருக்கிறது.

கவிஞர்கள் மென்மையானவர்கள், உலகின் வன்கொடுமைகளைத் தாங்க முடியாதவர்கள். அதனால்தான் சிவிலியத் பிளாத், சிவரமணி போன்றோர் தங்களுடைய கவிதைகளையும் அழித்துத் தாங்களும் அழிந்தார்கள். இது மாஹிறாவின் முதல் கவிதைத் தொகுதி, தேடலும் வாசிப்பும் மாஹிறாவை இன்னும் ஒரு தளத்திற்கு உயர்த்தும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. வாழ்த்துக்கள்

**Dr. சத்தார் எம். பிர்தௌஸ்** Ph.D. (இலங்கை)
வருகை விரிவுரையாளர்,
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்,
ஒலுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது எழுத்தின் அடையாளம்

எழுத்து என்பது ஒரு அற்புதமான கலை. அதை எழுதுவது என்பது அத்தனை சுலபமான விடயமல்ல. என் சிறிய வயதில் எதையும் நான் முழுசாய் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் என் வீட்டில் அளவுக்கதிகமாக இலக்கியத்துறைசார்ந்த புத்தகங்களும், பத்திரிகைகளும் நிறைய இருந்தன. அவை எல்லாமே என் தந்தைக்குச் சொந்தமானவை. அப்போதிலிருந்தே நான் வாசிப்பில் அதீத நட்புக் கொண்டிருந்தேன்.இதன் போதே என் தந்தை ஆக்கங்களை எழுதி பத்திரிகைகளுக்கு போடுவதையும் அது அவற்றில் வெளிவருவதையும் நான் பார்த்திருக் கின்றேன். சில சந்தர்ப்பங்களில் அவர் என்னை அவரருகில் இருக்க வைத்து அவர் கவிதையைச் சொல்லச் சொல்ல நான் எழுதிக் கொடுத்திருக்கின்றேன். அப்போதெல்லாம் எனக்கு இது ஒரு பெரிய விடயமாய்ப் படவில்லை. ஏனெனில் என் வயது அப்படி

கொஞ்சம் வளர்ந்த பின் நான் 1985-1987 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் எனது ஆக்கங்கள் பல வெளிவந்தன. அதற்கு அப்போது எனக்கு ஆதரவுக் கரம் கொடுத்தவர் என் தந்தையாவார். அப்போதும் கூட அது எனக்குப் பெரிதாய் படவில்லை. ஏதோ! வானொலியில் பெயர் வந்தால் போதுமென நினைத்தேன். அதற்காகவே எழுதினேன். ஏனெனில் அன்றைய கால கட்டங்களில் வானொலியில் பெயர் வருவதென்பது ஒரு பெரிய விடயமாக தென்பட்டது எனக்கு. மற்றைய எதையும் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தெரியாத நிலையிலும் நான் இருந்தேன். அன்று... இலக்கியத்தில் ஈடுபாடு எனக்குள் முழுசாய் புரிபடாத ஒரு நிலையே இருந்தது.

காலச் சுழற்சியில்.. வாழ்க்கைப் பாதைகள் மாறி நானும் வளர்ந்து ஆளாகி பலதிலும் பட்டுத் தேறிய பின்பே எழுத்தின் மோகம் என்னை மீண்டும் ஈர்த்தது. பல நிஜங்களை உணர்ந்த போது எழுத்து எனக்குள் வீரியமாகிப் போனது. எனக்குள் ஏற்பட்ட ஏக்கம், தாக்கம், வலிகள், வடுக்கள், குடும்பத்துள், உறவுக்குள், நட்பக்குள் ஏற்பட்ட பிளவுகள், நான் பார்த்த கேட்ட சம்பவங்கள், என்னைச் சூழ்ந்திருந்த சமூகமென.... எல்லாமே என்னைச் சுற்றி வளைக்க.. அதன் பாதிப்பின் எதிரொலியில் நான் மீண்டும் எழுத ஆரம்பித்தேன்.

எல்லாவற்றையும் வாழ்வியலில் அனுபவித்து எழுதும் போது எழுத்து பேராயுதமானது. பெரும் வலி நீக்கி மாத்திரையாய் அது எனக்குள் மாறிப் போனது. எனது எழுத்துக்கள் களம் தேடி அலைந்து வானொலிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பலைகளையும், இலங்கையில் பல தேசியப் பத்திரிகைகளையும், பல சஞ்சிகைகளையும் நாடியது. அதில் எனக்கு வெற்றியும் கிடைத்தது.

எழுதி எழுதி எல்லாவற்றையும் கொப்பியில் நிரப்பி வைப்பதில் பயனில்லை. அதனை ஊடகங்களில் உலவ விடும் போது தான் நம்மை நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம். நாம் நினைத்ததை சாதிக்கலாம். நாம் நிம்மதியாயும் இருக்கலாம். அதனை நான் அனுபவித்துத் தெளிந்தேன். சில தசாப்தகால என் எழுத்துலகப் பயணத்தில் பெரிதாய் சாதனைகள் எதுவும் எனக்குள் நிகழ்ந்ததாய் தெரியவில்லை. எழுத்துலகில் நான் தத்தித் தவழ்ந்து கொண்டிருந்தேன். எந்தவொரு ஆக்கத்திற்கும் புத்தக வெளியிடே வெற்றியாய் முடிந்திருக்கின்றது அது.. ஆவணம் எனும் பெயரில்.

காலம் கடந்து என் கன்னிக் கவிதைத் தொகுதி ஒன்றை வெளியிடத் துணிந்தேன். அது 'மனதின் மாயம்' எனும் கன்னிக் கவிதைத் தொகுதியாகும். இதற்கு சகலரும் எனக்கு பக்கத்துணையாய் இருந்து என்னை ஊக்குவித்தார்கள். நான் இதுவரை கடந்து வந்த என் இலக்கிய பாதை மிகப் பெறுமானம் மிக்கதாய் கழிந்து போனது. இப்போது காலம் வசப்பட்டதால் இக்கவிதைத் தொகுதி வெளிவருகிறது. முதலில் அல்லாஹ்வை நினைத்துப் பார்க்கின்றேன்.

கவிதைகள் என நினைத்து நான் சிலதை 'மனதின் மாயம்' இல் சேர்த்திருக்கின்றேன். இதை வாசகர்கள், நண்பர்கள், ரசிகர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் எனப் பலரும் இவை தொடர்பான குறை நிறைகளை தாராளமாக சுட்டிக் காட்டலாம். என் எழுத்தின் பட்டை தீட்டலுக்கு அது உதவும். அந்த ஆறுதலே எனக்கு போதுமானது.

எழுதும் ஆற்றல் தந்த அலலாஹ்வுக்கே புகழனைத்தும். இனி உங்கள் இதயக் கதவுகளைத் திறந்து மனதின் மாயத்திற்குள் நுழைந்து கொள்ள உங்களை அழைத்துச் செல்கிறேன்.

நன்றி.

**எம். ஏ. மாஹிறா**
**இல. 91, அல்-ஹம்றா வீதி,**
**மருதமுனை-04,**
**இலங்கை. #32314**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன்பும் பெரு நன்றியும்

பிறை எப்.எம், ஊவா எப்.எம்,
வெண்ணிலா சஞ்சிகை போன்றவற்றிக்கும்,

பஸீர் அப்துல் கையூம், ஜே. வஹாப்தீன்,
றம்ஸானா சமீல், எம்.ஏ. நஸீர், ஏ.சி. றாஹில்,
எஸ்.எம்.எம். ஜவாத், எஸ். அசோக், எஸ்.எம். றமீஸ்,
எஸ்.ஏ. கப்பார், எஸ். ஜனூஸ், ஏ.எம். பாயிஸ்,
க. ஷியா, எஸ்.எம். பிர்தௌஸ், எம்.எம். விஜிலி,
எஸ்.ஏ. ஜெசீம், ஏ.எம். அப்ஸான் அஹமட்,
ஐ.எல். றிஸ்வான், கிபானா ஜிப்ரி,
ஏ.எம். தௌபீக், முஜாமலா முபாறக், றமீஸா நௌசாட்,
நிஷா இஸ்மாயில்.

என் குடும்பத்தவர்களுக்கும்
சொல்ல மறந்தவர்களுக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும்
அல்ஹம்துலில்லாஹ்...

எனது வாப்பா மர்ஹூம் ஐ.எல்.எம். அமீர்
எனது உம்மா எம்.ஐ. உம்மு ஸல்மா
இருவருக்கும்

# சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் மாயத்தின் பக்கங்களைப் புரட்டுதல்


1. சுடுகாடு ........ 1
2. பெரும் பொய்யே வாழ்வாக ........ 4
3. புனித றமழான் ........ 7
4. கவலை மற ........ 10
5. கனவு ........ 13
6. தாயைப் போற்றி ........ 15
7. மரணம் ........ 17
8. தன்னம்பிக்கை ........ 19
9. துரத்தித் தாக்கும் கடன் ........ 21
10. புரிதல் ........ 24
11. கோடைத்தணல் ........ 25
12. சாதனை ........ 28
13. விசித்திரம் ........ 30
14. அழகு ........ 32
15. நகரும் நொடிகள் ........ 33
16. மதிப்பு ........ 35
17. தந்தையரை வாழ்த்துவோம் ........ 37
18. மருத்துவத்துறை ........ 39
19. கவர்ச்சிக் காதல் ........ 42
20. கொடிய நோய் ........ 45
21. சிற்பம் ........ 48
22. பருவம் ........ 50
23. பச்சோந்தி ........ 52
24. கொடுமை ........ 55
25. கண்ணூறு கழித்தல் ........ 57
26. அழகு ........ 61
27. நெசவுத் தொழில் ........ 63
28. சுடுகிறது ........ 66
29. தந்தையைப் போற்றுவோம் ........ 68
30. மன்னிப்பு ........ 71
31. போதை வஸ்த்து ........ 73
32. என் காதல் ........ 76
33. எதிர்பார்ப்பு ........ 78




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. சுடுகிறது மரணம் ........ 80
35. தனிமை கொடுமை ........ 83
36. கழா கத்ர் ........ 85
37. மரணம் பல விதம் ........ 87
38. குளிர்ந்தது மனது ........ 90
39. அருள் வேதம் அல்குர்ஆன் ........ 92
40. பற்றியெரியும் பலஸ்தீனம் ........ 95
41. வெள்ளை மனம் ........ 98
42. உறக்கம் ........ 99
43. ரணம் ........ 102
44. புத்தாண்டு ........ 104
45. மழை ........ 106
46. ஆச்சரியம் ........ 107
47. தளம்பல் ........ 109
48. பிடிப்பு ........ 111
49. வெறுப்பு ........ 113
50. ஓட்டம் ........ 115
51. காதலே! போ!... போ!... ........ 118
52. சுதந்திரம் ........ 120
53. நிழல் ........ 122
54. விளைநிலம் ........ 124
55. பெற்றோரின் அன்பு ........ 127
56. நோய் ........ 129
57. சலிப்பு ........ 131
58. எதுவும் புரியவில்லை ........ 133
59. சுவனம் செல்வோம் ........ 136
60. தாங்க முடியவில்லை ........ 138
61. சுனாமி ........ 140
62. பார்வை ஒன்றே போதும் ........ 142
63. மனதின் மாயம் ........ 144
64. எனக்கொரு பதில் கூறு ........ 146
65. பதட்டம் ........ 149
66. மாயை ........ 152
67. மனம் ........ 155



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. வறுமை ........ 157
69. கீறல் ........ 159
70. நிம்மதி ........ 161
71. கொட்டும் மழை ........ 163
72. அவதானம் ........ 165
73. வெட்கம் ........ 167
74. மயானம் ........ 169
75. மனம் ........ 172
76. மெய் விம்பம் ........ 175
77. போற்றப்படும் பெண்மை ........ 177
78. எச்சரிக்கை ........ 180
79. காலம் ........ 182
80. கணக்கு ........ 184
81. அழும் தேசம் ........ 186
82. கசப்பு ........ 187
83. ஏமாற்றம் ........ 188
84. வெறுப்பு ........ 189
85. சூழச்சி ........ 191
86. தவிப்பு ........ 193
87. விஷம் போல் ஏறுகின்ற விலைவாசி ........ 195
88. மலரும் வாழ்வு ........ 198
89. காலத்தின் நகர்வு ........ 200
90. தேர்தலுக்கு முன்னும் பின்னும் ........ 202
91. செய் அல்லது செத்து மடி ........ 206
92. போதை ........ 211
93. பாவம் அவன் ........ 213
94. அதிர்வு ........ 215
95. மின்வெட்டு ........ 217
96. சிந்தனை ........ 219
97. கடற்கரை சாலையோரம் ........ 221
98. வதந்தி ........ 224
99. பிஞ்சு வதனம் ........ 226
100. வேஷம் ........ 228




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுகாடு

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்
எழுதிப் படித்தல்
அறிவை வளர்க்கும்.

இவை...எல்லாம் இருந்தும்
எதுவும் இல்லாதது போல்
திசை மாறிப் போனது
பலரது வாழ்வியல்.

விதி என்ற ஒன்று
வீழ்த்தியது பலரை
மணவாழ்வியல் எனும்
புதைகுழிக்குள்.

அந்த...சுடுகாட்டில் தான்
எல்லாமே கருகி சாம்பலாகிறது.

பட்டம்.. பதவி.. படிப்பு
சுயம் எல்லாமே... – தொலை
தூரமாய் பறந்தும் போகிறது.

அடிமைச் சங்கிலி இங்கே
பலமாய் பலருள்
இறுக்கிப் பூட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் தான் நானும்
ஒரு குட்டிப் பூனையாய்
வளைந்து நெளிந்து
பயந்து வாழ்ந்தேன்.

வாழ்க்கை ஒரு நரக
நெருப்பென்று அப்போது தான்
கண்டும் கொண்டேன்.

ஒரு மண வாழ்க்கைக்காய்
எத்தனை கொடுமைகளைத்தான்
எல்லோரும் சுமப்பது?...

கட்டிய கணவண் – அறிவிலி
எண்றால்... இப்படித்தான்
பலரது வாழ்வும்
புண்ணாய்ப் போய் அழும்.

எதிலும் இறங்கிப் போதல்
எமக்கு அழிவைத்தரும்...
அது எதுவாய் இருப்பினும் சரியே.

எதிலும் எவரும்
இறங்கிப் போகாத வரை
எல்லாமே வெற்றிதான்... அது..
எதுவாய் இருப்பினும் சரியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையேல்... இப்படித்தான்
பலரும் பலதிலும்
ஒப்பாரி வைக்கனும்.

என் தன்னம்பிக்கையின்
முதுகெலும்பை யாரோ!...
உடைத்தும் விட்டார்கள்.

அதனால் தான் – நான்
இன்னும் கூனிக் குறுகி
முடங்கிக் கிடக்கிறேன்...
வாழ்வியலில் நிமிர முடியாமல்.

ஆயிரம் மகளிர் தினங்கள்
அகிலத்தில் அப்பப்போ வந்தாலும்
யாருக்கு என்ன பலன்?...

அடிமைச் சங்கிலி பூட்டிய
அபலைகளின் வாழ்வென்றும்
வெறும் சுடுகாடு தான்.

*2023.03.15 - பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொய்யே வாழ்வாக

எத்தனை லாவகமாய்த் தான்
எல்லோரும் பேசுகிறார்கள்...
எதுவும் தெரியாத மனிதரெல்லாம்
எல்லாம் தெரிந்த மனிதர் போல்
பசப்பு வார்த்தைகள் பேசும் போது
மெய் சிலிர்த்து போகிறது.

அழகழகாய் மினுக்கி
அம்சமாய் வளைந்து நெளிந்து
ஆர்ப்பாட்டமாய் சிலிப்பி .. பொதுவில்
எடுப்பாய் எடுப்பெடுத்துப் பலர்
நம்மை மட்டம் தட்டி
நகரும் போது எமக்குள்...
வெறுப்பாகி விடுகிறது அனைத்தும்.

பலரின் திடீர் பொய்களில்
திடுக்கிட்டு விடுகிறது மனது...
சிலரின் அபாண்டப் புழுகினில்
அழிந்து விடுகிறது உசிரு...
சிலரின் தொடர் பொய்களில்
உருக்குலைந்து உடைகிறது இதயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் பொய்களில் ... எத்தனை
முட்களைத் தான் நாமும்
உயிரின் உள்ளே விதைப்பது?

பொய்யில் புரண்டு
பொய்யில் வளர்ந்து
பொய்யாய் வாழ்பவர்
பெருமைகள் பேசுகையில்
வெறுப்பாகி நகர்கிறது பலதும்.

தத்துவங்களை அழகழகாய்
அவர்கள் அள்ளிக் கொட்டி
ஆரவாரமாய் சிரித்து மகிழ்கையில்
சீறி வருகிறது எமக்குள் கோபம்.

சமூகம்... சகலதும் கலந்த
ஓர் கலவையாக.. அதில்
நாமும் ஓர் அங்கமாக
இந்த பிடிக்காத மனிதருடே
நாமும் பேசிப் பழகி – பின்னி
வாழ்ந்து துன்புறும் கொடுமைகள்
என்று தான் மாறும்?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுக்குள்ளும் நாம்
இறங்கி இறங்கி போவதால் தான்
எல்லோரும் எம்மை
இழுத்து இழுத்து வதைக்கிறார்கள்...
எதிலும் எழும்ப முடியாத படி.

ஏதோ!... நடப்பது நடக்க
நம் வாழ்வியலை நாம் நகர்த்த
எதற்குள்ளும் வழுக்கி வீழ்தலே
நம் வாழ்வாகட்டும்.

அதில் தான்
சகலதும் தழைக்கிறது
பிழைக்கத் தெரிந்த
மனிதர் இவரென்று.

*2023.03.23 - பிறை எப்.எம். (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித றமழான்

ஆண்டு தோறும் அழகழகாய்
வந்தே தான் போகிறது
புனித றமழான்... - புண்ணியங்கள்
பல கோடி சுமந்து.

சின்னஞ் சிறு பிஞ்சில்
ஆரம்பித்து... பல்லுப் போன
பாட்டன் பாட்டி வரையது
உயிர்களின் உயிர்களை பண்படுத்தவே
அது... ஆண்டு தோறும்
வந்து போகிறது.

நோய் நொடிகளை குணப்படுத்தும்
மாய சக்தி இதற்குண்டு
பசி பட்டினியின் கொடுமை தனை
மற்றோருக்கு புரிய வைக்கும்
தூய சக்தியும் இதற்குண்டு.

அல்லாவற்விடம் எதையும்
நேர்வழியில் கேட்டால்
அவை கிடைக்கும் சக்தியும்
இம் மாதத்திற்கு உண்டு.

இல்லாதோரும் இருப்போரும் எதையும்
பகிர்ந்துண்டு மகிழ்ச்சியுறும்
புனித மாதம் றமழான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸதகா ஸகாத்தை
ஏழை எளியோருக்கு
வாரி வழங்கும்
புனித மாதம் றமழான்.

அந்நிய மதத்தவரை
அரவணைத்து ஆதரிக்கும்
புனித மாதம் றமழான்.

நோன்பென்ற ஒன்றில் தான்
அதிகம் அதிகம்
புண்ணியங்கள் சேருகிறது.

புனிதங்கள் சேர்க்கும்
தொழுகை– ஓதல்
ஸுன்னத்தான நல்லமல்களை
அதிகமதிகம் செய்வதன் மூலம்...

இம்மை – மறுமை வாழ்விற்கான
நல்வழிகளை திறந்து கொள்ளலாம்.

பன்மடங்கு நன்மை தரும்
நல்லமல்களின் ஊடே
நாற் திசையும் நல்லதே நடக்கட்டும்
நம்மவரின் துன்பங்கள் நீங்கட்டும்
இன்பங்கள் பெருகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயாற வாழ்த்தியே
வரவேற்று மகிழ்வோம்
வகையில்லா செல்வங்களை
வையகத்தில் அள்ளி வந்த
இந்த புனித றமழானை.

மனிதத்தை புனிதமாக்கி மற்ற
உயிர்களுக்கும் உயிர் கொடுத்து
சகல துயர்களையும் போக்கி
நோன்பது இவ்வையகத்தில்
நல்லபடி நகர வேண்டுமென
வாழ்த்தியே வரவேற்போம்
இந்த புனித றமழானில்.

*2023.03.24 பிறை எப்.எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலை மற

துன்பத்தில் துவண்டவன்
துடித்தெழுந்து... – துன்பம்
மறக்க பறந்து சென்றான்
நம்பிக்கைக்குரிய பல நண்பர்களிடம்.

அங்கே!... பகிர்ந்து கொண்ட
துன்பம் தனில் – காற்றாய்
பறந்தது அவன் கவலை.

தன் கஷ்ட சூழல் மறந்து
எதையும் தூர நோக்கில்
சீர் தூக்கிப் பார்த்து – சிந்தித்த
பலர்... சிறந்து வாழ்ந்தனர்...
சமூகத்தில் சிரித்த முகத்தோடு.

அகப்படும் கவலைக்கெல்லாம்
அழுது புரண்டு
ஆர்ப்பாட்டம் பண்ணாமல்
அலை பாயும் மனமதை
அழுத்திப் பிடித்த பலரும்
அழகாய் வாழ்ந்தனர் அகிலத்தில்.

அழுத்திப் பிடிக்கும் சோகம்
ஆட்டி வீழ்த்தும் மனதை– அதில்
ஆடிப் போகும் உயிரது
அழித்து விடும் சகலதையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மனம்
நொடிக்குள்... துவண்டு போனால்
மடிந்தே தான் போகும்
வாழ்வில் சகலதும்.

வாழ்வு... பலருக்கு வரம்
சிலருக்கு சாபம் – இன்னும்
சிலருக்கோ!.... கொடுந் தீ.

மொத்தமாய் வாழ்வு பலருக்கும்
பல விதமாய் மாறி விட – அதில்...
போர்க்களமாய் சிதைகிறது மனது.

இதில் யாரும் நொடிந்து விடாமல்
தம் மனதை திடப்படுத்த
பக்கத்தில் வராது கவலை.

கவலை மறக்க
போதைக்குள் புதைந்தால்
புதைந்தே தான் போகும்
முழு வாழ்வும்.

சித்தம் கலங்காமல்
சிந்திக்கத் தெரிந்தவர்
சிறந்தே தான்
வாழ்வர் வாழ்வில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலில் மன வலிமை
மண் கௌவ்வாது
சுயபுத்தி சதி செய்யாது
சுய சம்பாத்தியம்
தம்மை காவு கொள்ளாது.

ஆதலால்...
கவலை மறக்க மனிதன்
தன்னம்பிக்கை விழுதுகளை
தாங்கிப் பிடித்து நிதானமாய்
சிந்தித்து வாழ்தலே நன்று.

*2003.03.30 - பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு

அடிக்கடி....
அழகாய் வருகிறது கனவு.

அடிக்கடி... – கலர்
கலராய் வருகிறது கனவு.·.

கனவுப் புத்தகத்தில்
கண்ட தெல்லாம் விடைகளாய்
வந்தே வீழ்கிறது.

எதையும் ஆராய்ந்து சரியாய்
ஒரு முடிவு எடுப்பதற்குள்...
எல்லாமே கனவாய்
மீண்டும் மாறிவிடுகிறது.

கனவென்ற ஒன்றில் கூட
அற்ப ஆசைகள் கூட
அழிந்தே போகிறது.

இனி அடுத்த நாளிற்காய்
காத்துக் கிடக்கிறது
அடுத்த கனவு...
நம்மை
உருட்டிப் புரட்டி
அதில் திணற வைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவும் கூட நம்மை
கட்டிப் போடுகிறது
கலர் கலர் கனவிற்குள்
கண்ட தெல்லாம் விளையுமென்று.

நம் காலம் முடியும் வரை
நாமும் கனவிற்குள் தினம்
கட்டுண்டு அமிழ்வோம்...
நம் வாழ்வியலில்
எதையேனும் சாதிக்க.

*2023.04.29 - பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயைப் போற்றி

சமூக வாழ்வியலின்
அவலங்களைப் பார்க்கப்... பார்க்க...
அழுதே விடுகிறது மனது.

குடும்ப வாழ்வியலின்
குரங்குப் பிடியான
பிடிவாதம் தனில்...
குடும்பத்தவரின் பலத்த
மூளைச் சலவை தனில்...

அரையும் குறையுமாய்
அழிந்தே விட்டது
பலரது வாழ்வுகள்
புதைகுழி நோக்கி...

ஒரு தர பிறப்பு தனில்
ஒரு தர வாழ்வு தனை
ஒழித்து விட்ட படி
ஒப்பாரி வைத்தே நகர்கிறது
பலரது வாழ்வுகள்
தன் சுயம் தொலைந்த படி.

ஆண்டுகள் நகர்ந்து நகர்ந்து...
வாழ்வியலை விழுங்க... விழுங்க...
அதனுள் அமிழ்ந்தே போகிறது
சிலரது வாழ்வுகள்
எழுச்சிகள் அற்ற படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பலதோ!
சிகரம் தொடுகிறது – விதி
வழங்கிய வரம் தனில்
எல்லாமே வாழ்வியலில் சகஜமென்று.

உறவுகள் உறவுகளாய் உள்ளவரை
எவருக்கும் இல்லை சோகம்
அது இடறிப் போனால்...
எல்லாமே சோகம் தான்
எல்லோர் வாழ்விலும்.

பிறப்பென்ற ஒன்றும்
வளர்ப்பென்ற ஒன்றும்
தாய்மையின் சிறப்பென்றால்...

அது அனைத்தினதும் சிறப்புக்களையும்
பிள்ளைச் செல்வங்களின்
அழகிய வாழ்வுகளே
வெற்றிக் கனியாக்குகிறது
தாய் மனம் குளிர.

தாயவள் என்றும்
நீடூழி!...
வாழிய வாழியவே.

*2023.05.14 - பிறை எப்.எம் (மனதோடு பிறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்

மரணம் என்னை
மரணிக்கச் செய்கிறது...
எதிர்பாரா மரணங்கள்
எதிர் விளைவுகளை
எம்முள் விதைக்க...

திடீர் மரணமென்ற
ஒன்று என்னை
மரணிக்கச் செய்கிறது.

அழுத்திய சோகம்
அகத்தினை அழுத்த...
இதயம் என்ற ஒன்று
இடிந்து நொறுங்க...

மூளை அதுவும்
செயலிழந்து போய்
உடல் இயக்கம் அதுவும்
செயலிழந்து போகவென்று...

அகால மரணமென்ற
ஒன்று என்னை
மரணிக்கச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பென்ற ஒன்றில்
இறப்பென்ற ஒன்று
நிச்சயிக்கப்பட...

இதை மறந்து மனிதர்
வாழ்வதை நினைக்க... நினைக்க...
பாரமாய் இருக்கிறது மனது.

மனிதா நீ!...
மறுமை தனில்
சுவனம் செல்ல விரைந்திடு.

இன்றே நீ!...
நல்லமல் தேடு
நல்லபடி மரணிக்க.

நீ மறைந்த பின்னும்
மற்றவர் உன்னை
போற்றிப் புகழ.

*2023.05.19 - பிறை எப்.எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

கற்பனை கசக்கிறது
கைக்கெட்டாத் தூரம் வரை அது
கரைந்து போவதால்.

நிஜம் வலிக்கிறது...
எதிலும்..... கைகெட்டியும்
வாய்க்கெட்டா நிலை
வரும் போது.

பொறுமை எல்லை மீறுகிறது
எதிர்பார்ப்புக்கள் பூச்சியங்களை
எட்டி விட்ட கோபத்தில்.

சுடும் நிஜங்களுக்குள்...
சுருங்கி விடும் நினைவுகள்
கலங்கி அழும் கற்பனைகள்.

இவற்றுக் கெல்லாம்
காலம் தரும் தீர்ப்பு
கண்ணீர் என்று
கலங்கி அழுகிறது மனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை அவலத்திலும்
தொடர் தோல்விகளின் சந்திப்பில்
உருகி விட்ட உயிரது...

வெறும் ஜடமாய்
சமூகத்தில் உலவிய படி
தலை நிமிர்ந்து நிற்கிறது
மன வலிமை எனும்
விழுது பற்றி.

*2023.05.20 - பிறை எப்.எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரத்தித் தாக்கும் கடன்

பலருக்கு எதையும் கடனாய்
வேண்டியே பழக்கம் – அது
எதனையும் மீளக் கொடுத்து
பழக்கமே இல்லை.

இவர்கள்.. அடுத்தவரின் மனதை
நெருப்பாய் பற்ற வைத்து...
அவர்களின் திட்டிற்கும் ஆளாவார்கள்...
ஆனாலும்... இவர்கள் உடலில்
துளியும் சூடு, சொரணை
இல்லாத ஜென்மங்கள்.

இன்னும் பலர்
படு ரோசக்காரர்கள்
பட்ட கடனை எப்பாடு பட்டாவது
கொடுக்கனும் என்று
ஓடி ஓடி உழைப்பார்கள்.

தன் தன்மானத்தை
உயர்வாய் நினைக்கும்
பெரும் ரோசக்கார ஜென்மங்கள்.

இன்னும் பலர்...
எதையும் கொடுக்கவும் முடியாமல்
எதையும் எடுக்கவும் முடியாமல்
அல்லாடும் வர்க்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் துன்புறுத்தாத
அப்பாவி வர்க்கமிது – நல்ல
ரோசக்கார வர்க்கமும் கூட.

மனிதரின் வாழ்வு
மானிலத்தின் மீதினில்
சங்கிலித் தொடராய்
சகலதிலும் தங்கியே நகர்கிறது.

அதில்... மற்றோருக்கு நாம்
தொல்லையின்றி வாழ்தலே
பெரும் சிறப்பு.

பட்ட கடனை
திருப்பிக் கொடுப்பவர்
உள்ளத்தால் சிறந்தவர்.

இதுவே மனிதப் பண்பில்
மகா பெரிய பண்பு...
பலரும் ஏன் இதை
நினைக்க மறுக்கிறார்கள்?...

ஹறாம் தின்னிகளாய் வாழ்வதில்
பலருக்கும் ஏன்
ஆயிரம் ஆனந்தம்?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அடங்கிய பின்
ஆறடி நிலத்தினில்
அடங்கப் போவதை
ஏன் தான் பலரும்
மறந்து போனார்கள்?...

இனியாவது மனிதன் புனிதனாகட்டும்
மனங்கள் ரம்மியமாகட்டும்– அதில்
விதைக்கப்படட்டும் நல்லெண்ணங்கள்
அதிலாவது தழைத்தெழட்டும்
நல்ல கொடுக்கல் வாங்கல்கள்.

அதில் மற்றோரும்
மனம் குளிர்ந்து
இரம்மியமாய் வாழ.

*2023.6.02. - பிறை எப்.எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிதல்

எதையும் சிலருக்குள்
புரிய வைப்பதற்குள்
புண்ணாகிப் போகிறது
உயிர்.

புரிதல் புரிதலின்றிப் போக
புண்பட்டு நம்மனம் அதில்
புழுங்கி அவிய...

புரியாப் புதிராய் அது
பிரிந்தே செல்கிறது
வெகு தொலைவு...
நம் மனம் அதில்
செத்து மடிய.

புரிதல் புரிதலின்றிப் போனால்
புண் பட்டே அழியும்
அனைத்து மென்று
அடுத்தவரும் புலம்ப.

*2023.06.03 - பிறை எப். எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடைத் தணல்

காலம் காலமாய்
கால நிலை மாற்றங்கள்
உலகியல் வாழ்வதை
உருமாற்றிக் கொண்டே போகிறது...
அதனுள் உயிர்களும்
உருமாறிக் கொண்டே நகர்கிறது.

பெரும் கோடை என்றால்...
ஒப்பாரி ராகம்
எல்லோர் மனங்களிலும்.

பயங்கர வரட்சி
பயிர்களின் நாசம்
உயிர்களின் வதங்கல்
ஓயாத வியர்வை
புதிதாய் பலவித
வறட்சி நோய்களென...

கோடைத் தணல்
கொண்டு வரும்
கொடுமைகள் தான்
எத்தனை... எத்தனை...

இந்நிலையில்... வெறுப்பின் ஓரங்களில்
மண்டியிடும் மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் ரசனையினை கூட
இக்காலம் தனில் சில சமயம்
வெறுத்து ஒதுக்கியும் விடுகிறான்.

அதீத வறட்சி
உயிர்களை வாட்ட – அதில்
வதங்கிடும் உயிர்கள்
தன் தாகம் தீர்க்க...

அதிகம் நீரையும்
அதிகமதிகம் பழங்களையும்
ஆரோக்கியமான உணவுகளையும்
தேடிப் பிடித்து உண்கிறது
தன்னுயிர் காக்க.

இயற்கையின் சுழற்சி அற்பதமானது...
அது அப்படியே எப்போதும்
மாறிக் கொண்டே தான் இருக்கும்
அதற்குள் நாமும் பின்னிக் கொண்டு
அதற்கேற்றால் போல்
நம் வாழ்வியலை மாற்றலே
சாலச் சிறந்தது.

காற்றுள்ள போதே
தூற்றிக் கொள்வதும்
அவரவர் வாழ்வியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அழகுபடுத்தும்.
ஆடைக்கொரு கோலம்
கோடைக்கொரு கோலம்
ஆளுக்கொரு கோலமென வாழ்ந்தால்...
நம் வாழ்வென்றும்
படு மோசம் தான்.

ஆதலால்...
மனிதன் தன் வாழ்வியலை
அழகுபடுத்த – அனைத்துலக
இயற்கைக்குள்ளும் நின்றுலவுதே
சாலச் சிறந்தது.

அது தான்
அறிவுள்ள மனிதரின்
அழகிய பண்பு.

இதற்குள் தான்...
அவரவர் உழைப்பும்
உயர்வாய் இருக்க வேண்டும்
அவரவர் வாழ்வியல் உயர.

*2023.06.09 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை

உன் பேச்சை
கேட்கக்... கேட்க...
இனித்தது.

உன் எழுத்தின் அழகை
ரசிக்க... ரசிக்க...
இதயம் இனித்தது.

எதையும் கேட்போர் மனதினில்
உன் எழுத்தோவியம்
விதையாய் வீழ்ந்து
விருட்சமாய் எழுந்தது.

உன்னை நேரில்
பார்க்கப்... பார்க்க...
உயிர் துளிர்த்தது.

பேனா முனையின் வீரியம்
எழுக்தோவியம்..... அதன் சிறப்பு
கலை உலகில் இமயம்
தொடலென அது...
விரிந்து செல்ல...

அதில்.... சிறு எறும்பாய்
நான்... ஊர்ந்து செல்கிறேன்
எழுதுலகில் எதையேனும்
எட்டிப் பிடிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை என்பது
பெரும் பாரமாகி விடுகிறது
அதன் பின்னே நாம்
ஓட... ஓட... அதற்கு
தேடல்கள் பல தேவையென்று.

எழுத்து... ஏணியாகி விடுகிறது
பல சமயம்...
எம் முன்னே நிற்போர்
எழுதுலகின் சிகரத்தில்
ஏறி இருப்பது கண்டு.

அதை.... எட்டிப் பிடிக்க
நான்... ஓடிக் கொண்டே
இருக்கிறேன் வெகு தூரம்...
என் இலக்கே எழுத்துலகின்
இமயம் தொடலென்று.

*2023.06.10 - பிறை எப். எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திரம்

மனித மனங்கள் விசித்திரமானது...
அதன் எண்ணக் கருவில்
வந்துதிக்கும் நினைவுகளில்
விகாரங்களும் அதிகம்.

ஆளாளுக்கு ஒரு விதமாய்
சிந்தனைகள் உதித்தெழ...
அதில்... நல்லதும் கெட்டதும்
வந்தே வீழ்கிறது...
சில சமயம் அது
அடுத்தவரை தாக்கியபடி.

தீய எண்ணங்களின் உதிப்பில்
வார்த்தைகள் படு சூடாய்
வெளிவர... – அதில்...
திணறியே திண்டாடுகிறது
மற்றவர் மனங்கள்.

மனிதன் என்றும் விசித்திரமானவன்
அவன் போக்குகள் என்றும்
விசித்திரமாகவே நகர்கிறது
சமூகத்தில்...
.இது தான் வாழ்வியலின்
நகர்வுகளாய் அமைந்தும் விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள் தான் நாமும்...
மற்றவரை தாக்காத படி
அடுத்தவர் அழாதபடி
எவரும் ஒதுங்காத படி
எதனையும செய்தல் நன்று.

அதுவே பல எழுச்சிகளின்
ஏணிப் படியாயும் – நல்
வாழ்வியலின் அரவணைப்பாயும்
மாறி எழும்.

இப்படியே சமூகத்தில்...
அவரவர் வாழ்வியல்
அழகழகாய் நகர்ந்தே செல்லட்டும்
தூய எண்ணங்கள் தூய்மையாய்
அனைத்தையும் மாற்றியபடி.

*2023.06.15 - பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

கடலுக்கு அலை அழகு
வானத்துக்கு நிலவழகு
மேகத்துக்கு மின்னல் அழகு
பூமிக்கு மலை அழகு
மரத்திற்கு தென்றல் அழகு
மனிதர்க்கு நல்ல நட்பழகு.

உயிருக்கு உணர்வழகு
கனவுக்கு கற்பனை அழகு
இருளுக்கு நட்சத்திரம் அழகு
நம் மனிதர்க்கு
நல் எண்ணங்கள் அழகு.

உலவும் உலகில்
உருகும் உயிர்தனை
உறவாடி அரவணைக்கும்
நல்லுறவுகள் என்றும் அழகு
நம்மையது உரமுடன் காக்க.

இப் பிரபஞ்சம் தனில்
எல்லாமே வெவ்வேறழகு
இதற்குள் தான் நாமும்
உறவுக்குள் உறவாய் இருந்து
நம் உயிரைப் பேணல்
நம் வாழ்விற்கழகு.

*2023.07.07 - பிறை எப். எம். (மகளிர மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரும் நொடிகள்

குளிர்கிறது மனது...
சில பேச்சுக்கள்
இனிமையாய் இருக்கும் போது
அதில் குளிர்கிறது மனது.

இதமாய் இருக்கிறது இதயம்...
கேட்கும் ஒலி எல்லாம்
இனிமையாய் எம்மை
வருடும் போது – அதில்...
இதமாய் இருக்கிறது இதயம்.

உடலும் உயிரும்
மொத்தமாய் குளிர்கிறது
சில நொடி தனில்...

இளம் தென்றல் காற்றாய்
எல்லாமே எம்மை
வருடும் போது... – அனைத்தும்
மொத்தமாய் குளிர்கிறது

நகரும் நொடிகள் என்றும்
எவர்க்கும் மீள வருவதில்லை
இருக்கும் நொடிகளுக்குள் நாம்
இனிப்புற வாழ்வதே
எம்மவர் வாழ்வாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடம் வருடும் மனமும்
தில்லென்ற இதயமும்
திமிர் பிடித்த மூளையும்
ஒரு போதும் உடையாது.

நொடிகள் அதனை
நகர்த்திச் செல்லச்... செல்ல...
அது வாழ்வியலின்
வெற்றி இலக்கை
எட்டிப் பிடிப்பதால்.

இது அழகிய வாழ்வு...
அகத்தின் உள்ளெ உள்ள
அசிங்கத்தை அகற்றிய வாழ்வு
இப்படி வாழ்வதே எம்மவரின்
அழகிய வாழ்வியலாய்
மாறியே போகட்டும்...

நகரும் நொடிகளில்
எக்காலமும சிறக்க.

*2023.07.18 - பிறை எப். எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு

வீடு தேடிப் போனால்
மற்றவர் நம்மை
மதிக்காத போது
வந்தே போகிறது
நம்முள் வெட்கம்.

கூடவே எமக்குள்
அழுகையும் வந்து விடுகிறது...
அங்கே எமக்கு
மதிப்பில்லை என்று.

வீடு தேடி வருவோரை
வாவென்று அழைத்து
வரவேற்கும் பண்பு
பலருக்கு இருப்பதில்லை...
இது இழி செயல் என்பதும்
அவர்களுக்கு புரிவதுமில்லை.

தேவையற்ற உறவுகளை
வெட்டி விடல்
எவர்க்கும் அழகு தான்
அதற்காய்... தேவையான
உறவுகளை உதறி விடல்
மாபெரும் தப்பாகி விடுகிறது
சில சமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் நமக்கு– தானாய்த்
தருவது மதிப்பு– அதை
நாம் கேட்டு வாங்கினால்
அது எமக்கு இழிவாகிறது.

எது எப்படி இருந்த போதும்...
மனிதனை மனிதன் மதித்தல்
என்பது...நல்ல பண்பாகிறது
அதுவே என்றும் எம்மை
அழகாய் வாழ வைக்கும்.

இதை புரிந்து கொள்ளாத வரை
நமதான வாழ்வியலில் – பலதும்
பாதாளம் நோக்கியே நகரும்

*2023.07.14 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையரை வாழ்த்துவோம்

தந்தையில்லா இல்லம்
தலையில்லா முண்டம் போல
தள்ளாடிப் போகிறது
தரணி மீதினில்.

நமக்கு... உயிர் கொடுத்து
உயிர் காக்கும்
உண்மையன்பு கொண்ட
நம் உயிரான தந்தையரை
நாம் போற்றியே மகிழ்வோம்.

ஆதியும் அந்தமுமான
வாழ்வு தனில்.... பெற்றோரின்
வாழ்வே நம்மில் ஆணி வேராகி
ஆல விருட்சமாய்
ஆள்கிறது நம்மை.

நம் குடும்பச் சுமை தாங்கியும்
நமதான அனைத்துமான – நம்
தந்தையரை நாம் தினந்தோறும்
மதித்தே நடப்போம்.

ஆணினம் என்றும் அழகியதே!...
ஆளுமைச் சின்னமும்
அன்பின் பிறப்பிடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைப்பின் உச்சமும்
அறிவில் சிறந்ததுமான
நம் தந்தையரை நாமென்றும்
வாழ்த்தியே மகிழ்வோம்.

உழைப்பே உலகில் உயர்வென்று
ஓடி... ஓடி... உழைத்தெம்மை
வாழ வைத்த நம் தந்தையரை
நாம் நீடூழி வாழ வேண்டுமென
வாழ்த்தியே மகிழ்வோம்.

மண்ணறை சென்ற நம்
தந்தையரும் மறு உலகில்
ஈடேற்றம் பெற – நம்மைப்
படைத்த அல்லாஹ்விடம்
நாம் ... இரு கரம்
ஏந்தியே மகிழ்வோம்.

*20223.07.20 - பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவத்துறை

மருத்துவ மனையில்
காலடி எடுத்து வைத்த
உடனே! கழன்று விடுகிறது...
நம்முடற் பாகங்கள்
நம்மை உலுக்கியபடி.

ரத்தமும் சதையும்
என்பும் உள்ள உடம்பில்
வகையில்லா நோய் நொடிகளை
சுமந்த படி பலருமிங்கே...

மத வேறுபாடு கடந்து
பாலின வேறுபாடு கடந்து
வயது வேறுபாடு கடந்து
வந்தே குவிகிறார்கள்
தம்மை குணப்படுத்த.

மருத்துவத் துறை உலகில்
மிகச்சிறந்ததாய் மாறுகிறது
மருத்துவர்களும் தாதியர்களும்
சிற்றூழியர்களும் இதறகுள்ளே
உயிரைக் கொடுத்து
ஓடி... ஓடி... வேலை செய்ய
அதில் பறந்தே போகிறது
அடுத்தவர் நோய் நொடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவத்துறை  மகா பெரியது
மருத்துவ மனையின் உள்ளே
மருந்து நெடிகள்
மூக்கைத் துளைக்க...

ஊசி முனைகள்
உயிரைக் காக்க போராட...
மருந்து மாயங்கள்
உயிரின் உள்ளே பாய்ந்து
உயிரைக் காப்பாற்ற போராட...

சத்தான உணவுகளை இங்கே
அவரவர் பரிமாறி உண்ட படி
அவர்களின் உயிரின்
உயிரை காக்க
மருத்துவர்கள் போராட வென்று...

மகா பெரிய மருத்துவத் துறை
தினம்... தினம்... போராடி விரட்டுகிறது
நோய் நொடிகளை– உயிரின்
உயிரைக் காப்பாற்றிய படி.

பரந்த பிரபஞ்சம் தனில்
விரிந்து கிடக்கும் மருத்துவத் துறை
விரைந்து விரைந்து தேடி
உயிர்களைக் காக்கிறது
வீரியம் மிக்க
மருந்து மாயம் தனில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் காக்கும் – நம்
உயிரிலும் மேலான
மருத்துவத் துறை சார்ந்த
மனிதர்களை நாமென்றும்
மதித்தே நடப்போம்.

மனிதம் புனிதமானது....
மனிதனை மனிதன் மதித்தல்
நல்ல மனிதருக்கு அழகாகிறது...
இதைப் புரிந்தால்
எங்கும் எழாது
ஏகப்பட்ட பிரச்சினைகள்
எல்லோரையும் மிரித்தபடி

*2023.07.21 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்ச்சிக் காதல்

காதில் இனிமையாய் ஒலிக்கிறது
காதல் கவிகள்...
உள்ளமும் உடலும் அதில்
உள்ளார்ந்தமாய் சிலிர்க்க.

காலம் பல கடந்த போதும்
காதல் பல கடந்த போதும்
கல்பினை பிசைந்த படி
கண்ணெதிரில் மலர்கிறது
கலையாக் காதல்.

நினைக்க... நினைக்க... நம்முள்...
தித்திப்பாய் மலர்வது காதல
பருவம் பல கடந்து
கண்ணுக்குள் கள்ளூண்டு
கவர்ச்சி கொள்வதும் காதல்.

கற்பனைத் தேரில்
கனவெல்லாம் நினைவாக
கண்ணுக்குள்
கனி நடனம் புரிவதும் காதல்.

சேர்வதும் பிரிவதும்
காதலின் பண்பான போதும்...
பிரிவின் வலி தனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் செத்து மடிந்த போதும்
பிரியா முடியா வலி தனில்
பலர்... துடியாய் துடித்த போதும்
பசுமையாய் உயிரினில் என்றும்
மலர்ந்தெழுவது காதல் ஒன்றே.

வாழ்தலென்ற ஒன்றை
வதை செய்யாது வாழ
காதலென்ற ஒன்றே
கருணைக்கண் திறக்கிறது
சேர்ந்தாலும் பிரிந்தாலும்
காதல் என்றும் சுகமானதென்று

கவர்ச்சிப் புயலாய் கண்கள் தாக்க
காந்தப் புலனாய் கண்கள் ஈர்க்க
கள்ளம் கபடம் புரியாமல்
எதற்குள்ளும் தடையின்றி
நுழைந்து கொள்வது
காதல் மட்டுமே.

அவமானங்களை சுமந்தபடி
கண்ணில்லாக காதலில்
கந்தலாகிப் போன
வையக வரலாறுகள்
பல.. இருந்த போதும்...

∴பீனிக்ஸ் பறவையாய்
அது எழுந்தே பறக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுத் திக்கும் – எல்லோரையும்
அதற்குள் ஈர்த்த படி.

என்ன தான் நாம்
எதிலும்.... தப்பி ஓடினாலும்
இதில் வீழ்ந்து எழும்பாத
மனிதரும் உலகில் இருந்ததுண்டா?...

அடித்துப் புலம்புகிறது அடிமனது
காதல் என்றும் வலிமையான தென்று

*2023.07.22 - பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிய நோய்

எத்தனையோ இம்சைகள்
இவ்வுலக வாழ்வியலில்...
இதிலொன்றாய் என்னுள்
சிக்கிக் கொள்கிறது
கேன்ஸர் எனும்
கொடிய வியாதி.

உடல் அவஸ்தை வேறு
தொழில் அவஸ்தை வேறு
பண முடை வேறு
சுதந்திரத் தடை வேறு.

சுகமில்லா உடல் வதை வேறு
சுகமான உணவுண்ணும் பழக்கம் வேறு
தேடித் தேடித் சேர்க்கும்
பழவகைகள் வேறு– இதர...
உணவுப் பொருட்கள் வேறு.

போக்கு வரத்துச் செலவு வேறு
மருந்துமாயம், ஊசி, சேலன்
மாற்றுடை என்று எல்லாமே
பன் மடங்கு செலவாகிக் கரைகிறது.

அடிக்கடி செக்– அப்பில்
அழிந்து விடுகிறது
ஆயிரங்கள் பல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவற்ற செலவொன்றால்
வாழ்வு நரகமாகிறது
கடன் தொல்லை தாங்காது.

எடு பிடி வேலைக்கென்று
எனக்கு வேலையாட்கள் வேறு
இவர்களின் எடுப்பும் நடப்பும்
இதற்குள் வேறு...
அதற்குள் ... அவர்களுக்கான
இதர செலவுகளும் வேறென்று...
தொட்டதெல்லாம் எனக்குள்
செலவாகிக் கரைகிறது

சிறிதோ!... பெரிதோ!...
எதுவாய் இருப்பினும்
நோய் என்ற ஒன்று
உடலை தொட்டு விட்டால்...
பயந்து... பயந்தே நாம்
வாழ்வில் பல தடவை
நொடிக்கு நொடி
செத்து விடுகிறோம்.

ரத்தமும் – சதையும் – என்பும்
கொண்ட இந்த உடம்பு தனில்...
இல்லாத நோய் எல்லாம்
வந்து வாட்டி வதைக்க...
மனமென்ற ஒன்றும் அதில்
செத்துத்தான் போகிறது
நொடிக்கு நொடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் அற்புதங்கள்
அகிலத்தில் அபாரம்
அது போல் அவனது
சோதனைகளும் பல விதம்.

இதை எல்லாம்
தெரிந்து கொள்ளாமல்
பல மனிதர் ஏனோ!...
ஆட்டம் போட்டு அலைகிறார்கள்
அகிலத்து மேனி தனில்

பஞ்சமா பாதகங்களும்
இந்த ஆரவாரங்களும்
அகிலத்தில் அடங்கி விட்டால்
குறைந்திடுமா நோய் நொடிகள்?...

அல்லாஹ்வை துதித்தவளாய்
விண்ணை நோக்கியே ஏந்துகிறேன்
இரு கரம் .. எல்லாவற்றுக்கும்
ஓர் விடியல் வர.

*2023.08.04 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பம்

செதுக்கி விடுகிறாய்
நீ!.... சிற்பங்களாய்...
உன் வார்த்தைகளை.

அதில் லயித்த படி...
ஏற்றம் பெறுகிறது
அடுத்தவர் மனங்கள்.

கவர்ச்சி என்ற ஒன்றை
கடைந் தெடுக்கிறது
உன் வார்த்தைகள்.

நிஜம் தழுவிய
உன்... கருவின் தழுவலில்
உயிரோட்டம் பிறந்து கலக்க...
உன் ஆணவமும் ஆளுமையும்
அதற்குள் தஞ்சமடைய...
அதில்.... லயித்தே போகிறது
அதை கேட்போர் மனங்கள்.

கருக் கலைப்பற்ற
உன் படைப்பின் முன்னே!...
சமூகக் கருக்கள்
அள்ளுண்டு கதறுகிறது...
பரவலாகி விட்டதே– எங்கும்
நம் ரகசியங்கள் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை என்ற ஒன்று
நிஜத்தில் பிறக்கிறது
மண்வாசனை சுமந்த
எழுத்தென்ற ஒன்றை நாம்...
சரியாய் பிரசவிக்கும் போது.

ஈற்றில்.... சிற்பிகளும் சிற்பங்களும்
எழுதுகோலின் முன்னே தஞ்சமடைகிறது
இலக்கிய வெற்றியே நல் வாழ்வாக.

*2023.08.15 - வெண்ணிலா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவம்

அறியாப் பருவமதில் எனக்கு
வாழ்க்கை பற்றி எதுவும்
புரியவில்லை.... அதனால் தான்
அப்போது எல்லாமே எனக்குள்
விளையாட்டாய் முடிந்தது.

நான்... வயதுக்கு வந்த பின்
வாழ்க்கை பற்றிய நினைவு
அடிக்கடி வந்தென்னை
அலை மோதிச் சென்றது...
அப்போதும் என்னால் எனக்கு
எதுவும் செய்ய முடியவில்லை.

காலம் கடந்து...
எனக்குள் கொஞ்சம்
நிதானம் பிறந்தது...
அப்போது சிலது வாழ்வில்
கைகூடி வந்தது – அதுவும்
எனக்குள் சரியாய் அமையவில்லை.

இப்படியே...! காலம் பல
கடக்க... என் வாழ்வும்
அதனுள் அமிழ்ந்து' போக
நானும் தான் அதனுள்
மொத்தமாய் அழிந்து போனேன்...
என் விதி அது வென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் பல கடந்து நான்
எல்லாமிழந்த ஒரு நிலையில்
எனக்குள் வந்தது ஞானம்...
அது எதற்கும் உதவாத படி
என்னை உதறித் தள்ள.

வாழ்வு... பருவத்தினதும் காலத்தினதும்
கட்டுப்பாட்டில் நின்று உலவுகிறது.

அது எம்மை சரியாய்
தட்டிக் கொடுக்காத போது
இப்படித்தான் எல்லாமே
எம்முள் தொலையும்.

நாம் எதிலும்
ஏமாந்த ஜென்மமாய்
உலகினில் உலவி அலற.

அது... விதியெனும் பெயரில்
நம்மை ஆட்டியும் படைக்க.

*2023.08.10 - பிறை எப்.எம். (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சோந்தி

யாரை... நம்புவதென்றே தெரியவில்லை...
நொடிக்கு நொடி மனிதரின் பண்புகள்
மாறிக் கொண்டே நகர்கிறது.

சுயநலம் மிக்க மனிதர்கள்
பலர்... தன் தேவைக்காய்
அடுத்தவரை பயன்படுத்தும்
பெரும் பச்சோந்திகள்.

வேஷதாரிகளை...
அடையாளம் காணத் தெரியாமல்
நாமும் அவர்களோடு நெருக்கமாய்
சிரித்துப் பேசி மகிழ...

அவர்களோ!...
வஞ்சம் கொண்டு நம் மீது
பகையை தூக்கி வீசுகிறார்கள்.

சம்பந்தம் இல்லா
சரக்கற்ற பகைகள் வேறு
இழிவான பேச்சுக்கள் வேறு
குற்றம் குறை காண்பது வேறு
அங்கும் .இங்குமாய் நம்மை
மூட்டி விடுவது வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்திக் கிழித்து கூறு போட்டு
நம்மை கொல்வது வேறு
நம்மிடம் இருப்பதை எல்லாம்
உருவி நம்மை...
ஓட விடுவது வேறென்று...
அடுத்தவர் நமக்குச் செய்யும்
கொடுமைகள் தான்
எத்தனை!... எத்தனை!!...

எந்தவொரு உறவும்
எட்டத்தில் இருப்பதே
எமக்குச் சிறப்பு.

மிக நெருக்கமாய் நாம்
மற்றவரோடு ஒட்டி உரச... .உரச...
பின்னாடி நாம் கண்ணீரில்
நீந்திக் கொள்கிறோம்
பல வலிகளோடு.

ஆஹ!... மனிதனை மனிதன்
மதித்தல் நன்று
உண்மைக்கு உண்மையாய்
நாம் வாழ்தலும் நன்று.

நாம் தொடர்ந்து ஏமாந்து
கண்ணீர் வடிப்பது
நம்மீதான பெரும் குற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுத் தேறலே
வாழ்வியலின் பண்பு
நம்விதியை யாராலும்
அழிக்க முடியாது.

அதன் வழியே
நாம் ஓடிக் கொண்டு
நாம் எதிலும் தெளிந்து வாழ்தலே
நமக் கென்றும் உயர்வு.

*2023.08.11 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமை

பலருக்கு பலதையும் பத்தையும்
திருடுவதில் அலாதிப் பிரியம்...
எதையும் மீள திருப்பிக்
கொடுக்கத் தேவையில்லை என்று.

சிலருக்கு எதையும் இரவலாய்
வேண்டியே பழக்கம்...
எதையும் திருப்பிக் கொடுக்கத்
தேவையில்லை என்று.

சூடு சொரணை பலருக்கு
இல்லாத போது... அவரவர்
தன்மானம் எங்கேயோ...
ஓடி ஒழிந்து கொள்ள...

கடனாய்... களவாய், இரவலாய்
பலதையும பலருக்கு கொடுத்தவர் பாடு
பெரும் பாடாய் போய் விடுகிறது
மற்றவர் உறவே நமக்கு
பெரும் நரகமென்று.

பலருக்கு தன்மானம் ரொம்பப்
பெரியதாய் இருக்க....மற்றவருக்கு
தொல்லையின்றி வாழ்தலே
பெரிதென்று இவர்கள் வாழ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை மெச்சியே
அடுத்தவர் வாழவென்று
அவரவர் வாழ்வுகள்
அகிலத்தில் அழகாய் நகர...

இதைத் தான்
பலரும் பல விதமாய்
உயர்வாய் போற்றுகின்றனர்.

மனிதன் புனிதன் என்றால்
மற்றறோருக்கு தொல்லையின்றி
வாழ்பவனே மிகப் பெரிய மனிதனென்று.

அடுத்தவரை அடுத்தவர்
துன்புறுத்தாத வரை
அகிலமென்றும் அழகாயிருக்கும்.

அதில் தான்
அனைவரது வாழ்வும்
அழகாய் தழைக்கும்.

இதை ஏன் பலர்
நினைக்க மறுக்கின்றனர்?

*2023.08.08 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணூறு கழித்தல்

புது மாப்பிள்ளைக்கும் பொண்ணுக்கும்
ஆயிரம் கண்ணூறு பட்டிருக்கு
அதனால் தான் அடிக்கடி
கொட்டாவி பறக்குதெண்டு
பாத்தும்மாக் கிழவி சொல்ல.

பாத்துக் கொண்டிருந்த எனக்கு
பகீரென்று போனது
மனதிற்குள் எல்லாமே.

என்னருமை மகளுக்கு
நேத்துத் தான் கலியாணமாச்சு...
கலியாண கெடுபிடியில் நான்
அங்கும் இங்குமாய்
ஓடி ஓடி அலஞ்சதில
புதுச் சோடிய சரியா கவனிக்கல.

பக்கத்து வீட்டு
பாத்தும்மாக் கிழவி
சொல்லப் போய்த் தான்
எனக்கு எல்லாமே
புரிஞ்சு போனது.

என்ர சீதேவி மகளார்
கலியாணத் தண்டு நல்ல
அழகாத்தான் இருந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர அருமை மருமகனும்
நல்ல அழகாத்தான் இருந்தார்.

சோடிப் பொருத்தம் சூப்பரென்று
வந்தாக்கள் போனாக்கள் எல்லாம்
சொல்லிட்டுத் தான் போனாங்க.

புதுக் கலியாண கெடு பிடியில்
கண்ணூறு கழிக்க நானும்
மறந்து தான் போனேன்.

அடியேய்.. புள்ள... சிவத்தம்மா
என்ர மகளை கொஞ்சம் கூப்பிட்டு
அவள்ள காலடி மண்ணைக்
கொஞ்சம் எடுத்துக்கு வா.

அப்பிடியே... மாப்பிள்ளைர
காலடி மண்ணையும் கொஞ்சம்
எடுத்துக்கு வாயென
நான் சொல்ல...

அவளும் அதை எடுக்கப் போக...
நானுன் உடனே அடுக்களைக்குப் போய்
மூனு மிளகு – மூனு உப்புக் கட்டி
மூனு காஞ்ச மிளகாய் எண்டு
எல்லாத்தையும் ஒரு தாளுக்க
எடுத்துக்கு வந்து... அதுக்குள்ள...
காலடி மண்ணையும் கொஞ்சம் போட்டு
அதனைச் சுருட்டி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுச் சோடிய நிக்க வச்சு
வலமிருந்து இடமாக
மேலிருந்து கீழாக உடலை
சுத்தோ சுத்தென்று சுத்தி
அதில காறித் துப்பச் சொல்லி
ஸலவாத்துச் சொல்லி அதை
தூக்கிப் போட்டேன்
பற்றிய குப்பைக்குள்.

ஒரு சொட்டு மணமும்
அதுக்க இருந்து வரல...
கண்ணூறும் போயாச்சு
கொட்டாவியும் போயாச்சு
புதுச் சோடியும் நிம்மதியாய்
படுத்துமாச்சு.

கண்ணூறு கெட்ட சாமான்
உடனே அதுக்கு
அலுவலப் பாக்காட்டி
நாற்பது நாள் கழிச்சா
காய் வெட்டித் தான்
கழிக்கனும் எண்டு சனங்கள்
சும்மாவா சொல்லுது?

கண்ணூறு காத்தனவெல்லாம்
நடைமுறை வாழ்க்கையில சகஜமென்று
நாலு பேரும் சொல்ல
நாமும் அதை தட்டிக் கழித்தல்
நமக்கு அழகல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எப்படியோ...!
என் மகளாரின் கண்ணூறு
கண் காணாமல் போயாச்சு
நானும் நிம்மதியாய்
கலியாணச் சவுப்பில்
கண்ணயரப் போயுமாச்சு.

காலங் காலமாய் தொடர்ந்து வரும்
சில ....சாஸ்திர சம்பிரதாயங்களை
நம்மால்... புறக்கணிக்க முடிவதில்லை...

அது... சரியா?... தப்பா?... என்ற
விவாதங்கள் ஒருபுறம் தொடர்ந்தாலும்
அதன் நிஜத்தில் மறைந்திருக்கும்
மர்மம் தான் என்ன?

விஞ்ஞானம் கூட பல சமயம்
தலையைப் பிய்த்ததுக் கொள்கிறது
இதற்கொரு விடை கிடைக்காமல்.

இத போன்ற பல
மர்மக் கேள்விகளுக்கு
பதில் சொல்லத் தெரியாமல்
நானும்... உறங்கிப் போனேன்
கடந்த போன கண்ணூறு
என்னைத் தாலாட்டிச் செல்ல.

*2023.08.25 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

கடலுக்கு அலை அழகு
வானத்துக்கு நீலம் அழகு
மேகத்துக்கு மின்னல் அழகு
மரத்திற்கு தென்றல் அழகு.

உருகும் உயிருக்குள்
ஊடுருவித் தாக்கும்
காதல் உணர்வலைகள்
என்றும் ஓரழகு.

உலவும் உலகில்
ஊறுகள் ஏதுமின்றி
உயிர்கள் உயிரோடு வாழ
நல்லபடி சிந்தித்தல்– நல்ல
மனிதர்க்கு என்றும் ஓரழகு.

அகிலத்து படைப்புக்கள் அனைத்திலும்
அல்லாஹ்வின் அற்புதங்கள் ஓரழகு
அதை ரசிக்கத் தெரிந்த மனிதருக்கு
அனைத்தும் பேரழகு.

எதையும் மாற்றி அமைத்து
வண்ணங்கள் பல காணும்
மனிதரின் அழகுணர்வுகள்
என்றும் ஓரழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகென்ற ஒன்று
என்றும் எதிலும் பேரழகு
அதை முறையாய்
ரசிக்கத் தெரிந்த மனிதர்க்கு.

*2023.08.26 - ஊவா எப். எம். (புன்னகை தேசம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெசவுத் தொழில்

காலங் காலமாய்
மனிதரின் வாழ்வியலில்
வருமான வழிகளென்று
பல தொழில்கள் உண்டு.

அதிலொரு தொழிலாய்...
ஆதி காலம் தொட்டு
இன்று வரை தொடர்கிறது
நெசவுத் தொழில்.

இருபத்தோராம் நூற்றாண்டில் நாம்...
காலடி எடுத்து வைத்தாலும்
கைத்தறி இன்று மின்தறியாகி
சறுக்கால் மின்சறுக்கால் என்று
எல்லாமே மின்சாரத்தில் மின்னி
பல ரகமாய்ப் பிரிந்தாலும்– இங்கே
பழைய முறைகள் எதுவும் – அடியோடு
மாறிப் போனதாய் தெரியவில்லை.

நூல் சுற்றும் சறுக்காலில்
நூல் சுற்றுவதும்
நிலையடியில் நூலைப் போட்டு
சிக்கெடுத்து
நூல் சுற்ற மெனக்கெடுவதும்
பா ஓடுவதும்
இன்று வரை மாறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு கைத்தறி
வீட்டுக்கொரு சறுக்கால்
நிலையடி என்று
நாள்தோறும் ஆங்காங்கே
அழகாய் ஒலிக்கிறது
சக்கடி புக்கடி – வாழ்க்கை
வண்டி அவரவர் ஓட்ட...

மனிதரின் வாழ்வு
அழகிய வாழ்வு
அதில்... ஆடை அலங்கரிப்பே
அற்புதமாய் நெளிகிறது.

பற்பல வண்ணக் கலர்களில்
பல வித டிசைன்களில்
பார்ப்பவர் கண்ணைக் கவரும்
விதமாய் அவை
அகிலத்தில் வலம் வர....

அதற்குள் தான்
நம் நெசவாளர்கள்
மூழ்கி முத்தெடுக்கிறார்கள்.

சங்கிலித் தொடராய் நகரும்
சமூக வாழ்வியலில்
தனி மனித வாழ்வு
மாபெரும் அத்தியாயம் – அதில்
அவரவர் கூலித் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை விட சிறப்பானது.
தம் உடல் வருத்தி சிறப்பாய்
நேர்த்தியாய் நெய்யும்
நெசவுத்தொழில் என்றும்
போற்றுதலுக்குரிய அம்சமே.

செய்யும் தொழில் என்றும்
எவருக்கும் உயர்வானதே!... – அதை
அவரவர் போற்றிப் பேணுதலே
அத் தொழிலின் சிறப்பாகும்.

உழைப்பாளிகள் ஒரு போதும்
உடலாலும் உள்ளத்தாலும்
ஊனமாகிப் போனதில்லை
அது தான்
அவரவர் சிந்தும்
வியர்வைத் துளியின் மகிமை.

இதை தெளிவுறப் புரிதலே
நம் எல்லோரதும் வாழ்வாகட்டும்.

*2023.09.01 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுகிறது

குளிர்கிறது மனது...
சில பேச்சுக்கள்
இனிமையாய் இருக்கும் போது
அதில் குளிர்கிறது மனது.

உடைகிறது உசிரு...
சிலர் நம்மை
சரியாய் மதிக்காத போது
சிதைகிறது மனது.

இதமாய் இருக்கிறது இதயம்...
கேட்கும் ஒலி எல்லாம்
இனிமையாய் எம்மை
வருடும் போது..... – அதில்
இதமாய் இருக்கிறது இதயம்.

உடல் – பொருள் – ஆவி
அனைத்தும் சில நொடிகளில்
மொத்தமாய் குளிர்கிறது...
இளம் தென்றல் காற்றாய்
எல்லாமே எம்மை
அரவணைக்கும் போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழக்கை என்றும் இனியது...

வாழ்வில் வந்து போகும்

கெட்டதை துாக்கி எறிந்து

நல்லதை தெரிந்தெடுத்து– நாம்...

வாழும் வாழ்க்கை

என்றும் இனியது.

நகரும் கணங்கள் என்றும்

மீள வருவதில்லை....

இருக்கும் நொடிகளுக்குள நாம்

இன்புற  வாழ்வதே

நல் வாழ்வாகட்டும்.

மீண்டும்... குளிர்கிறது மனது...

நல்லவற்றை எண்ணி எண்ணி

நாம் வாழும் வாழக்கை

என்றும் இனியதென்று...

மீண்டும் குளிர்கிறது உசிரு.

*2023.09.07 - பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையைப் போற்றுவோம்

பிரபஞ்சத்தை படைத்து– அதை
பரிபாலித்துக் கொண்டிருக்கும்
எல்லாம் வல்ல அல்லாஹ்!...
எல்லாவற்றுக்கும் சிறப்பானவன்.

அவன் படைப்பில் உதித்த
அகிலம் போற்றும் தந்தையரை
எத்தினத்திலும் நாம்
போற்றியே மகிழ்வது
எம்மவர் சிறப்பாகிறது.

ஆதியும் அந்தமுமான
வாழ்வு தனில்
ஆரம்பப் படைப்பபான
எம் தந்தையரை நாமென்றும்
நினைத்தே மகிழ்வோம்.

இவ்வுலகியல் வாழ்வு தனில்
எமக்கு உயிர் கொடுத்து
எம்மை வளர்த்து எடுத்ததில்
பாரிய பங்கும் பண்பும்
எம் தந்தையருக்கே உரித்தாகிறது.

சமூக வாழ்வியலில்
குடும்ப வாழ்வு சிறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையரின் உழைப்பதுவே
எப்போதும் உயர்வாய் இருக்கிறது.

குடும்பத்தின் சகல சுமைகளையும்
தன் முதுகில் சுமந்து
ஓடி... ஓடி... உழைக்கும்
நம் தந்தையரை
நாமென்றும் போற்றியே மகிழ்வோம்.

தன் குடும்பத்திற்காய்
தன் பிள்ளைகளுக்காய்
தன் சந்ததியின் வளர்ச்சிக்கென்று
காலத்தை தின்றுழைத்த
எம் தந்தையரை
நாமென்றும் மறவோம்.

கற்றலில் ஆரம்பித்து
குடும்ப வாழ்வியலில் நம்மை
இணைத்து விடுவதில்
பேரார்வம் கொண்டு...

எம்மை வளர்த்து ஆளாக்கிய
நம் தந்தையரை
நாமென்றும் மறவோம்.

பிள்ளைகளின் எதிர்காலம்
பெற்றோரின் கைகளியே
தங்கி விடுகிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயவளின் சகலதுமான
நம் தந்தையரை
நாமென்றும் மதித்தே நடப்போம்.

பருவங்கள் பல கடந்து
வாழ்வது... பல மட்டங்களை
தாண்டிய பின்
பெற்றோரை நாம் அநாதையாய்
அலைய விடுவதை தவிர்த்தலே
எத்தினத்திலும் பெரும் சிறப்பாகிறது.

தந்தையில்லாக் குடும்பம்
தலையில்லா முண்டம் போல்
எங்கும் தள்ளாடும்.

இதைப் புரிந்து
நாம் எல்லோரும்
நம் தந்தையரை
நன்றாக அரவணைத்து...
வாழ வைத்த படி– நாமும்
நல்ல படி வாழ்வோம்

*2023.09.09 - ஊவா எப். எம். (புன்னகை தேசம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு

எல்லாவற்றையும் செய்த விட்டு
எதையும் செய்யாத படி
எங்கும் எல்லோரும் நகர்கிறார்கள்.

எதிலும் ஏமாந்த படி
ஏக்கங்களை சுமந்த படி
ஏங்கியே தவிக்கிறது மனது...
ஏகப்பட்ட வலிகளில்
துவண்ட படி.

காலத்தை வென்று விட்ட
வாழ்வியலின் நகர்வுகள்
வெறும் சுடுகாடாய் மாற.

எதிலும் துவண்டிடும் மனம்
காலம் பல கடந்து
துள்ளியே எழுகிறது
மனவலிமை தனில்.

ஏதோ! வாழ்வென்ற...
ஒன்றை நாம்...
வாழ்ந்து முடிக்கும் வரை
நம்மை பலதும்
வதை செய்தே நகரும்...
இது வெல்லாம் வாழ்வியலின்
பழக்க தோஷமென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் வாழ்வியலில் நாம்
நனைந்தே செல்வோம்
எதிலும் நாம்...
முழுசாய் அழியாத படி
தில்லான மனமொன்றையும்
உயிரின் உள்ளே விதைத்த படி.

*2023.09.13 - பிறை எப். எம். (மனதோடு பிறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை வஸ்த்து

உலகியல் வாழ்வது
உலகத்தவருக்கு ஒரு தரமே!
உயிர்ப் பிறப்பில் உயர்ந்தது
மனிதப் பிறப்பினமே.

உலகத்து வாழ்வு தனில்
உண்மையாய் நம் வாழ்வு
உயர்ந்து நிற்க நாம்
ஊறின்றி வாழ்தலே சிறப்பு.

கருவறை வாசம் தனில்
கருணையுள்ள தாயவள்
ஆயிரமாயிரம் கற்பனைகளை
சுமந்த படியே கருவதனை
சுமந்து நிற்பாள்.

பிள்ளைக் கனியது
மண்ணில் வீழ்ந்த பின்பு
அள்ளி அரவணைத்து அதனை
சீராட்டிப் பாராட்டி வளர்த்திடுவாள்.

எந்தப் பிள்ளை அதுவும்
சீராய் வாழ்ந்து வளர்த்தலே
சிறப்பு எதற்கும் என்றவளும்
மற்றோரும் போற்றியே
அதனை வளர்த்திடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் போகப்... போக...
கற்றல், சமூக வாழ்வு, நட்பு
பட்டம், பதவி, தொழில், துறையென
அது வாழ்வியலில் விரிந்து செல்ல...

மனிதரது போக்கும் பல விதமாய்
பிரிந்தே செல்ல... அதற்குள் புகுந்து
சேரக்கூடாத சகவாசங்கள் சேர
சேதாரமாகிறது மனிதரது வாழ்வியல்.

சேரும் சகவாசங்கள்
சரியாய் இருந்து விட்டால்
பக்கத்தில் வராது எவருக்குள்ளும்
போதையின் வாடை.

பெரும் பட்டம் பதவிகளில் இருப்போர்
பேருக்கும் புகழுக்கும்
பெரும் குடி தனில்
மூழ்குவதை தவிர்த்தால் – அவரவர்
குடி மூழ்கிப் போகாது எதிலும்.

பார்க்கக் கூடாத படங்களில்
பாலின வேறுபாடு கடந்து
பலரும் மூழ்குவதை தவிர்த்தால்
பக்கத்தில் வராது போதை.

நல்ல படிப்பு–நற் சிந்தனை
நல்ல புத்தகங்களில் மூழ்குதல்
நல்ல விளையாட்டுக்களில் ஈடுபடலென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே எமக்குள் வந்துவிட்டால்
எம் பக்கத்தில் வராது போதை.

அத்து மீறிய பணப் புழக்கம்
ஆகாத வேலை தனில்
களமிறங்க வைக்கும் போது...

குரங்கு மனமதை
சுய கட்டுப் பாட்டில் வைத்தால்
பக்கத்தில் வராது போதை.

சுய சிந்தனை..... சுய அறிவு
சுய கட்டுப் பாடென்று
அனைத்தும் ..... தனி மனித
எண்ணத்தில் ஊறி இருத்தல்
போதை துறந்த வாழ்விற்கும்
மற்றனைத்திற்கும் வெகு அழகாகும்.

*2023.09.16 - ஊவா எப். எம். (புன்னகை தேசம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் காதல்

உன் பால் வடியும்
வதனம் பார்த்து
பட்டாம் பூச்சியாய்
பறக்கிறது மனது.

அதன் ஓரம் நான் நின்றதை
நினைத்துப் பார்க்கப்... பார்க்க...
உயிர் துளிர்க்கிறது இப்போது.

உன் மென் சிரிப்பில்
நான்... முழுசாய் தொலைந்த
நாட்கள் பல.

உன் பாஷை தனில்
செல்ல இம்சைகளாக
நான் செத்துப் போன
நொடிகளும் பல.

உன் ஆக்கத் திறன்களில்
நான் மூழ்கித் திளைத்த
நொடிகளும் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் அனைத்தும் என்னில்
முடிவிலியை தொட்டு நிற்க
நான் எதிலும் ஏமாந்த
வலிகள் தான் என்னை
அதிகமாய் வருத்த...

இப்போது இதனால் எதையும்
ரசிக்க கூட முடிவதில்லை
உன் எதிரில்.

பொழுதுகள் மட்டும் நகர்கிறது
உன் பார்வையை ருசித்தபடி
உள்ளத்தின உள்ளே – சிட்டுக்
குருவி சிட்டாய்ப் பறக்க.

என்னவனே!... உன்...
ஒற்றைப் பார்வை– ஒரு
போதும் மறக்காது என்னுள்ளே....
அது..... அத்தனை இம்சை
என்னை மென்ற படி.

*2023.09.23 - பிறை எப்.எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்பு

எதையும்...

எதிர்பார்த்து... எதிர்பார்த்து...

எதிர்பார்த்த விழிகளுக்குள்

அழுகை வந்தது.

ஒலி ஓசை

காற்றைக் கிழித்து காதை

எட்ட முடியாத போது

அழுகை வந்தது.

அடுத்தவர் எம்மை

ஏறி மிரித்து

உதறித் தள்ளும் கணங்களில்

அழுகை வந்தது

உள்ளம் உடைந்தழ

உயிரும் அதில் சிதைந்தழ

உடலும் தான் அதில்

உருக்குலைந்து போனது

உன்னைத் தேடித் தேடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் தேடியலையும்

உயிருக்குள்.....எப்போதும் நீ!...

தூவிச் செல்வாய்

உன் நினைவுகளை?...

அதிர்வலைகளின் ஊடே

தினம் தினம் என்னுயிர்

ஏமாந்து தவிக்கிறது

ஒரு பிரிவின் வலியை

சகிக்க முடியாமல்.

*2023.09.23 - பிறை எப்.எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுகிறது மரணம்

வாழ்க்கை...
வினோதமாகி விடுகிறது
வாழ்வியலில் நாம்
பலதையும் பார்த்து
சுவைக்கும் போது.

வாழ்வியல் பல
வண்ணங்கள் சுமந்து
நகர்ந்து வருகையில்
அதில் முழுசாய் நனைந்து
அனைத்தையும் அனுபவித்து மடிபவர்
ஒரு சிலரே.

சிறு வயதில்
துறு துறுவென இருந்து
இளம் வயதில்
தில்லாய் வளர்ந்து
பின்னர் செழிப்பாய் வாழ்ந்து...

குடும்ப வாழ்வில் இணைந்து
பிள்ளை குட்டி பெற்று
சிறப்பாய் வாழ்தல் என்பது
சிலருக்கு மட்டுமே கிடைத்த
பெரும் பாக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற பிள்ளை குட்டிகளை
முறையாய் வளர்த்துப் பராமரித்து
அதை வாழ வைத்துப் பார்த்த
பின்னர் பெற்றோர் மடிதலென்பது
பெரும் புண்ணியமே.

வாழ்வியலில் எல்லாவற்றையும்
நுகர்ந்து விட்டு...
மனிதர் மடிதல் என்பது
பெரும் வலியாக மாறிவிடுகிறது
அவரை அண்டியிருப்போருக்கு.

வாழும் போதினில் – பலர்
போற்ற வாழும் பாக்கியமும்
மறைந்த பின்பும் – பலர்
போற்ற வாழும் பாக்கியமும்
சிலருக்கு மட்டுமே சொந்தமாகிறது.

என்ன தான் நாம்
அழுது புரண்டாலும்
மரணம் என்ற ஒன்றை
யார் சுவைத்தாலும்
அது விதியாகி விடுகிறது.

இழப்பின் வலியை
சகிக்க முடியாமல்
நாம் அழும் போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் மலர்ந்தெழுகிறது
கடந்து போன நினைவுகள்.

அல்லாஹ்!...
பெரும் கொடை வள்ளல்
அவன் கேட்போருக்கு எதையும்
இல்லை என்று சொல்லாமல்
வாரி வழங்கும் கொடை வள்ளல்.

அவனிடமே நாம்
இருகரம் ஏந்துவோம்
பாவங்களை பொறுத்தருளும்
அல்லாஹ்!... மறுமை தனில்
ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும்
உயர்ந்த சுவனத்தில்
வபாத்தனவர்களுக்கு இடம்கொடுப்பானாக...
ஆமீன்..... அல்ஹம்துலில்லாஹ்!...

*2023.10.06 பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை கொடுமை

மறக்க நினைக்கும் நினைவுகளை
இரை மீட்டி மீட்டி எம்மை
கதற வைக்கிறது தனிமை.

வேதனையின் உச்சங்களும்
வலிகளின் சுவடுகளும்
வடுக்களின் வருடல்களுமென்று
எல்லாமே மொத்தமாய்
எம்மைக் கொல்கிறது
வருடும் நினைவுகளாக.

வாழ்க்கை அற்புதமானது
ஆனாலும் அது ஏனோ!...
பலருக்கு ஆபத்தாய்
அழுகையில் முடிகிறது.

காலங்கள் பல கடந்தாலும்
கசப்புக்கள் எதுவும்
நீங்கியதாய் தெரியவில்லை.

குட்டக் குட்டக் குனிவதும்
குனியக் குனியக் குட்டுவதுமாய்
வாழ்க்கை நகர்கிறது...........
வெட்கத்தின் வெறுப்புக்களாக
அவமானத்தின் உச்சங்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானம் தன்மானத்தின்
கழுத்தை நெரிக்கிறது
தன்மானம் தன்னம்பிக்கையின்
கழுத்தை நெரிக்கிறது.

முடிவில் உயிர்
உயிரற்ற உடம்பை
காவிச் செல்கிறது
வெறும் நடைப்பிணமாய்.

தனிமை கொடியது– அதை
நாம் நேரிய வழியில்
கொண்டு செல்லாத வரை.

ஆதலால்....... மனிதன் தினமும்
நிதானத்தில் இருப்பதே
நம் வாழ்வை செம்மைப்படுத்தும்.

வலிகளின் நினைவுகளை தூரமாய்
தூக்கி எறிவதும்...... தேவையற்ற
விடயங்களை புறம் தள்ளுவதுமே
எம்மை வாழ்வில் உயரச் செய்யும்
இதுதான் அழகிய வாழ்வியல்.

*2023.10.13 - பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழா கத்ர்

உலகிலும்
மனித வாழ்விலும் நடைபெறும்
நன்மை– தீமை அனைத்தும்
அல்லாஹ்வின் நாட்டப்படியே
நடக்கின்றன என நாம்
ஈமான் கொள்வதே
கழா கத்ர் ஆகும்.

அல்லாஹ் அனைத்தையும் – லவ்ஹுல்
மஹ்பூல் எனும் பதிவேட்டில்
பதித்து வைத்துள்ளான்.

எழுதுகோல்கள் என்றோ!...
உயர்த்தப்பட்டு விட்டன
ஏடுகளும் என்றோ!...
காய்ந்து விட்டன.

எனவே நாம் ...... விதியை நம்பி
மதியை இழக்காது வாழ்தலே
நம் வாழ்விற்கு சிறப்பு.

முன்னளப்பென்ற ஒன்றை
முன்வைத்து... வைத்து...
நம் வாழ்வை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழித்துக் கொள்ளல் – நமதான
அனைத்திற்கும் பேரிழப்பாகும்.

எது எப்படி இருந்த போதும்
எது வந்த போதும் நாம்
நம்மை தேற்றி வாழ்தலே
எல்லாவற்றுக்கும் உயர்வாகிறது.

மரணம் என்ற ஒன்றை
நாம் சுவைக்கும் முன்
எத்துயர் நம்மை சூழ்ந்த போதும்
அதில் எதிர் நீச்சல் போட்டு
வாழ்வில் ஜெயிப்பதே
எம்மவர் வாழ்வாகட்டும்...
அதுவே எமக்கு ஈருலகிலும்
வெற்றியைத் தரட்டும்.

*2023.10.27 பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் பலவிதம்

ஏகப்பட்ட சோகம்
அவனை மிதிக்க...
அதன் வலி தாங்காது
இதயம் துடிக்க...
அதன் பாரம் தாங்காது
மூளை இயங்க...
அதன் வேகம் தாங்காது
குருதியின் கூறுகள்
தாறு மாறாய்
துடிக்க வென்று...

ஏகப்பட்ட வலிகளையும்
சோகங்களையும் தாங்காது
உடற் கூறுகள் தடுமாற...
அதன் உக்கிரம் தாங்காமல்
சில சமயம் சிலருள்
வெடித்து விடுகிறது
குருதிக் கலன்கள்.

அழுத்திய துன்பம்
உயிரை வருத்த
உடைந்து நொறுங்கிய
குருதிக் கலன்களின் ஊடே
குருதி வழிய....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடிக்குள் எல்லாமே
உயிரில் மாற்றம் பெற...
துடிக்கப் பதைக்க
உடல் சிதைந்து விடுகிறது
மருந்து மாயத்தைத் தேடி.

எந்த மருந்து மாயமும்
எதற்கும் செல்லுபடி
அற்றதாய் மாற...
பார்த்துக் கொண்டிருக்கும் போதே
பறந்து போனது அவனுயிர்
மரணம் என்று.

இதயம் துடி துடிக்க...
எல்லோரும் கண்ணீர் விடவென்று
அந்த ஜனாஸா
மயானம் நோக்கிப் புறப்பட...
ஒப்பாரி ராகத்தில்
ஓய்ந்து போனது
நொடிக்குள் எல்லாமே.

மனிதப் பிறப்பு பல விதம்
அதில் மரணங்கள் பல விதம்
வாழ்ந்து முடித்தவரும்
வாழாது இருந்தவரும்
நேரம் காலம் பாராது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணித்துப் போதல்
இயற்கையின் விதியாக...

துன்பம் – துயரம் வந்து
அதன் சுமை தாங்காது
துவண்டு போனவரும்
வெந்து தான் மடிவர்
இயற்கை மரனமென்று.

மரணத்தை யாராலும்
ஒத்திப்போட முடிவதில்லை...
அதன் பிரிவு கொடிதாகி
அடுத்தவரை வருத்தும் போது
அது பெரும் சுவடாகி விடுகிறது.
அடி மனதினில்.

ஆதலால் மனிதன்...
வாழும் போதே எதனையும்
சாதித்து விட்டு மடிதல் சிறப்பு...
இரத்த உறவுகளும் மற்றோரும்
சுற்றத்தாரும் நம்மைப் படைத்தோனும்
இன்புற்று நமக்காய் பிரார்த்திக்க.

*2023.10.30 பிறை எப். எம். (ரிதம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்ந்தது மனது

மனது குளிர்ந்தது...
எத்தனை துயர்கள்
நம்மை சூழ்ந்த போதும்...

ஆறுதல் தேடி மனம்
அலைந்த போது
ஆறுதலாய் தழுவியது
உன் வார்த்தைகள்.

எத்தனை வலிகளையது
விரட்டி அடித்தது
துன்பம் துறந்த படி.

அற்ப சொற்ப
நொடிகள் தான்
இருந்தும் அது
இன்னல் துறந்த நொடிகளாய்
எம்மை அரவணைத்துச் செல்ல...
உன்னை நோக்கிப்
பாய்கிறது மனது.

அழகிய வார்த்தைகள்
அமிர்தமாகிறது... – அது...
ஆறுதல் விதைக்கிறது உயிரினில்
உன் அருகாமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எல்லாமே நடக்கிறது
அது ஒன்றே போதும்
எமக்குத் துணையாக.

அலையும் மனதிற்கும்
புகையும் மனதிற்கும்
ஒத்தடமாய் போகிறது– பலரின்
அறிவு பூர்வமான வார்த்தைகள்
பெரும் அமிர்தமாய்
அதுவே மனிதரின் நற்பண்பாக.

*2023.11.04 பிறை எப். எம். (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வேதம் அல்குர்ஆன்

அல்லாஹ்!..... இவ்வுலகை
ஆகுக (குன்) என்ற
சொல்லின் மூலம் படைத்தான்.

பின்னர் ஜின்களையும் மனிதர்களையும்
அவனை வணங்குவதற்காக படைத்தான்.

அல்லாஹ்!... மனிதனைப் படைத்தான்...
மக்களுக்கு நல் வழியைக் காண்பித்தான்
அவனது வழி காட்டல்கள்
ஸூஹூபுகள் என்றும்
வேதங்கள் என்றும் அழைக்கப்படுகிறது.

வேதங்கள் நான்கு என்றும்
இறுதி வேதம் புர்கான் என்றும்
இறுதி நபி
முஹம்மத் (ஸல்) அவர்கள் என்றும்
அல்லாஹ்!... கூறுகின்றான்.

கி.பி. 571 இல்
மாநபி அவர்கள் பிறந்தார்கள்
கி.பி. 610 ஆம் ஆண்டளவில்
லைலத்துல் கத்ர் இரவில்
ஹிராக் குகையில் முதல்
அல்குர்ஆன் வசனம் இறங்கியது.

றமழான் மாதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைலத்துல் கத்ர் இரவு
ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தாகும்
.அந்த இரவில் தான்
அரபு மொழியில் அல்குர்ஆன்
இறக்கி வைக்கப்பட்டது.

காத்தமுன் நபி அவர்களுக்கு
ஜிப்ரீல் (அலை) அவர்களே
அல்குர்ஆனை ஓதக் கற்றுக் கொடுத்தார்கள்.

அல்குர்ஆன் கலாமாகும்
அது பொது மறையாகும்
அல்குர்ஆனும் ஸுன்னாவும்
வஹியின் அடியாகத் தோன்றியவை.

இஸ்லாமிய அரசின் தலைவராக இருந்த
மாநபி அவர்கள் ஹிஜ்ரி 11 இல்
றபீஉல் அவ்வல் பிறை- 12 இல்
அன்னை ஆயிஸா (ரழி) அன்ஹா
அவர்களின் இல்லத்தில் வபாத்தானார்கள்.

கோமான் றசூல் அவர்களின்
மறைவின் பின்...... (தோல்களிலும்)
எலும்புகளிலும், வெண்கற்களிலும்
எழுதப்பட்டிருந்த அல்குர்ஆன் வசனங்கள்...

குதாபுல் வஹீ மூலம்- அல்குர்ஆனின்
முதல் மூலப்பிரதி முஸ்ஹப்
கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களின்
காலத்தில் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் 6666 வசனங்கள் உள்ளன
114 அத்தியாயங்கள் உள்ளன
அல்குர்ஆன் வசனங்கள்
30 ஜுஸுக்களாகவும்
7 மன்ஸில்களாகவும் பிரிக்கப்பட்டள்ளது.

அல்லாஹ்! அருளிய
இறுதி மார்க்கம் இஸ்லாம்
அல்குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சாகும்
இறுதிநாள் வரை அதனை
பாதுகாக்கும் பொறுப்பை
அல்லாஹ்!... ஏற்றுள்ளான்.

மாநபி அவர்களின் வாழ்வு
அல்குர்ஆனாகவே அமைந்திருந்ததாக
அன்னை ஆயிஸா (ரழி) அன்ஹா
அவர்கள் கூறியுள்ளார்கள்.

உலகில் தோன்றிய எல்லா நபிமார்களும்
நன்மையை ஏவினார்கள்
தீமையைத் தவிர்த்தார்கள்.

அல்லாஹ்! ..... மீதுள்ள நம்பிக்கை
அக வாழ்வையும் – புற வாழ்வையும் சரிசெய்கிறது...
மறுமையில் எமக்காக ஷபாஅத் செய்யும்
அல்குர்ஆனை நாம் தினமும் ஓதுவோம்
ஈருலகிலும் வெற்றியும் பெறுவோம்.
அல்ஹம்துலில்லாஹ்!...

***2023.11.10** பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றியெரியும் பலஸ்தீனம்

மெய் சிலிர்த்து கண்கள் குளமாகிறது
ஊடகத்தின் ஊடே
உலா வரும் காட்சி தனில்.

குருதி ஆற்றில் மிதந்து கிடக்கும்
ஜனாஸாக்களைப் பார்க்கப்... பார்க்க...
மெய் சிலிர்த்து கண்கள் குளமாகிறது.

எல்லா வளங்களும் அழிந்து
சுடுகாடாய் மாறிய
பலஸ்தீனைப் பார்த்த போது
பற்றியெரிந்தது மனது.

நவீன ரக ஆயுதங்கள்
பதம் பார்க்கிறது
மனித உடல்களை.

கொத்தும் குறையுமாய்
சிதறிச் சரியும்
உயிர்களும் பல.

அரையும் குறையுமாய்
தப்பிப் பிழைக்கும்
உயிர்களும் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளம், படுகுழி, காடு, கரையென
சிதறித் தெறிக்கிறது சதைப் பிண்டங்கள்
குருதி ஆற்றில் நீந்தியபடி.

மனிதம் வெறும் தூசாக
போர் தீவிரமாக
உடமைகள் அழிந்தொழிய
உயிர்கள் சோதாரமாகவென
அநீதமான அபகரிப்பிற்காய் காசாவில்
மன்றாடி மடிகிறது மனிதம்.

அல்லாஹ்வை முன் வைத்து
வெற்றி தோல்விகள் எதுவும் புரியாமல்
தன் உரிமைக்கான போராட்டங்களில்
உருக்குலையும் மனிதத்தை நினைத்தால்
அழுகை வருகிறது.

குண்டு மழையில்
குருதியாறு பெருகி
அதைக் காண்போர்
கண்ணீர் மழை பொழியவென்று
புனித பூமி பலஸ்தீனம்
பரிதாபத்தில் சிக்கித் துடிக்கிறது.

பற்றியெரியும் காசாவின்
துயரம் தணிய
அந்த புனித பூமியில்
மக்கள் நிம்மதியாய் வாழ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இயலாமையின் இறுதி ஏற்பாய்
எமது மனிதாபிமானத்தின் இறுதி ஏற்பாய்
எம்மால் முடியாததை முடித்து வைக்கும்
எல்லாம் வல்ல அல்லாஹ்விடம்
இருகரம் ஏந்துவோம்.

எமது துஆக்களை
அல்லாஹ்!... அங்கீகரிப்பானாக
துன்பத்தில் உழலும் மக்களுக்கு
விடுதலையும் கொடுப்பானாக
ஆமின்.

*2023.11.11* ஊவா எப். எம். (புன்னகை தேசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மனம்

சப்பென்று போகிறது
எமக்குள் எல்லாமே!...
தூங்கு மூஞ்சாய்
தம் முகங்களை
பலர் மாற்றும் போது
சப்பென்று போகிறது
எமக்குள் எல்லாமே!

விடியா முகங்களை
யாரும் ..... நேசிப்பதில்லை
சூது வாது கொண்ட
உள்ளத்தை யாரும்
விரும்புவதும் இல்லை.

பட்டென்று – சட்டென்று
உண்மையாய் உளறும் வார்த்தைகளே
எங்கும் ஜெயிக்கிறது
எல்லோரையும் அது
தழுவிய படி.

வெள்ளை மனம்
உள்ள குணம் – என்றும்
எங்கும் ஜெயிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறக்கம்

சில நிஜங்களை
ஜீரணிக்க முடியவில்லை...
திடீர் திடீரென வரும்
அதிர்வலைகளாய் எம்மை
தாக்கி அழிக்கும்
சில நிஜங்களை எம்மால்
ஜீரணிக்க முடியவில்லை.

நிச்சயிக்கப்பட்ட மரணம் எப்போதும்
நிச்சயம் வரும் எல்லோருக்கும்
இருந்தும் ... எதிர்பாரா
துர் மரணங்கள் பல
எம்மை அழவைத்தே செல்கிறது
ஆறாக் காயங்களாக
அவை சரித்திரம் படைத்த படி.

பெற்ற வயிறு பதறித் துடிக்க
உடன் பிறப்பு கதறியழ
உற்றம் சுற்றம்  ஒப்பாரி வைக்க
உற்ற நன்பர் அழுது வடிய
ஊரே கதி கலங்கி...
ஏதும் செய்ய முடியாமல்
ஏங்கித் தவிக்க வென்று.....

சில மரணங்கள் எம்மை
விபத்தென்ற ஒன்றில்
அழ வைத்தே செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறிலுஞ்சா – நூறிலுஞ்சா
என்றார்கள் எல்லோரும் – ஏதோ!...
வாய்ப் பேச்சுத் தானே என்று
சும்மா எதிலும் இருக்க முடியவில்லை.

கண்ணெதிரில் இளம் பிள்ளைகள்
கந்தலாய் கிழிந்து நொறுங்கி
குருதி ஆற்றில் குளித்து
மருந்து மாயத்தில்
சிக்கித் தவித்து
அதறப் பதற துடி துடித்து
மரணித்துப் போகும் துயர் தனை
ஜீரணிக்க முடியவில்லை.

யாருக்கு யார் ஆறுதல்
சொல்வதென்றே தெரியவில்லை
காலத்தின் நகர்வு
மின்னல் வேகத்தில் போகின்றது.

நவீனம் புகுந்து.... புகுந்து...
இள வட்டங்களின் கல்புதனை கந்தலாக்கி
கலியுக வாழ்வு தனில் மூழ்க வைத்து...

பயமென்ற ஒன்றை மறந்த படி
இளசுகள் எல்லாம்
படுதீவிரமாய் எதிலும்
ஈடுபட்டுச் செல்ல...
ஐயோ!... பாவமேயென...
மற்றோர் பதறித் துடிக்க
பறந்தே போகிறது
அவர்களின் உயிர் விபத்தென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் கொடியது...
இன்றைய காலம் மிகவும் கொடியது
எப்பிள்ளையையும் எவரும்
கண்கொத்திப் பாம்பாய் பார்த்திருந்து
காக்க வைக்கும் இக்காலம் கொடியதே.

மற்றோரை நம்பாமல்
தன்னைத்தானே பிள்ளைகள்
காத்துக் கொள்ளாத வரை
காலம் என்றும் கொடியதே.

பாதுகாவலர் பார்த்திருக்க
பறந்தோடும் இளசுகள் எல்லாம்
சுய புத்தியில் சிந்தித்து
நல்ல நண்பர்களோடு சேர்ந்து
உறவாடலே எத்தைகய அழிவுக்கும்
முற்றுப்புள்ளி ஆகிறது.

மரணம் நிச்சயிக்கப்பட்டது
மரணித்த மனிதர்க் கெல்லாம்
மகத்தான சிறந்த சுவனத்தை
அல்லாஹ்!... கொடுப்பானாக.

பாவங்களை பொறுத்துக் கொள்பவன்
நல்லருள் வழங்குபவன் அல்லாஹ்!
எல்லோருக்கும் நிம்மதியை வழங்குவானாக...
இன்னொரு சரித்திரத்தை
மற்றோர் படைக்காத படி
அல்லாஹ்!... அனைவரையும் பாதுகாப்பானாக.

*2023.11. 24 பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணம்

குத்திக் கிழித்து
குடைந்து தாக்கியது
உன்......வார்த்தை ரணங்கள்.

அதில்...... செத்துப் பிழைத்து
செயலிழந்து கிடந்தது
என் இதயம்.

எதையும் உணர மறந்து
ஊமையாய் இருந்தது
உணர்வு மண்டலம்.

நொடிக்கு நொடி
எதையும் மறந்து
தாறு மாறாய்
குழம்பியது மூளை.

ஒரு நிலையில் இல்லாது
அங்கும் இங்குமாய்
ஓடி... ஓடி... அலைந்தது மனம்
நிம்மதி தேடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை அவலமும்

நொடிக்குள் நகர்ந்து... நகர்ந்து...

பல வாரங்களை ஏப்பம் விட்டு

எனதான அனைத்தையும்

செயலிழக்கச் செய்தது

காரடிணமில்லா உன்

வெறுப்பின் மையங்களாக.

எதிலும்

கொடிதிலும் கொடிது

குடைந்து தாக்கும்

பிரிவின் வலி

என்று தான் தீரும்

நமக்குள் இந்த முரண்?

*2023.12. 25 பிறை எப்.எம் (ரிதம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு

சற்று மிரண்டு
சற்று விலகி
சுமாராய் நின்றது மனது...
சுடச் சுட வரும்
புத்தாண்டை நினைத்து.

அதிர்வுகளையும் அழிவுகளையும்
அழித்த படி- வன்மம் களைந்து
மனிதாபிமானம் சுமந்து வரட்டும்
பிறக்கும் புத்தாண்டு.

கடந்தவை மறந்து
நடப்பவை நினைத்து
நகரும் ஆண்டின்
சுவடுகள் களைந்து
புதிதாய் பிறக்கும் புத்தாண்டில்
புனிதங்கள் பலதும்
சேர்ந்தே வரட்டும்.

ஆக்கலும் அழித்தலும்
அறிவின் பலம்
அதை தேடலும் ஓடலும்
மனிதரின் பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ச்சிகளை எட்டிப் பிடிக்க

வீழ்ச்சிகளை எட்டி உதைக்க

முயற்சிகளைத் தொடர

மகிழ்ச்சிகளை அள்ளியெடுக்க

அழகாய் வரட்டும் புத்தாண்டு.

எதையும்...

அள்ளிக் கொடுக்கும் அல்லாஹ்!...

அருள் மழை பொழிய

அகிலத்தில் இனிதாய் வரட்டும்

இனிய புத்தாண்டு.

*2023.12.30 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

வெயில் மறைகிறது
இருள் சூழ்கிறது
மழை வருகிறது
தெப்பமாய் அனைத்தும்
மழை நீரில் நனைகிறது.

என் உள்ளத்தின் உள்ளே
உன் நினைவுகளும் சேர்ந்து
நனைந்தே போகிறது.

மழை விடுகிறது.
வெயில் வருகிறது
சூழல் மாற்றம் அடைகிறது
சுற்றுப்புறச் சூழல்
சுத்தமாய் தெரிகிறது.

என் மனமும்
உன் நினைவில்
மாசற்று மலர்கிறது.

விடாமல் பெய்யும்
மழை போல் மனதில்
விடாமல் பெய்கிறது
உன் நினைவுகள்
என்னை வாழ வைத்த படி.

*2024.01.04 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியம்

அப்பட்டமாய் பொய் சொல்வோர்
அமிர்தமாய் போசினார்கள்
அகழியாய் தோண்டினார்கள்.
சூழ்ச்சிகளை முதுகின் பின்னே.

உலோபிகள் கொடையின்
சிறப்பைப் பற்றி கொக்கரித்தார்கள்
குமட்டிக் கொண்டு வந்தது
வாந்தி..... வெறுப்பின் எச்சத்தில்.

பச்சை பச்சையாய்
கொச்சையாய் பேசுவோர்
ஒழுக்கத்தின் விழுமியங்களை
ஒவ்வொன்றாய்ச் சொல்கையில்
ஓவென்றழுதது மனது
இது பெரும் கொடுமை யென்று.

சுற்றிச் சுற்றிப் பார்த்தால் -- சமூகத்தில்...
சுவடுகள் நிறைந்தே கிடககிறது
கறைகள் பலதும் படிந்த படி

எதையும் தூக்கிப் பிடித்து
தூசு தட்ட முடியவில்லை
எல்லாமே அழுக்காகிக் கிடக்க
அதனுள் நாமும் அழுகிப் போக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரக் கூடாத இடத்தில்
சேர்ந்து விட்டால் – சாக்கடை கூட
நமக்கு சந்தனம் தான்...
சற்று சிந்திக்கத் தவறினால்
நம்மைச் சூழ சமாதி தான்...
நமக்குள் எல்லாமே.

பொறுத்துப் பார்த்து பட்டுத் தேறி
ஒதுங்கிய பின் நிதானம் வந்தது
எனக்கு... எல்லாம் இழந்த படி...

நெருங்கிப் பழகி விலகிப் பி(பு)ரிதல்
மாபெரும் மடமை நம் வரையில்
மனிதா நீ!... நம்பாதே எவரையும்
எவரும் நம்ப நட
எவரையும் நம்பி நடவாதே.

*2024.01.11 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளம்பல்

தவமாய் தவமிருந்து
நகர்கிறது பொழுதுகள்
ஒரு சொட்டு நிம்மதிக்காய்.

காத்திருப்பின் ஓரங்களில்
களைப்பும் – வெறுப்பும்
தானாய் வருகிறது...
எதிலும் ஒட்டிக் கொள்ள
துளியும் மனமின்றி.

எதிலும் வேகம் வந்து விட்டால்
எதுவும் தெரிவதில்லை கண்ணுக்கு
எதிராளியும் – கூட்டாளியும் கூட
எமக்கு எமனாக.

சில சமயம்
வார்த்தைக் கோலங்கள்
அலங்கோலமாகி வெளியேறுகிறது
உள்ளே புகையும்
வேதனையின் வெறுப்புக்களாக.

நிஜம் சுட்டுச்... சுட்டு...
நிழல் வருத்தி... வருத்தி...
நிஜமாய் கொல்கிறது
வலிகள் உயிரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொட்டுச் சொட்டாய் நாம்
சாவதும் பின் எழுவதுமாய்
அது நம்மை உயிர்ப்பிக்க.

மரணத்தை சுவைக்கும் முன்
எத்தனை மரணங்கள் தான்
நம்மை அண்மித்து அகல்கிறது
இது தான் வாழ்வென்று.

நாமும்...
வாழ்ந்து தான் பார்க்கிறோம்
எப்போது வாழ்வு முடியுமென்று
எதிலும் எதிர் நீச்சல் போட்ட படி
எதையும் எம்முள் புதைத்த படி.

*2024. 01. 13 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைப்பு

எத்தனை முறைதான்
நானும் யோசித்தும் விட்டேன்
எத்தனை முறை தான்
நானும் அழுதும் விட்டேன்
எப்படி எல்லாமோ
நான் அலைந்தும் பார்த்தேன்
எதுவும் எனக்குள்
சரியாய் அமையவில்லை.

ஒரு நொடி தவறி
ஒரு பிடி விலகி
ஒரு வழி மறந்து
ஒரு ஓரமாய்
என்னை நீ!...
ஒதுக்கித் தள்ளிய பின்
ஒப்பாரியாயனது என் சுயம்.

சில மனிதர்களை
மறக்க முடியவில்லை
சில சகுனிகளை
மறக்க முடியவில்லை
சில நிஜங்களை
தூக்கியெறிய முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமே எம்மோடு
பின்னிப் பிணையும் போது
எதை விட்டும் தூரமாய் நம்மால்
விலகி ஓடவும் முடியவில்லை.

சில உறவுகள்
எத்தனை முறை தான் கசந்தாலும்
அதன் பின்னேயே நாம்
ஓடியே போகிறோம்
நழுவும் வாழ்வியலில்
இதுவே நம் பிடிப்பென்று.

*2024.01.18 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்பு

நினைக்கிறேன்
எதையும் விட்டு விட
அது முடியவில்லை.

நினைக்கிறேன்
எதையும் தொடர்ந்திட...
அதுவும் என்னால் முடியவில்லை.

நினைக்கிறேன்
எதையும் கெட்டியாய் பிடித்திட
அதுவும் என்னால் முடியவில்லை

எதையும் தொடரவும் முடியாமல்
எதையும் விடவும் முடியாமல்
நான் படும் துயர்
யார் அறிவார்?

வாழ்வியல்...
பிடிப்பின்றிப் போகிறது
பல சமயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் எதிர்பார்ப்புக்கள்

பூச்சியங்களைத் தொட்டு

நம்மை சாகடிக்கும் போது

இத் துயரையும்

யார் தான் அறிவார்?

வார்த்தை ரணங்கள்

கொடிதிலும் கொடியது

கொலை வெறியில்

நம்மை அது

கொல்லும் போது.

*2024.01. 20 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டம்

ஓடி ஓடியே
ஓடாய்த் தேய்ந்து போனது
பலரது வாழ்வுகள்
ஒன்றுக்கும் ஒட்டாத படி.

தேடித் தேடியும் – பலதையும்
தேட முடியாத படி
தேய்ந்தே போனது
சிலரது காலங்கள்
எதற்கும் உதவாத படி.

ஒழித்து விளையாடி
ஓரவஞ்சனை காட்டும்
விதியின் முன்னே எல்லாமே
ஒழிந்து போனது
காலத்தை அழித்த படி.

சிறு பிள்ளைத் தனமாய்
சிலரது விளையாட்டுக்கள்
சிந்திக்க அவகாசங்கள் ஏதுமின்றி
சிதறிப் போகும் வாழ்வியலை
சீர் படுத்த முடியாத படி– அதுவும்
சிதறுண்டே போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய யோசித்தும்
எதுவும் புரியவில்லை
எதிர்கால வாழ்வியலில்.

நிகழ்கால வாழ்வது
நிர் மூலமாகாத படி
ஓடி... ஓடி...
ஒழிந்தே போகிறது
எல்லாமே எம்மை
ஆழம் பார்த்த படி.

எது எப்படி இருந்த போதும்
எல்லாமே நகர்கிறது– எம்முள்
எல்லாவற்றையும் திணித்த படி.

இதற்குள் நாமும்
இணைந்தே செல்கிறோம்
எம் வாழ்வதும்
ஏற்றம் காணும் படி

மனம் வலிதானால்
எதையும் தாங்கல் – உயிரினில்
வினைத்திறனாகி விடுகிறது.

இப்படி வாழ்தலே
எதற்கும் உயர்வாகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் எம்மை
ஏறி மிதிக்காத படி.

இதை உணர்ந்தால்
இழிந்து போகாது
எவரது வாழ்வும்.

வாழ்வின் முடிவில்...
உச்சங்கள் இல்லாவிட்டாலும்
எச்சங்களை சந்தித்தாலும்
அதில் அழியானது மனது
எதிலும் நாமும்
நிம்மதியாய் வாழ.

2024. 01. 22 பிறை எப். எம். (ரிதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலே!... போ!... போ!...

துளித் துளியாய் விழும்
மழை நீரில் நெளிகிறது.
உன் முகம்...
என்னை அழ வைத்த படி
அது மறைந்தும் போகிறது.

அடிக்கடி விட்டு விட்டு
பெய்கிறது மழை
என்னுள் விடாமல் பெய்கிறது
உன் நினைவு மழை
உன் உள்ளச் சிதைவின்
உண்மை புரியாமல்.

உன் உருச் சிதைவு
உள்ளச் சிதைவின்
வெளிப்பாடாக...
நானும் தான் அதில்
செத்தே போனேன்
காரணம் எதுவும் புரியாமல்.

எங்கேயோ இடித்தது
எந்தச் சதி விளையாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்து மடிந்தது எம்முறவு?

வலிக்க... வலிக்க...

வருந்தி... வருந்தி...

அழுகிறது மனம்.

உடைந்து நொறுங்கி

எதற்கும் உருப்படியாய்

எந்தவொரு

ஒத்தடமும் கிடைக்காமல்

நானும் தான் அதில்

தினம் செத்தே போகிறேன்.

*2024.02.01 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்

சுருட்டிய வறுமைக்குள்
சிரிக்கவில்லை சுதந்திரம்
எகிறிய விலையேற்றத்தில்
எழும்பவில்லை சுதந்திரம்.

விவசாயத்தை விழுங்கிய வெள்ளத்தில்
மலரவில்லை சுதந்திரம்
அடைக்க முடியாகக் கடனில்
தழைக்கவில்லை சுதந்திரம்.

தொழில்லா நிலை தனில்
செழிக்கவில்லை சுதந்திரம்
சுற்றியிருக்கும் சூழலில்
சும்மாவும் இல்லை சுதந்திரம்.

சுதந்திரப் பொழுதொன்றில்
சுதந்திரக் கொடி தூக்க
சும்மாவும் மனசும் வரவில்லை
உயிரின் உள்ளே அனைத்தும்
ஊனமாகிப் போய் விட்டதால்.

வீடும் – நாடும் நலமாயிருக்க
விரும்பிய படி நாம் வாழ
உழைப்பும் படிப்பும்
ஒழுக்கமும் நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர... உயர...
பறக்க வைக்கும்.

உள்ளச் சுதந்திரம்
உயிரைக் காவி – உலகில்...
உலவ விடும் போது
ஆண்மா சிரிக்கிறது.

உண்மைச் சுதந்திரம்
உள்ளத்தில் வேண்டும்
உலவும் உலகில் வாழ
உள் வீடு தழைக்க
உள்ளன்போடு நாம்
நம் தேசத்தை நேசிக்க.

உள்ளத்தில் சுதந்திரம்
எவர்க்கும் எப்போதும் வேண்டும்
எல்லாமே சிறக்க.

*2024.02.03* *பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்

சந்தோசத்தின் உச்ச எல்லைகள்
சடுதியாய் சரிகிறது
சில நொடிகளில்.

மூளை என்ற ஒன்றில்
முறையாய் பதிந்த
கசப்பான நினைவலைகள்...

சட்டென்று நினைவில் எழ...
சடுதியாய் சரிகிறது நமக்குள்
சந்தோசத்தின் உச்ச எல்லைகள்.

ஞாபகச் சுவடுகள்
மனதினில் விகாரமாய்
நெளிய... நெளிய... – அதில்...
சட்டென்று தொலைகிறது நிம்மதி.

உள்ளமும் உயிரும் அதில்
உருக்குலைய...
தொலைகிறது கணங்கள்
நம்மை எதிலும்
செயலிழக்கச் செய்தபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை முறைதான்
நாம் முயற்சி செய்தாலும்
சில நிஜங்களின் சுவடுகள்
நிழலாய் நம்மை
துரத்தியே கொல்கிறது.

விதி வரைந்த பாதை தனில்
வீழ்ந்தே மடியனும் நாமென்று
சுவடுகள் நிறைந்த நிகழ்வுகளே
வாழ்வியலின் உச்ச எல்லைகள்
என்றது சொல்லியும் நகர்கிறது.

எதிர் நீச்சலே நம் வாழ்வானால்
எதையும் தாங்கலே
நம் வாழ்வாக வேண்டும்
எதிலும் வெற்றி பெற.

*2023.11.03 பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளை நிலம்

வெளியே......
வெளிக்கிட்டுப் போனால்
ஆயிரம் புதினம்
அள்ளுண்டு கிடக்கிறது.
அகிலத்து வீதி தனில்.

அழகிய வாழ்வுகள் பலருக்கு
அமிர்தமாய் இருக்க...
அசிங்கப்பட்டுப் போன வாழ்வுகள்
சிலருக்கு ஆபத்தாய் இருக்க...

எதையும் சரியாய்
புரிந்து கொள்ள முடியாமல்
இன்னும் சிலர்
வாழ்ந்து கொள்ள...

சமூக வீதியில் வாழ்வுகள்
சாக்கடைகள் கடந்து
பள்ளம் படுகுழிகள் கடந்து
எதனுள்ளும் நுழைந்து
செல்கிறது மனிதம்...
எதிர் நீச்சல் போட்டு
வாழ்வில் எதையும் ஜெயிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியலில்

நிஜங்கள் சுடுகிறது

நிழல்கள் வலிக்கிறது

காலம் அழிகிறது

எதிர்பார்ப்புக்கள் அதிகரிக்கின்றது

எத்தனை துயர் வந்த போதும்

எதனையும் அனுபவித்துப் போக.

நிகழ்தகவாய் மாறும் வாழ்வினூடே

சந்தோசங்களைப் பெற்றுக் கொள்ள

தினமும்... போராடிக் களைக்கிறது மனிதம்.

ஏற்றத் தாழ்வுகள் சுமந்த

வாழ்வினூடே வாழ்வு

வழுக்கியே செல்கிறது

வீரியம் மிக்கதாய் எதையும்

பிடித்துக் கொள்ள முடியாத படி.

சும்மா பிறந்து

சுமாராய் வளர்ந்து

சுமைகள் பல சுமந்து

சுக்கு நூறாய் உடைந்த படி

அப்பளமாய் சரிகிறது மனது.

உடைந்து நொறுங்கிய

உள்ளத்தின் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சமயம் தன்னம்பிக்கை
பிடிப்பென்ற ஒன்றை
விதைத்த படி செல்ல...

அதை தாங்கிய படி
எழுந்து விடுகிறது உயிர்
தன்னை விளைநிலமாய்
மாற்றிய படி.

உள்ளே எதனைப் புதைத்தாலும்
அது அனைத்தையும்
விழுங்கி விடும் சக்தி
மனம் என்ற புதைகுழிக்கு
உண்டு என்பதை உணர்ந்தால்
எதற்குள்ளும் தடுமாறிப் போகாது
எம்மவர் வாழ்வு.

விதையாய் விழும் நல்லெண்ணங்கள்
விருட்சங்களாய் எழுந்து நின்று
நம்மை வாழ வைக்க
நாமும் முயற்சிப்போம்.

*2023. 12. 09 ஊவா எப். எம். ( புன்னகை தேசம்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் அன்பு

அகிலத்து வாழ்வு
அவனி மீதினில்
அவரவர்க்கு ஒரு தரமே!....

அதற்குள்... அனைவரது வாழ்வும்
அழகாய் அமைய
அவரவர்க்கு பெற்றோர்
அன்புள்ளோராய் இருத்தலே
அனைத்து வெற்றிக்கும்
ஆணிவேராகி விடுகிறது.

ஆதரவுக் கரங்கள் ஏதுமின்றி
அனாதையாய் பலரும்– அலையும்
அவலங்களை அப்பப்போ!
நாமும் கண்டு அழுது புரண்டு
கவலையும் கொள்கிறோம்.

இவ்வுலகின்... அழகிய வாழ்வியலில்
பிள்ளைச் செல்வம் பெரும்
செல்வமாய் மாறியே போகிறது...
அன்பும் பண்பும் கொண்ட
அரவணைக்கும் பெற்றோருக்கு.

பெற்றெடுத்த பிள்ளைகளை
நொந்து நூலாகாமல்
சிறப்பாய் வளர்த்து ஆளாக்கி
அவர்களை.....ஆளுமை மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதராக்கி சமூக வீதி தனில்
சிறந்த பிரஜைகளாய் மாற்றி விடலே
அன்புள்ள பெற்றோரின்
பெரும் கடமையாகிறது.

வீடென்ற ஒன்றே
பிள்ளைச் செல்வங்களின்
பல்கலைக்கழகமாய் மாறி விடுகிறது
அதனுள்ளே தான்
அனைத்தும் சிறப்பாய்
அமைந்தும் விரிகிறது.

இதற்குள் தான்...
பெற்றோரும் மற்றோரும்
ஒழுக்கத்தை விதைத்து
பிள்ளைகளை சரியாய் வளர்த்தல்
பெரும் செல்வமாகிறது.

இங்கே தான் தழைத்தெழுகிறது...
பிள்ளைச் செல்வங்களின்
சீரிய வாழ்வு– அது
பெற்றோரையும் மற்றோரையும்
அரவணைத்த படி.

*2023.07.27 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்

பக்கத்துக் கட்டிலில்
படுத்துக் கிடந்தவளை – நான்
கொஞ்சம் பக்கத்தில் போய்
எட்டிப் பார்த்ததில் – என்னில்
பற்றிக் கொன்றது கிருமி...
தொற்றும் வியாதி அவளுக்கென்று.

எதிலும் இன்று – நான்
கொஞ்சம் தள்ளியே நிற்கிறேன்...
நோய் – நொடி, மனக் கசப்பென்று
எல்லாவற்றையும் முழுசாய்
அனுபவித்த பின்.

தொற்றும் நோயும்
தொற்றா நோயும்
நம்மை மென்றே விடுகிறது
நமதான எல்லாவற்றையும்
நாம் தொலைத்த பின்.

மனதில்... திடமென்ற ஒன்றை
நாம் விதைக்கும் போதே
நம் வாழ்வியலில் நாம்
சற்றுப் பிழைத்துக் கொள்ளலாம்...
நம்மை நாம் காப்பாற்ற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற வாழ்வும்
நோயுள்ள வாழ்வும்
நிஜத்தினில் சகஜமென்று
சொல்லியே நகர்கிறது வாழ்வு..
எல்லாவற்றையும் நசுக்கிய படி
விதி வலிதாக.

*2023. 07. 15.* பிறை எப்.எம் (சந்தனக்காற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலிப்பு

சில சமயம்
எமக்குள் எல்லாமே
சப்பென்று போகிறது.

எம் எதிர்பார்ப்புக்கள்
வெறும் பூச்சியங்களாகி
எம் உயிரை வதைத்து
எம் உள்ளத்தை வாட்டி
வதங்க விடும் போது
சப்பென்று போகிறது
எமக்குள் எல்லாமே.

எதையும் விட முடியாமல்
விடாப் பிடியாய் எதையும்
நினைத்து... நினைத்து...
ரசிக்கும் போது
எமக்குள் எல்லாமே
சப்பென்று போகிறது.

தடம் பதிக்கும் வடுக்களும்
வலி வருடும் நினைவுகளும்
வாழ்க்கை பக்கங்களை
புரட்டிப் புரட்டியே அழிக்கும்
நம்மை எதிலும்
எழ முடியாத படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் போதும் கூட
எமக்குள் பலதும்
சலித்தே போகிறது – நாம்
எதிலும் நிலை கொள்ள
முடியாத படி

*2023. 12. 25.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவும் புரியவில்லை

ஒரு தரப் பார்வைக்குள்
ஓராயிரம் குத்தல் குடையல்
ஒரு தர சந்திப்பில்
ஓராயிரம் வலியும் வேதனையும்.

இருந்திருந்தாற் போல்
அபூர்வமாய் ஒரு சந்திப்பு
அதுவும் பேரிடியாய்
என்னைத் தாக்கி
என்னை கொன்றே போட்டது.

ஒட்டியுலர்ந்து ஓடாய் தேய்ந்து
உருமாறி நின்ற உயிரை
உற்றுப் பார்த்த போது
உள்ளே வலித்தது உயிரு
உயிரின் உருமாற்றம் புரியாமல்.

தாறுமாறாய் தடம் புரளும்
இசைக் கோலங்களில்
விஷமாய் நெளிகிறது வார்த்தைகள்
நெஞ்சாங் கூட்டை நொறுக்கிய படி
அது என்னை அழித்தும் செல்கிறது.

திடீர் சந்திப்பின் பின்
உனக்குள் எல்லாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயராகிப் போனது
நினைக்க... நினைக்க...

மர்மாய் உடைந்த உயிரும்
வெறுப்பாய் என்னை
தாக்கிய பார்வையும்
என்னை மென்றே விடுகிறது
நொடிக்கு நொடி.

எதிர்ப்பின் காரணம் தேடி
நான்... அலைந்த போதும் கூட
எனக்கு பதில் கிடைக்கவில்லை.

தொடராய் தொடர்கிறது வலிகள்
மர்மங்களின் முடிச்சை
அவிழ்க்க முடியாமல்.

மனிதன் மாயமாகிறான்
பல சமயம்...
ஏமாளியாய் எவரும்
எதிரில் சிக்கும் போது.

உள்ளே வலிக்கிறது
உடைப்பின் காரணங்கள்
எதுவும் புரியாமல்.

உயிரை வருடிய பார்வை
இன்று உயிரை மிரட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்மம் என்ன?...
உன் பேச்சும் கூட இன்று
ஒரு தினுசாய் மாறி
என்னை சிதைக்கிறது.

பயந்து பயந்தே தான்
நானும் பதுங்கிக் கொள்கிறேன்...
மனதின் ஓரத்தில்
உன் பிரிவில்...

வலித்துத் துடிக்கும் உயிரை
இறுக்கிப் பிடித்த படி.

ஓவென்ற ஒப்பாரி
உள்ளே ஒலிக்கிறது
ஒருவருக்கும் கேட்காமல்.

என்று தீரும் இக் கொடுமை?
எவர் தான் எனக்கு
புரிய வைப்பார் உன்
உடைவின் மர்மத்தை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவனம் செல்வோம்

உலகத்தைப் படைத்து
பிரபஞ்சத்தைப் படைத்து– நம்
புலன்களுக்குப் புலப்படாத
இன்னொரு உலகைப் படைத்த
அல்லாஹ்! அறிவில் சிறந்தவன்...

உயிருள்ளதையும் உயிரற்றதையும்
உலகில் படைத்து
அதை பரிபாலித்துக் கொண்டிருக்கும்
அல்லாஹ்! ஞானத்தில் சிறந்தவன்...

அருள்வேதம் அல்குர்ஆனை
அண்ணல் நபி அவர்களுக்கு
அருளிய அல்லாஹ்!
ஆலத்தில் உயர்ந்தவன்.

உலகியல் வாழ்வுதனை
உலகத்தவருக்கு புரியவைத்து
இம்மை– மறுமை வாழ்வுதனின் மகிமையை
மக்களுக்கு உணர வைத்த
எங்கள் மாநபி என்றும் சிறந்தவரே.

இஸ்லாமிய அரசின் தலைவராக இருந்த
அல்லாஹ்வின் நேசத்திற்குரிய
எங்கள் மாநபியின் ஸுன்னாவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றியே வாழ்வோம்
இறை வேதத்தை ஓதி
அதன் படியும் நடப்போம்
ஈருலகிலும் ஈடேற்றம் பெற.

ஞானத்தில் உயர்ந்த அல்லாஹ்!
எமக்கு அறிவை அதிகரிப்பானாக
ஒழுக்கத்தில் சிறக்க வைப்பானாக
உள்ளத்தில் ஈமானை தருவானாக
உயர்ந்த நல்வாழ்வு தனை
ஈருலகிலும் தருவானாக.

சமத்துவம் மிக்கவனே!
தாராள குணம் மிக்கவனே!
கருனை மிக்கவனே!
கொடை கொடுப்பவனே யா அல்லாஹ்!
உன் பாதையிலும் – மாநபியின்
வழிதனிலும் எங்களை சேர்த்திடு
நாங்கள் சுவனம் செல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்க முடியவில்லை

அழகாய் வருடினாய்
உயிரை வார்த்தைகளில்
அமிர்தமாய் இருந்தது...
அவை அனைத்தும் எனக்குள்.

அகால மரணம் போல்
அதுவும் சில காலம் தனில்
அறுந்தும் போனது...
என்னை அழ வைத்து
அழகு பார்த்த படி.

அடக்க முடியவில்லை
உன் அறுப்பின் வேதனைகளை
உடலும் உயிரும் வாட
உள்ளே புழுங்கிய படி
ஆராய்ந்து தேடுகிறேன
பிரிவின் வழிகளை.

காரணங்கள் மட்டும்
இதுவரை கிடைக்கவில்லை
கண்ணீர் மட்டுமே
என்னுள் இன்று மிச்சமாச்சு.

சொர்க்கமாய் நினைத்த தெல்லாம்
நரகமாய் மாறியின்று
என்னைக் கொல்கிறது
விதியெனும் பெயர் சொல்லி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகுனிகளின் விளையாட்டிலும்
சதிகளின் நடிப்பிலும்
சல்லடையானது நம்முறவு – இனி
என்று தான் மாறும்
நமக்குள் இத்துயர்?...

சும்மா இருக்காமல் நான்
உன்னுள் புகுந்து வெளியேறி
என்னை நானே அழித்துவிட்டேன்.

செத்துப் போன கணக்காய்
உயிர் மட்டும் ஊசலாடுகிறது
உன் பிரிவின் ரணங்களை
சுமந்த படி.

தொடர் வலிகளை
தாங்க முடியவில்லை
இதயம் பிசையப்... பிசைய...
வலிக்கிறது மனது– இனி
என்று தான் வரும்
எனக்கொரு விடியல்?...

எத்தனை அழிவுகள் நம்மை
சூழ்ந்த போதும்...
நம் தன்மானம் ஒரு போதும்
தலை தாழ்த்தியே நிற்காது
எதிலும்....... இதிலெங்கே
விடியப் போகிறது நம்முறவு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி

வருடத்தின் இறுதியில்
வைதலாகி விடுகிறது
மனங்கள்.

வந்து போன கடலலை
வாரிச் சென்றது அனைத்தையும்
வலித்து விட்டுச் சென்ற
சுவடுகள் மட்டும் ஏனோ!...
என்றோ!.. நடந்து முடிந்ததாய்
இன்று வரை நினைக்க முடியவில்லை.

நினைக்க... நினைக்க...
நெஞ்சு வெடிக்கும் படி
இதயம் பிசைகிறது
துயரின் தழும்புகள்.

இன்னுமொரு முறை
இன்னுமொரு அனர்த்தம்
எவர்க்கும் வேண்டாம்.

எல்லாவற்றையும் உடைத்து நொறுக்கும்
ஆழிப்பேரலையின் அவஸ்தை
அடங்கியே போகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்து மனிதர்
அதற்குள் அழகாய்
அடக்கியே வாசிக்கட்டும்.
அனைத்தையும்...
வன்மங்களை அழித்த படி
மனிதாபிமானத்தை சுமந்த படி
உள்ளத்தை சுத்திகரித்த படி...

சுவடே தெரியாமல்
அனர்த்தங்கள் மறைய
மனிதர் அனைத்தையும்
அடக்கியே வாசிக்கட்டும்...
அதில் அகிலம்
அழகாய் தழைக்க.

***2023. 12. 25.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வை ஒன்றே போதும்

என்னை நோக்கிப் பாய்ந்த
ஒரு கோடி விழிகளுக்குள் நான்
ஒதுங்கிக் கொண்டேன் இன்று...
வெறுப்பின் எச்சங்களை அது
என்னில் கொட்டி விட்டதால்.

உள்ளே வலித்த படி
உயிரும் அழ...
உண்மைக் காரணம் புரியாமல்
ஊமையாய் நானும் அழ...

ஒன்றும் புரியாமல்
மனது மட்டும்
சுற்றியே போகிறது
அவனை நோக்கி.

எதுவும் சொல்லவும் தோன்றாமல்
எதையும் செய்யவும் தோன்றாமல்
ஏமாந்த படி
நான் மட்டும் நிற்க...

எல்லாம் முடிந்த படி
அவன் மட்டும் ஒதுங்கினான்
எனை விட்டும் வெகு தொலைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவின் ரணங்களை
ஜீரணிக்க முடியவில்லை...
பார்வைக்குள் ஊடுருவிய
பாசத்தின் நினைவுகளை
தூக்கி வீசவும் முடியவில்லை.

உடைந்து நொறுங்கி
விலகியே செல்கிறது மனது...
ஒரு போதும் ஒட்டாது
நமக்குள் இந்த உறவென்று.

அன்று... பூவாய் பூத்தேன்...
நான் உன் நினைவில்...
இன்று சருகாய்க் கருகி...
வீழ்ந்தேன் நான்
உன் பிரிவில்.

என்னைத் தொட்டுச் சென்ற
உன் நினைவின் நிழல்
என்னுள் என்றும் மாறாத படி
ஊமையாய் நான் அழுத படி துடிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் மாயம்

என்றோ நாம்...
ஒதுக்கித் தள்ளிய எவரையும்
ஒரு போதும் நாம்
ஒன்றும் செய்யக் கூடாது.

மீண்டும் ... ஒட்டி உரசி
உறவாடக் கூடாது
அதைத் தாண்டி நாம்
ஈவு இரக்கம் கருணை என்று
நெருங்கிச் சென்றால்...

நம்மை அவர்கள்
வார்த்தை ஜாலங்களில்
அடித்தே கொல்வர்
எதிலும் நாம்
செத்து மடிய
கூனிக் குறுக.

வாய் பொத்தியே
நாமும் நகர்வோம்
வாழ்க்கை பயணத்தில்
வழிக் போக்கர்கள் இவர்களென்று
வம்பு – தும்பு எதுவும்
நம்மை அண்டாத படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நம்பும் மனிதர்
நம்மை நம்பாத வரை
நாசம் தான்
நமக்குள் எல்லாமே...

வார்த்தை ஜாலங்களில்
நாறிப்போய் எல்லாமே
நடுத் தெருவில் கிடக்க
நாமும் ஒப்பாரி வைக்க.

என்று தான் மாறும்
மனிதரின் மனதில் மாற்றங்கள்
மற்றோர் புண்படாது வாழ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கொரு பதில் கூறு

அன்று உன்விழிகளை
பார்த்துப் பார்த்து நான்
பழகிக் கொண்டேன் நட்பாக.

இடையில் எழுந்த
பெரிய இடைவெளியில்
பிரிவின் வழி(லி)யில் நாம்
பிரிந்தே சென்றோம்.

எதிர்பாரா  தருணமொன்றில்
என்னை நீ நோக்க
நானும் தான் அதிர்ந்தேன்
வெறுப்பின் உச்சங்களை
நீ அதில் கரைந்திருந்தாய்.

காரணம் புரியாமல் நானும்
கலங்கிய படி திகைத்தே போனேன்
காலச் சுழற்சி கல்லாக்கி விட்டது
உன் மனதை யென்று.

கனிவாய் நீ என்னை
மீண்டும் பார்ப்பாயா?
கனவாய் பல கதைகள்
கண்ணுக்குள் பேசியே செல்வாயா?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கண்மணி நீ!...

நினைத்தாலே இனிக்கும்

நினைவுகளை எனக்குள் தந்த

நிஜமும் நீ!...

உன் பிரிவின் ரணங்களை

ஜீரணிக்க முடியாமல்

புழுவாய்த் துடிக்கிறேன் நான்...

நீ எனக்கொரு பதில் கூறு?

அன்று நாம்...

தேனும் பாலுமாய் இருந்தோம்

இன்று நாம்

கீரியும் பாம்புமாய் மாற

என்னை நீ!...

கொத்தியே மெல்கிறாய்.

எப்படித் தான் நகரும்

எமக்குள் இந்தக் கசப்பு?

ரத்தமும் சதையுமாய் நம்முறவு

இனி எப்போது மாறும்?

தாமரை இலைத் தண்ணீராய்

உன் நினைவுகள் என்னை

வதை செய்தே கொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியல் தேடும்
விட்டிலாய் நானும்
உன் பின்னேயே சுழல்கிறேன்
எனக்கொரு பதில் கூறு.

உன் நினைவுகளின் வலிதனை
என்னால் தாங்க முடியவில்லை...
சுழற்சி முறையில் நான்
செத்தே மடிகிறேன்...
எனக்கொரு பதில் கூறு
நான் நிம்மதியாய் இருக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதட்டம்

அல்லாஹ்வின் நாட்டத்தில்
அகிலத்தில் காலநிலை மாற்றங்கள்
அடிக்கடி மாறிக் கொண்டே நகரும்
அனைத்து உயிரையும்
அது உள்வாங்க.

எம் பிரதேசத்தின் ஓரம் தனில்
அடிக்கடி காலநிலை மாறி... மாறி...
அனைவரயும் அதிர்சிக்குள் மாட்டி
ஆட்டிப் படைக்கிறது உயிரை
ஆறுதல்கள் ஏதுமின்றி.

தொடர் மழை உயிரில்
பயத்தை விதைக்கிறது...
விட்டு விட்டுப் பெய்யும்
மழை தனில்...
நுளம்பாரின் தொல்லைகள் பல.

தொடர் வெயிலின்
வெட்கையும், புழுக்கமும், வறட்சியும்
வாட்டி வதைக்கிறது அனைத்தையும்
மனிதரின் மனங்களில் அது
வெறுப்பைக் கக்கிய படி
நகர்ந்தும் செல்ல.

டிசம்பர் வந்து விட்டால்...
ஈரல் கருகி விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும்... என்றோ!...
வந்து போன சுனாமி
மிச்சம் வைத்த வடுக்களும்
வலிகளுமாய் அவை மாற.

காலநிலை மாற்றங்களை
விஞ்ஞானிகளின் எதிர்வு கூறல்கள்
ஊடகங்களில் உளறிக் கொட்டினால்...
உடைந்து போகிறது மனது
பயத்தின் ஓரத்தில்
உயிர் பதுங்கிய படி.

கடல் சுழிகள்
பெரும் காற்றாய் மாறுவதும்
தொடர் மழையாய் பொழிவதும்
பெரும் அமுக்கமாய் கடலில் கிடப்பதும்
பின்னது... இடம்பெயர்ந்து
நகர்வதும் என்று
மக்களின் மனங்களை அடிக்கடி
வதை செய்தே கொல்கிறது
காலநிலை மாற்றங்கள்.

இயற்கை கூட சில சமயம்
சீறிச் சீறித் தணிவதால்
மனிதரின் மனமும் அடிக்கடி
தளம்பியே தணிகிறது பயத்தில்.

சுமத்திராவில் அனர்த்தமென்றால்
சும்மா இருப்பதில்லை மனது
எங்கேனும் நில அதிர்வென்றால்
இங்கேயும் சிதைகிறது மனது பயத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ!... படைத்தவன் பார்த்திருக்க
வானுக்கும் பூமிக்கும் இடையில்
வீட்டைக் கட்டிக் கொண்டு
இந்த மனிதர் படும் பாடு
இங்கு பெரும் பாடாகிக் கிடக்கிறது.

பயந்து பயந்தே உயிரை
கையில் பிடித்துக் கொண்டு
அவரவர் செத்து மடிந்த படி
வாழ்க்கையை ஓட்ட.

காலம் மாறுகிறது
வாழ்வும் நகர்கிறது
காலத்தின் கோலங்களும்
அடிக்கடி மாறியே செல்கிறது
இதற்குள் தான் நாமும்
எதையும் தாண்டியே செல்வோம்.

நகரும்... காலத்தோடு காலமாய்
வாழ்வோடு வாழ்வாய் நாமும்
நகர்ந்தே செல்வோம்...
நம்முயிர் காக்க
நம் வாழ்வு ஜொலிக்க
நாம் எதிலும் ஜெயிக்க
ஈருலகிலும் நாம்
ஈடேற்றம் பெற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயை

தாயின் கருவறையில் நான்
தானாய் பிறந்தேன்
மாயை உலகில்
மாயையாய் அதுவும்
மாறியே போனது.

எப்படியோ நான்
எதை எதையோ சகித்து
எழிலாய் வளர்ந்தேன்
அதுவும் பெரும் மாயமே.

எத்தனையோ ஆசைகள்
என்னைச் சூழ்ந்த போதும்
எதையும் நிறைவேற்ற முடியாமல்
வறுமை எனும் கொடுந் தீயில்
நான் வீழ்ந்தெழுந்தேன்...
அதுவும் எனக்குள் பெரும் மாயையே.

காலம் நகர... நகர...
என் வாழ்வும் சுழலச்... சுழல...
நானும் வளர... வளர...
மாயை உலகில் மாறியே போனது
எனக்குள் எல்லாமே
வெறும் பூச்சியங்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஆசைகள் நிராசைகளாகி
என் எழுச்சிகள் வீழ்ச்சிகளாகி
என்னை நான் எதிலும்
ஒடுக்கியே சுருக்கினேன் – எல்லாம்
இழந்த படி மாயை உலகில்.

எத்தனை முறை தான்
நான் தோற்றாலும்
எத்தனை சூடுகளைத் தான்
நான் தாங்கினாலும்
என் வாழ்வைத் தொலைத்தாலும்
மாயை உலகில் எல்லாமே
என்னை வீழ்த்தியே நகர்கிறது
எதிலும் நான்...
மீண்டெழ முடியாத படி.

நிஜம் எல்லாம்
வாழ்வியலில் மாயமாகி...
அதில்... மறைந்தே போகிறது
நம் வாழ்வு ஏமாற்றமாக.

சமூகத்தில்...
நம்பிக்கை துரோகங்கள் மலிந்து
பழி தீர்க்கும் மனங்கள் அதிகரித்து
வெள்ளை மனங்கள் மர்மமாய்
கொள்ளை போகிறது
மாயை நிறைந்த உலகில்
மனிதரின் வேஷங்கள் பலதென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவும் வாழ்வு நகர்கிறது...
மண்ணறைக்குள் நாம் விழும் வரை
இப்படியே... எல்லாம் எம்மை
அழித்தே கொல்லும்
உலகம் பெரும் மாயை என்று.

நிஜத்தில்...
தடுக்கி வீழ்ந்து
எழுந்து நடந்து
ஓடிச் செல்வதே
வாழ்வாகிப் போகிறது
மர்மம் நிறைந்த மனிதருள்
மாயங்கள் பலதென்று.

மடிந்தாலும் மறையாது
மனதின் பாரம்...
மாயமாய் நாம்...
ஏமாந்த வலியில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்

உடைந்து நொறுங்கி
தூள் தூளாய்
சிதறிய பின்பும்...

மீண்டும்... மீண்டும்... புதிதாய்
ஒட்டிக் கொள்கிறது மனது...
வலிகள் மறந்து
வடுக்கள் நிறைந்து.

விதியெனச் சொல்லிச் சொல்லியே
பலதும் நகர்கிறது– சோகங்கள்
களைந்து மனது லேசாகி...
உயிர் தளர்ந்து.

காற்றிடை வெளியெங்கும்
காற்றாய் பறக்கிறது உயிர்
எல்லாம் மறந்த படி.

வாழ்க்கை...
படித்துப் படித்துச் சொல்கிறது
பலதின் அனுபவத்தில்
நம்பாதே எதையுமென்று.

பட்டுத் தேறிய பின்பும்
புதிது பதிதாய் துயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுத் திரும்புகிறது மனது...
வெள்ளை மனம் – எதிலும்
கொள்ளை போய்த் திரும்பும்
கொடிய வலியிலென்று.

செத்துப் பிழைக்கும் வாழ்வில்
நானும் செத்தே பிழைக்கிறேன்
எது வரினும்
அதனுள் மூழ்கியே எழுகிறேன்
வாழ்வினில் எல்லாமே சகஜமென்று.

இதில்...
எப்படித் தூரமாகும் எதுவும்?...
சமூக வாழ்வில் யாரும்
தனித்து வாழ்ந்து
தப்பிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை

மனசு எதிலும் ஒட்டவில்லை...
தனிமை என்னை வாட்ட
பலதும் தான் அதனுள்
வந்து வந்து போனது.

அடிக்கடி எழுந்தது
பெரு மூச்சுக்கள் பல...
ஏக்கமாய் பெரும் தாக்கமாய்
எனக்குள் அவை மாற.

நெஞ்சுக் குழிக்குள் வலித்தது...
இயலாமையின் எதிரொலியாய்
இழந்தவற்றின் எதிரொலியாய்
ஏமாற்றத்தின் எதிரொலியாய்
என்னுள் அவை மாற.

சாதிக்க நினைத்தவர் எதிலும்
சும்மா இருப்பதில் பலனில்லை.....
பொய்யிலும் புரட்டிலும் மிதந்த படியேனும்
பித்தலாட்டங்கள் பல புரிந்தேனும்
எதிலும் ஜெயித்திடுவார் தந்திரக்காரர்...
நம்மால் எதுவும் செய்ய முடியவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை நேர்மை ஒழுக்கமெல்லாம்
ஒடுக்கியே நம்மை ஆளும்
எதிலும் நாம் எழ முடியாத படி
மற்றவரைப் பார்த்துப்... பார்த்துப்...
நாம் புலம்பி அழுத படி
அவை மாற.

வலித்து வலித்துத் துடித்த படி
வருந்தியே நாமும்
வாழ்ந்து தான் பார்க்கிறோம்
நமக்குள் எதுவும் இன்னும்
கைகூடி வரவில்லை.

நம் வாழ்நாள் முடியும் வரை
நம் விதி இதுவென்று
தொடர்கிறது நம் அவலம்.

ஆசைகள் துறந்து
அனைத்தையும் இழந்து
அழிந்து தான் போய் விட்டோம்
நாம் அடிமட்ட வறுமையின்...
அகோரப் பிடியில் சிக்கி.

இதிலன்றோ விளைகிறது
எமக்குள் இத்தனை துயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீறல்

சொட்டுச்... சொட்டாய்...
நினைத்துப் பார்த்தேன் – நமக்குள்...
நடந்து முடிந்த அனைத்தையும்.

முதலில் முரண்டு பிடித்து
பின் இளகி – அதன் பின்
முழுசாய் நெருங்கி...

இடையில் ஏனோ உடைந்து
முழுசாய் எல்லாமே வலித்து
மீண்டும்... மீண்டும்... என்னை
வலிக்க வைத்த படி – அது
நகர்ந்தும் சென்றது – உன்னுறவு
என்னில் துளியும் இல்லையென்று.

வெட்கப்பட்டு – வேதனைப்பட்டு
நானும் வெகு தூரமாய்
அனைத்தையும் விட்டு
விலகிச் செல்ல முயன்றேன்
முடியவில்லை என்னால்...

வலி நீங்கும்
மருந்தாய் என்னுள்
பரவிக் கிடக்கிறது எழுத்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை தூக்கிப் பிடித்த படி நானும்
உன்னை நோக்கியே நகர்கிறேன்...
என் நாடி நரம்புகள் செத்த படி
என்னுயிர் துறந்த படி
எல்லாமே என்னுள் சப்தமின்றி
உடைந்து நொறுங்கிய படி.

சில வெறுப்புகளின் காரணங்களும்
பல புரிதல்களின் தேடல்களும்
சரியாய் இல்லாத வரை
கிழவி யென்ன குமரியென்ன
பெரும் துயரென்ற ஒன்று
எல்லோருக்கும் ஒன்று தான்.

அடிக்கடி மனம் – செத்துப்
பிழைத்த படியே நானும்
நெருங்கி... நெருங்கிச்... செல்கிறேன்
எழுத்தின் பின்னே... – அதில் தான்
எனது எல்லா நிம்மதியும்
நிறைந்த படி.

இதிலெங்கே விழப் போகிறது
கீறல்...... – விதியின்
கரங்களை உதைத்த படி
மூச்சுக் காற்றை நானும்
முழுசாய் உன்னில் சுவாசித்த படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதி

காலம் கரைகிறது...
காலத்தின் ஓரம் தனில்
வாழ்வும் நகர்கிறது
விடியல்களைத் தொலைத்த படி.

விதியெனும் பெயர் சொல்லி
முடிந்து தான் போய் விட்டது
வாழ்வியலில் அனைத்தும்... – ஏக்கமும்
தாக்கமும்– தோல்விகளும் – வலிகளும்
என்னைத் தாக்கி அழிக்க.

முடிந்தவரை நானும் எதிலும்
முயற்சிகளைச் செய்கிறேன்...
முடிவுகளை மட்டும் அல்லாஹ்!...
எடுத்துக் கொள்கிறான்– நானும்
எல்லாவற்றிலும் தோற்று நிற்க.

இதயம் கனக்கிறது – அழுகை வருகிறது
வலிகள் எழுகிறது – வடுக்கள் வருடப்பட
மரத்துத் தான் போகிறது மனது.

கண்ணீர்த் துளிக்கும் எனக்கும்
நெருக்கம் அதிகம் – என்னுள்
விம்மி வெடிக்கும்– துயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் அது ஒன்றே
துடைத்தே விடுகிறது.

சில நேரம் மனது எதிலும்
ஒய்ந்து விடுகிறது...
கண்ணிரும் கூட வற்றி விடுகிறது
கல்லாய் எல்லாமே மாறி
கடைசியில் வெறுப்பில் நிற்க

எதையும் நினைத்து பார்க்கிறேன்
நிம்மதி என்ன விலை?
அதை வாங்குவது எப்படி?
அதை எனக்குத் தருவது யார்?

இதை புலம்பிப் புலம்பியே
நகர்கிறது பொழுதுகள்
என்னை எதிலும்
செத்துப் பிழைக்கச் செய்த படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டும் மழை

கொட்டும் மழையின் நடுவில்
என்னெதிரில் நீ!...
சிரித்துக் கொண்டிருந்தாய்.

வெள்ளை வெளேர் எனும்
வெள்ளைச் சேட்டினுள்
நீ புகுந்து கொண்டு
உ(எ)ன் மனசெல்லாம்
நிறைந்த படி நீ சிரித்தாய்.

உன் மென் சிரிப்பில் நான்
திகைத்துப் போனேன்...
கள்ளம் கபடமில்லா
உன் புன்சிரிப்பில்
நான் சிதைந்தும் போனேன்...
அடை மழைக்குள்
அனைத்தும் தஞ்சமாக.

நீ என் மனக் கண்ணில்
என்னுள்ளே நிறைந்தாய்...
நிஜத்தில் நீ என்னை விட்டும்
வெகு தொலைவில் இருந்தாய்.

தூரத்துக் கனவாய்
உன் நினைவு என்னில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கிலிடும் நினைவாய்
உன் நெருக்கம் என்னில்...
நீ! ..... விலகி நிற்கும் துயரில்
நான் துடியாய்த் துடித்தேன்.

உன்னை நெருங்க
என்னால் முடியவில்லை...
உன் அகலத் திறந்த விழிகள்
என்னை அச்சுறுத்தி விடுவதால்...
உன் அலைபேசி என்னை
தடை செய்வதால்... உன்னை –
நெருங்க என்னால் முடியவில்லை.

எதையும் தூக்கியெறிய
முடியாத படி விதி வலிதாகி
என்னுள் திணிக்கிறது
உன் நினைவுகளை.

தப்பிக்க முடியாமல்
தடுமாறி வீழ்கிறேன் நான்
உன் நினைவுகளில்.

அற்ப ஆசை
அலாதியான சுகம்
அத்தனையும் கனவும் கற்பனையும்...
என் எழுத்தின் முன்னே
இவை அனைத்தும் தஞ்சமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதானம்

இயற்கையின்
காலநிலை மாற்றங்கள்
அப்பப்போ!...... அடிக்குடலை
கிடுகிடுக்க வைக்கிறது.

திடீரென மாறும்
இயற்கையின் சீற்றங்கள்
இல்லாத துயர்களை
எழுப்பியே விடுகிறது சமூகத்தில்.

பதட்டம் நிறைந்த காலநிலை
இருள் மண்டிய வளி மண்டலம்
சூரிய ஒளி தெரியா இருள்
கொட்டும் மழை – அகோர வெள்ளம்
இதனை ஊடறுக்கும் குளிர்காற்று
வளிமண்டல ஈரப்பதனில்
குளிர்ந்து போகும் உடல்.

இடை இடையே சீறி எழும்
கடலலைக்குள் சுற்றிச் சுழலும்
புயல் காற்று...
நீரின் பெருக்கம் தாங்காது
திறந்து விடப்படும் வான் கதவுகள்.

அந்நீர் ஊடறுத்துச் செல்லும்
ஊர்களும் உயிர்களும் உடமைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசௌகரியத்தில் சிக்கிக் கொள்ளவென....
தொடர்கிறது அவலங்கள்.

இன்றைய நகர்வுகளில்...
நாள் தோறும் மாறி வரும்
காலநிலை மாற்றங்களின் கலப்புக்களோடு
கலந்து செல்கிறான் மனிதன்
எது வந்தாலும் போனாலும்
எதையும் தாங்குவோம் நாமென்று.

வெள்ள அனர்த்தத்தின் நடுவில்
துயர்கள் மறந்த படி
என் மனத் திரையில்
உன்னை நினைத்துப் பார்த்தேன்.
எத்தனை ரம்மியமானது உன் நினைவு.

நிகழ்கால அனர்த்தத்தின் நடுவில் நீ!
நின்றே கொல்கிறாய் என்னை நீ!...

உன் மென் சிரிப்பில்
நான்... செத்தே போகிறேன்
விதியின் விளையாட்டில்
உன் நெருக்கம்
எனக்கு என்றும் அந்நியமே.

மழையென்ன வெயிலென்ன
புயலென்ன அழிவென்ன
எது வந்த போதும்
காதல் நினைவுகள்
என்றும் பசுமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்கம்

வெட்கம் வருகிறது...
கேட்கக் கூடாத எதையும்
கேட்கும் போது
எவரும் இல்லை எனும் போது.

எடுத்த கோளுக்கு எவரும்
பதில் தராத போது
வெட்கம் வருகிறது.

கொத்துக் கொத்தாய்
அழை பேசியில் அடுத்தவரோடு
அழைந்து பேசிய போது
அலுப்பும் சலிப்பும் வந்தது.

அறுத்தது அனைத்தையும்
அடுத்தவர் கதைகள் எனும் போது
கூடவே வெட்கமும் வந்தது.

போட்டியிட்டுப் பலதிலும்
தோற்றுப் போய் – நின்ற
கணங்களில் வெட்கம் வந்தது.

மனச்சாட்சியை தின்ற படி
மனிதர் வாழும் வாழ்வை
நினைத்த போது
வெட்கம் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறாத படி யெல்லாம் ஏறி
கடனை மீளக் கேட்ட போது
வெட்கம் வந்தது – எதுவும்
மீள வராத போதும் கூட
வெட்கம் வந்தது.

வெட்கம் என்ற ஒன்று
மனிதரை சூழும் போது
எல்லாமே பின்னடைவை
நோக்கியே பயணிக்கிறது.

தேவையான வெட்கம் – தேவை
எவர்க்கும் வாழ்வில் உயர
தேவையற்ற வெட்கத்தை
தூக்கி வீசினாலும் நாம்
உயர்ந்தே செல்வோம் வாழ்வில்

உள்ளத்தை தாக்கிக் குடையும்
வெட்கத்தை தொலைத்த படியும்
தேவையான வெட்கத்தை
சுமந்த படியும் நாம் வாழ்வோம்
நம் வாழ்வில் உயர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயானம்

உயிரின் உயிரை
உள் வாங்கிக் கொள்ளும்
உயர்பீடம் மயானம்.

மரம் – செடி – கொடி
புற்– பூண்டெல்லாம்
புண்ணாகிப் பொன்னாகி
மண்ணாகிப் போகிறது.
இம் மண்ணின் மீதினில்

மயானத்தின் விழிகளில்
அகோரக் கண்ணீர்
அதன் விழிகளைத் துடைக்க
விரைந்தவர் யாருமில்லை.

தன்னுள் புதைக்கப் பட்ட பல
உயிர்களின் ஒப்பாரி ராகங்களை
கேட்பதற்கும் இங்கு யாருமில்லை.

அவனி மீதினில் பலர்...
ஆறிலுஞ்சா– நூறிலுஞ்சா
என்றார்கள்.... ஆனாலுமிங்கே
அரிய வகை மரணங்கள் பல
அலாதியாய் ஓலமிட்டழுகிறது.

பலருக்கு இயற்கை மரணம்
சிலருக்கு துர் மரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிலருக்கோ!... வன்மத்தில்
வீழ்ந்தழுத கொடூர மரணம்.

பலர் மன உளைச்சலில் மரணம்
சிலர் சல்லாப வாழ்வினில் ' மரணம்
இன்னும் பலரோ!.... மற்றவரை
ஏமாற்றிப் பிழைத்து மரணம்
இன்னும் சிலரோ!...
முழு வாழ்வும் ஏமாந்தே மரணம்.

இப்படி வகையில்லா மரணங்கள்
மரண பீடத்தில் புலம்பியழ...
இங்கு சாதனை மனிதர் பலர்
இறந்த பின்பும்
ஈருலகும் போற்ற வாழ...

இந்த மயானம் மட்டும்
மௌனாய் புலம்பி அழுகிறது...
இந்த மண்ணறைக்குள் கூட
ஆவிகளின் அட்டகாசங்கள்
அடங்கவில்லை என்று.

எல்லோர் இறப்பும் ஆறடி
நிலத்திலென்று ஆன போதும்...
அவரவர் வாழ்வியலின் வண்ணங்கள்
வேறு வேறாய் திரிபடைந்து கிடக்க...
இதில் மரணம் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விதமாய் வருமா?
பாவம் மனிதர்...
அறிவிருந்தும் பலருக்கதை
பண்படுத்த தெரியவில்லை.

வாழ்வியலில் வாழ பல
வழியிருந்தும் முறையாய் அதில்
பயணிக்கவும் தெரியவில்லை.

ஒரு தர வாழ்வை முறையாய்
வாழத் தெரியாமல் வழிமாறிப்
பலர் ஏனோ!... அரையும் குறையுமாய்
இங்கே வந்து விடுகிறார்கள்.

ஆஹ!... மனிதனை மனிதன்
புரிதல் நன்று – மனதினில்
நல்லெண்ணங்களை விதைத்தலும் நன்று.

மண்ணறை கூட நல்லவற்றையே
தன்னுள் ஜீரணிக்க நினைக்கிறது...
இதைக் கூடப் பலரும்
நினைத்தலும் நன்று

வாழ்வு அழகியது
அதில் கோடி ரகஸியங்களை
சுமந்த படி... மனிதன் மட்டுமல்ல
மயானமும் தான் மௌனமாய் அழுகிறது.

***2019. 10. 19*** *- கல்முனை கலாசார மத்திய நிலையம் - முனைமகுடம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம்

மனம்!... அது...
எப்படித்தான் எதையும்
தாங்குகிறதோ எனக்கென்றால்
எதுவும் தெரியவில்லை.

ஆயிரம் முறை உடைந்து...
உடைந்து... நொறுங்கினாலும்
சீறிச் சினத்து சிங்காரித்து அது
பழைய நிலைக்கே வந்து விடுகிறது.

மனம் உடைந்து நொறுங்க...
நொறுங்க... வாழ்வது
வெறுத்துப் போய் விரக்தி
மட்டுமே மனதில் மண்டியிடுகிறது.

அங்கு! சோகமே விளைச்சலாகி
சிரிப்பு களைகளாகி
விரக்தி அறுவடையாகிறது.

எத்தனை அழகியது வாழ்வு...
அதில் போயிந்த விதி வந்து
விதைத்துச் செல்கிறது
வலிகள் பலதையும் – அதில்...
தப்பிக்க வழி தெரியாமல்
அல்லாடிப் போகிறது மனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உடைந்து நொறுங்கினால்
காலம் வீணாகி- வாழ்வு வீணாகி
சந்தோசம் பலியாகி- பருவங்கள் பாழாகி
மற்றெல்லாம் .... கன்னா பின்னாவாகி
நாசமாய் போகிறது நம்மில் அனைத்தும்.

எத்தனை கோட்டைகளைத் தான்
நாமும் தினம் கட்டினோம்
ஒழுங்காய் வாழலாமென்று...
அவை அத்தனையும் இடிந்து நொறுங்கி
தரை மட்டமாகி தரை தட்டியது தான்
பின்னாளில் மிச்சமாச்சு.

மனம் என்ன பெரும் மலையா?...
அதை உடைத்து நொறுக்கி
அதில் கல்லெடுத்து – புது
வீடு கட்டி அழகு பார்க்க.

அது வெறும்
பஞ்சுப் பொதியாச்சே!...
தொட்டாச் சுருங்கியும் ஆச்சே!...

அந்த மென் பஞ்சு மனதை
பிரிவென்ற தீ சுட்டுப் பொசுக்கி
நாசமாக்கிப் போட்டதை
நாம் யாரிடம் சொல்லியழ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமென்றால் நம்மைப் படைத்தவனுக்கு
ஏன் தான் இத்தனை– கொலை
வெறியென்று எனக்குத் தெரியவில்லையே...
ஒன்று மாறி ஒன்றென்று
பல துன்பத்தையும் ஒன்றாய்த் திணித்து
அதை நம் மீது போட்டு
வாட்டி வதைக்கிறான்
கொல்லன் பட்டறை இரும்பாட்டம்.

இந்த சோதனைக் களம்
முடிவுக்கு வருவதெப்போ?...
நம் மனமெல்லாம் அதில்
ஒழுங்காய் உருப்படுவதும் எப்போ?

வாழ்வு... வளமாய் வந்தால்
அது சொர்க்கம்
அது தவறிப் போனால்
அது பெரும் நரகம்
நம் விதி இதை உணருமா?

*2021. 07. 01*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய் விம்பம்

என் அழு குரலின்
விம்பம் நீ...
என்னை நீ
விட்டுப் பிரிந்த
நொடிகளின் பின்.

மறக்க முடியா
உலகில் நீ...
வாழ்ந்து கொண்டு...
என்னை தினம் இம்சிக்கிறாய்
உன் பிரிவின் வலியில்.

ஒரு உறவு உடைந்து போனால்
உடைந்தே விடும் உள்ளம்
உறுதி இழந்த இதயத்தை
உருப்படுத்த வழிவகைகள் ஏதுமின்றி.

காலம் தரும் தீர்ப்பு
விரக்தியாகி நம்மை அது
கொன்று மென்று விடும்
பிரிவு பெரும் கொடிதென்று.

இந்த உலகினில்
ஒரு தர வாழ்வியலில் நமக்கிந்த
ஒப்பாரி ராகம் தேவையா?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து போன கதைக்கெல்லாம்
முற்றுப் புள்ளி வைத்தால் தான்
நாம் முன்னேறிப் போவோம்
நம் வாழ்வியலில் ...... இதை
நம்மால் மறுக்க முடியுமா?

சிந்திக்கும் மனிதருக்கு எல்லாம்
சிறப்பாகி விடுகிறது வாழ்வு...
இதைப் பலரும் புரிதலே நன்று
இதன் போதே வாழ்வு ஜொலிக்கும்.

*2021. 07. 01*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றப்படும் பெண்மை

உலகியல் வாழ்வது
உலகத்தவருக்கு ஒரு தரமே!...
அதற்குள் பெண்மை
அழகுற வாழ்தலே
அனைத்திற்கும் சிறப்பு.

அன்னையின் கருவறையில்
அழகாய் அவதரித்து
அவனியில் வீழ்ந்த
பெண் சிசு
அதிகாரப் போர்வைக்குள்
அமிழ்ந்து அழிந்த தெல்லாம்
அது ஒரு காலம்.

அடுப்பங் கரையே
அவளுக்கு வாழ்வென்று
அடுத்தவர் தூற்றியதெல்லாம்
அது ஒரு காலம்.

இன்றோ!
எல்லாம் தெளி(ரி)ந்த பெண்மை
எங்கெல்லாமோ செல்கிறது
சாதனைகள் பலதும் படைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தகத்தில் பெண்மையை
பேதமை காட்டி வளர்த்து
அடிமைப்படுத்தி ஆண்டதெல்லாம்
அது ஒரு காலம.

இன்றோ!... சம உரிமை வந்து
ஆணும் பெண்ணும் எதிலும்
சரி நிகராகி..... சகலதிலும் பெண்மை
உரிமை கோரி சந்தோஷமாய்
வாழ்வதும் இந்தக் காலம்.

கண் கண்ட தெய்வமாய்
போற்றப்படும் கணவன்
பெண்ணை காலில் போட்டு மிரித்து
அடிமைப் படுத்தி ஆண்டதெல்லாம்
அது ஒரு காலம்.

இன்றோ!... பெண்மை
எதற்குள்ளும் சிக்கிச் சேதாரமின்றி
விலகி வாழ்வதே இக்காலம்.

பெண்மை என்றும் அழகியதே!...
அதை மனிதம் மதித்து
நடக்கும் வரை அது என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனியில் சிறந்தே விளங்கும்.
பெண்மையை மனிதம்
காலில் போட்டு மிதிக்கும் போது
அது எங்கும் சிதைந்தே போகும்.

உயிரின் உயிராய் உயிரை
மதிக்கும் போது உலகினில்
வீழ்ந்தழாது எதுவும் – இதில்...
பெண்மை என்ற ஒன்றும்
என்றும் சாதனைகள் பலதையும்
புரிந்தே நகரும்...

பென்மை என்றும்
எதிலும் ஜெயிக்கட்டும்!...
அகிலம் போற்ற.

அதுவே அவளின்
அழகிய வாழ்வாய்
மாறியும் போகட்டும்
அவளின் அகம் (நெ)மகிழ.

*2022. 02. 16 - மின்னல் வெளியீட்டகம்*

*(கலை முற்றம் இலக்கிய பெருவிழா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை

உன் விழிகளை மேய்ந்தவர்
உன் முதுகினில் குத்துவர்
உன் மொழிகளை மேய்ந்தவர்
உன்னை வார்த்தைகளால் கொல்வர்.

உன் முன்னே சிரிப்பவர்
உன் பின்னே தூற்றுபவர்.

ஆஹா!... மொத்தத்தில்...
மனிதா நீ அடுத்தரோடு
எச்சரிக்கையாய் இருத்தலே
எதற்கும் சிறப்பு.

எட்டத்தில் நீ
இருந்து கொண்டால் – எல்லாமே
உனக்கு சொர்க்கம் தான்.

பிறரை நெருங்கிப் போனால்
உன்னை நொறுக்கியே
மென்று விடுவர் பலரும்.

மனிதன் சுய நலத்தில்
சுருண்டு புரளும் ரகம்
இதை புரிந்து கொண்டால்
நமக்குள் வராது ஏமாற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பிரிவுகளின் வலிகளில்
நாமும் பின்னாளில்
வருந்தத் தேவையில்லை.

உறவுகள் தேவை நமக்கு
நம்மை உரமுடன் காக்க
ஊறு தரும் உறவதை
உதறி விடுதலே
நம் வாழ்விற்கு அழகு.

நம்மனம் புனித மென்றால்
நம்மைச் சூழும் சகலதும்
அதில் தான் நாம்
நன்றாய் வாழலாம்...
இதைப் புரிதலே
நமதான வாழ்வாகட்டும்.

*2023. 05. 26.* *பிறை எப்.எம். (மகளிர் மட்டும்).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம்

காலம் கொடியது...
வலி தடவிய
நிஜத்தின் நிழல்களை அது
அடிக்கடி நினைவூட்டியே எம்மை
அதிர்வடைய வைக்கிறது.

அன்று... அடித்து உடைத்து
நொறுக்கி விட்ட உறவு அது.

இன்று... பூதாகரமாகி
என்னை இம்சிக்க வருகிறது
பழசுகளை தூசு தட்டி
நக்கல் நையாண்டி பண்ண.

அதில்... வலி தாங்காது
துடி துடித்து
செத்து விடுகிறது மனது.

வலி என்ற ஒன்று – அடிக்கடி
எம்மை வருட... வருட... – அதில்
செத்து விடுகிறோம் நாம்.

இதை ஏனோ!...
சில மனிதர்
உணர்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பார்வையில்
இப்படியே அனைத்தும்
அலைமோதி அழுகிறது
அடுத்தவர் அறியாமல்.

இவற்றுக் கெல்லாம்
தெளிவுகள் வருவதெப்போ?

*2022. 11. 17 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கு

வரவென்ற ஒன்று
வாடி வதங்கி
பல மாதங்களாச்சு.

செலவென்ற ஒன்று
நொடிக்கு நொடி
கூடிக்... கூடி...
அதுவும் பல வருஷங்களாச்சு.

வரவற்ற செலவொன்று
கூடக்... கூட...
வாழ்வாதாரப் போராட்டம்
வயிற்றைப் பிசைய...

அது... தினம்... தினம்...
அரையும் குறையுமாய்
நிரம்பியே போகிறது
ஆதரவுக் கரங்கள் ஏதுமின்றி.

வறுத் தெடுக்கும் வறுமைக்குள்
வதங்கி விடும் உயிரெல்லாம்
வாடித் தான் வீழ்கிறது அனைத்திலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால ஓட்டத்தில்
எல்லாம் சகஜமென்று
எல்லோராலும் இருந்திட முடியுமா?...

பதிலின்றி நகர்கிறது
காலத்தின் பதிவுகள்
கழுத்தை நெரிக்கும் சுவடுகளாக.

*2022. 11. 20 கடல் பறவைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழும் தேசம்

என் தேசத்தின் மீது
யாரோ!...
கல்லெறிந்து போனார்கள்.

என் தேசத்தின்
முதுகெலும்பை யாரோ!...
முறித்தும் போட்டார்கள்.

என் தேசத்தில்
எகிறும் விலையேற்றத்தில்
எகிறிக் குதித்து
மடிந்து விடுகிறது
மனித மனங்கள்.

இத்தனை அவலத்திலும்
என் தேசத்தின் – பதவி
நாற்காலிகள் பல
எதற்கும் தப்புத் தாளம் போட...

அதில்... நிரைகள்
பல கடந்து
பலதும் பயணிக்கிறது
பாதாளம் நோக்கி.

*2022. 11. 10 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசப்பு

தூக்கம் வரவில்லை...
எப்படித் தான்
புரண்டு புரண்டு தான் படுத்தாலும்
தூக்கம் வரவில்லை.

நெஞ்சாங் கூடு மட்டும்
அடிக்கடி...
விம்மி... விம்மி... தணிகிறது.

எல்லாமே பழசு தான்
பெருங் காயங்கள் தான்
வெறும் சுவடுகள் தான் – இருந்தும்...
அவற்றை நினைக்கும் போதெல்லாம்
வெடித்துச் சிதறுகிறது மனது.

எத்தனை ஜென்மம் போனாலும்
கடந்தது எதுவும்
மறப்பதாய் இல்லை.

கசப்பாகவே அது என்றும்
நிலைத்தே விடுகிறது
உயிரினில்.

*2022. 11. 19* *பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

எங்கேயோ எதையோ
எதிர்பார்த்துப்... பார்த்து...
அலுத்து விட்டது மனது.

இன்னும் எதை எதையோ
காத்திருந்து... காத்திருந்து...
கலங்கி விட்டது மனது

பொறுமையின் எல்லை தனை
காத்திருப்பு மென்று விட...
சலித்து விடுகிறது மனது.

எதிர்பார்ப்புக்கள் சுமக்கும்
ஏமாற்றங்கள் எம்மை
ஏறி மிதிக்கும் போது – அதில்
நொந்து விடுகிறோம் நாம்.

முற்றுப் பெறா அந்த...
முடிவுரைக்காய் மீண்டும்...
காத்துக் கிடக்கிறது மனது.

*2022. 12. 03 - பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுப்பு

சாவின் விளிம்பை
நெருங்கி விடுகிறது மனது...
வெறுப்புக்கள் தொடராய்
நம்மை சூழும் போது.

விதி மீது கோபம் வருகிறது...
நிம்மதி என்ற ஒன்றை அது
தராது விலகும் போது.

உறவுகளை நினைத்தால்
அருவருப்பாகி விடுகிறது மனம்...
ஏறி மிதிப்பதும் – இழுப்பதும் அறுப்பதுமாய்
அது இருப்பதைப் பார்க்க
அருவருப்பாகி விடுகிறது உறவுகள்.

உடன் பிறப்பும் சரியில்லை
உற்ற உறவும் சரியில்லை
உலவித் திரிவோரும் சரியில்லை
என்றே தான் அடிக்கடி
செத்து விடுகிறது மனம்.

ஒரு தர வாழ்விற்குள்
ஓராயிரம் இன்னல்...
அடிக்கடி செத்துப் பிழைப்பதில்
வெறுப்பாகி நிற்கிறது மனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிலும் தப்பி ஓட நினைத்து
எதிலும் தப்ப முடியாமல்
தடுமாறி விடுகிறது உயிர்.

இடம் – பொருள் – ஏவல் பிழைத்தால்
இப்படித்தான் எல்லாமே
பிழைத்துப் போகிறது பலரது வாழ்வில்
பூச்சியங்களைத் தொடர்ந்த வலிகளாக.

அழுகையின் அஸ்திவாரங்களை
ஆட்டுவித்த படுதோல்விகள்
வைராக்கியத்தின் கதவுகளை
உடைத் தெறிந்த வேதனைகளென்று...
எல்லாமே பலருள் படுதோல்வியாகி
வாழ்வு நரகமாகி நிற்கிறது
முடிவிலியைத் தொடரும் பூச்சியங்களாக.

*2022. 12. 24 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ்ச்சி

என்னைச் சுற்றிலும்
சூழ்ச்சிகள் சூழ்ந்திருக்கிறது...
அதன் அதிர்ச்சி வலைகளில்
நான்...... சிக்கிக் கொள்கிறேன்.

என்னைச் சுற்றிலும் – நயவஞ்சகக்
குழிகள் வெட்டப்பட்டிருக்கிறது– அதில்
வீழ்ந்திடா வண்ணம் நான்
என்னை காத்துக் கொள்கிறேன்.

விதி ... என்னை நோக்கி
விரைந்தே வருகிறது...
சூழ்ச்சிகளும் சதிகளும்
என்னைத் தீண்டா வண்ணம்
அது நகர்த்தி விடுகிறது
என்னை வெகு தொலைவு.

தன்வினை தன்னைத் தான்
சுடும் என்பதை பலரும் ஏன்
மறந்து போனார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கித்து நிற்கிறது
என்னுள் கேள்வி... – இதன்
விடைகள் தேடித் தேடியே
பல திக்கும் ஓடுகிறது மனது.

முடிவில்...
முடிவிலியின் முன்னே
முழங்காலிட்டு
மண்டியிடுகிறது மனது.

*2022.02.23 - பிறை எப்.எம். (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிப்பு

இரவில்
தூக்கமின்றி அலைகிறது மனம்...
என் கனவுலகம் பிரதேசத்தில் நீ!...
கதாநாயகனாய் உலவுவதால்.

என் சப்த நாடிகள் இப்போது
தாறு மாறாய் செயலிழந்து போகிறது...
அதனுள்ளே நீ புகுந்து இம்சிப்பதால்.

இப்போதெல்லாம் எதையும்
நின்று நிதானிக்க
என்னால் முடிவதில்லை.... – அதனுள்
எல்லாமே நீயாகி விட்டதால்.

என் உயிர் கூறின்
ஒவ்வொரு அசைவிலும்
நீ உட்கார்ந்து கொள்ள...
நான் நிதானமின்றி சுழல்கிறேன்...
இதில் தப்பிக்க வழி தெரியாமல்.

பேசா மொழிகள் கூட
பல சமயம் நம்மை இம்சிக்கிறது.
உன் பாஷை போல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மொழிகள் கூட
பல சமயம் புரிவதில்லை
உன் பார்வை போல்.

மௌனமாய் ஒரு மரண யுத்தத்தை
என்னுள் நிகழ்த்தி விட்டு – நீ!...
எங்கே தான் இருக்கிறாய்?

எதையும் யோசித்து யோசித்து
மழுங்கி விட்டது என்னறிவு.

கற்பனை கூட பல சமயம்
இனித்துப் போகிறது... என்னுள்...
உன் தவிப்புப் போல்.

இப்போதெல்லாம் எனக்குள்
நீ மட்டும் ஜொலிக்கிறாய்...
அடிக்கடி என்னை நீ!...
விழிப்பூட்டிக் கொள்வதால்.

*2022. 12. 31 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷம் போல் ஏறுகின்ற விலைவாசி

காலம்...
காலம் காலமாய் சுழல்கிறது
கண்ட தெல்லாம் அதனுள்
சுழன்று கொள்ள.

ஆதி காலம் தொடங்கி
இன்று வரை காலம்
காலம் காலமாய்– சுழன்று
கொண்டே தான் நகர்கிறது.

உயிர்களின் வாழ்வியல்
உணவில் தொடங்கி
உறையுள் வரை
எங்கெங்கோ விரிந்து செல்கிறது
அவரவர் வாழ்வியலை
அழகுறக் காக்க.

காலத்தின் கோலமதில்
கண்டதெல்லாம் – பதவி
நாற்காலிக்குள் புகுந்து கொள்ள...

தலைமைத்துவம் தலைகீழாய்
எங்கும் தடம் புரள...
என் தேசத்தின் நிலையின்று
பரிதாபமாய் போய் விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை விலை
குதிரை விலையென்று
அனைத்தும் மாறி விட

ஒரு பிடிச் சோற்றில் ஆரம்பித்து
அனைத்தும் என் தேசத்தில் இன்று
விஷம் போல் ஏறிய
விலையேற்றத்தில் நாசம் தான்.

அப்போ மாறும் – இப்போ மாறும்
விலையேற்ற மென்று... – எல்லோரும்
காலம் காலமாய் ஏமாற – அதுவும்
கடந்து போயாச்சு பல வருஷம்.

என் தேசத்தின் உயிர்களின்று
வாடி வதங்கி அரை உயிராய்
அலைமோதி அழுகிறது...
அடித்துப் பறித்து
எந்த வேலையும்
செய்யா முடியா தென்று.

ஒன்றில் ஆரம்பித்த விலையேற்றம்
உள்ளதனைத்தையும் சுருட்டித் தாக்க...

வறுமைக் கோட்டின் அதள பாதாளத்தில்
என் தேசத்தின் உயிர்களின்று
அழிந்து கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தது எதுவும்
மீளப் பெற்றதாய் இல்லை...
இருப்பது எதுவும்
எழுந்து மீள்வதாயும் இல்லை.

ஆளுக்கொரு விலையில்
ஆளுக்கொரு நிறுவையில்
ஆளாளுக்கொரு தயாரிப்பிலென்று
அனைத்துப் பொருட்களும் இங்கே
அலை மோதிக் கிடக்கிறது
அதீத விலையேற்றத்தில்.

பாவம்!...
என் தேசத்தின்  மக்கள்
விடியல் தேடித் தேடி
அழும் கோரமது
என்று தான் மாறும்?...

பதவி மாற்றங்கள் தனில்
சமூக எழுச்சி பெற்று
என் தேசத்து மக்களின்
வாழ்வியலை சீர்படுத்தும்
காலமது என்று வரும்?...

ஈற்றில்...
அனைத்தினதும் தீர்ப்பாளன்
அல்லாஹ்வின் அருள் வேண்டி
அழுது புரள்கிறது மனம் – எங்கும்
அழகாய்  வரட்டும் விடியலென்று.

*2023. 01. 08. - கல்முனை கலாச்சார மத்திய நிலையம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் வாழ்வு

மாதா – பிதா
குரு தெய்வம் எல்லாம்
நமக்குக் கற்றுத் தரும்
நல்ல விடயங்களை
நாம்... பின்பற்றும் போது
நம் வாழ்க்கைப் பாதைகள் மாறி
நம் வாழ்வென்றும் மலரும்.

கெட்ட சகவாசங்களை நாம்
ஒதுக்கித் தள்ளும் போது
நல்லவற்றை நாம்
தேடிக் கற்கும் போது
நம் வாழ்வென்றும் ஜெயிக்கும்.

உடலை வருத்தி
உயிரை வருத்தி
நம் வாழ்வை முறை கேடாய்
புதை குழிக்குள் தள்ளி விடும்
போதைப் பழக்கம் தனை நாம்
புறம் தள்ளும் போது
நம் வாழ்வென்றும் ஜெயிக்கும்.

தேடலே வாழ்வின் உச்சமாகிறது...
எதையும் தேடிக் கற்பதும்
எந்த நட்பையும் தெரிந்து சேர்வதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவற்றை புறம் தள்ளுவதும்
நம் வாழ்வியலில் வெற்றியாகிறது.

கல்லூரி வளாகம் தனில்
கற்கும் போதே நல்லவற்றை
நாம் கவனித்துக் கற்பதே
நம்மாயுள் வரை அது
நம்மை என்றும் காக்கும்.

சிகரம் தொட...
நாம்... சிரித்து வாழ
நம் சமூகத்தில் நாம்
நற்பெயர் பெற
நம் வாழ்வென்றும் ஜொலிக்க
நாம் தேடிக்கற்போம் நல்லவற்றை...
அதனுள் அனைத்தும் தஞ்சமடைய
நம் வாழ்வியலும் மலர.

*2023. 01. 17*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் நகர்வு

யாரோ! என்...
கையைக் கட்டி
காலைக் கட்டி
வாயைக் கட்டி
உடற் கூட்டை நெரித்து
உணர்வு மண்டலத்தை சிதைத்து
என்னை ஊமையாக்கியும் விட்டார்கள்.

எதையும்...
உடைத்தெறிய முடியாமல் நானும்
போராடிக் களைத்து- ஈற்றில்
ஒப்பாரி வைத்து- இயலாமையின்
உச்சத்தில் எல்லா முறையீடும்
அல்லாஹ்வின் பக்கம் சென்று
மன்றாடி அழுகிறது... – முடிவாய்
ஒரு வெற்றி தர வேண்டும்
என் வாழ்வியலில் என்று.

என் வாழ்வியலின் சிறைவாசம்
தொலையாத வரை எனக்கில்லை
விமோசனம் எதுவும் என்று
அழுகையின் ஊடே
அவலட்சணமாய் உளறுகிறது
ஒன்றும் செய்ய முடியாத
என் மனச் சாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை வகையான
போராட்டங்கள் நடாத்தியும்
இதுவரை எதுவும்
ஏற்றுக் கொள்ளப்படவில்லை
என்னைப் படைத்த இறைவனிடம்.

இதன் முடிவுகள் தெரியாமலேயே
தினம்... தினம்... செத்துப் பிழைத்து
போராடி நகர்கிறது
காலத்தின் நகர்வுகள்.

*2023. 07. 26. பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு முன்னும் பின்னும்

அகிலத்துத் தேசமெங்கும்
ஆட்சியின் முடிவிடங்கள்
அரசியல் தாகமென்று- பல
சரித்திரங்களும் புலம்ப...

நாமும் அதில் தான் தினம்
பத்தோடு பதினொன்றாய்
நனைந்து கொள்கிறோம்.

நம் நாட்டு நடப்பு
உலக நடப்பென்று- அரசியல்
களங்கள் தினம்... தினம்...
தேசம் கடந்து... கடந்து...
சூடு பிடித்து சுழன்று வர...

கட்சிக்கொரு வேட்பாளர்
மேடைக்கொரு போச்சாளரென்று
பதவி நாற்காலிக்காய்
பலரும் போட்டியிட...

காற்றில் பறக்கும்
வாக்குறுதிகள் வேறு...
கால இழுத்தடிப்பில்
கரை ஒதுங்கும்
வாக்குறுதிகள் வேறு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை மென்று விடும்
வாக்குறுதிகள் வேறென்று...

பலதும் பத்தும்
தேர்தல் களத்தில்
அங்கும் இங்குமாய்
பறந்தோடி அலைய...

மனிதருள்...
பலருக்கு அறிவு மட்டம்
சிலருக்கு பணம் குறி
இன்னும் சிலருக்கு சொல்புத்தி
இன்னும் பலருக்கு சுயபுத்தி.

இப்படி... விதம் விதமாய்
மனித மனங்கள்
அலை பாய...

கட்சித் தொண்டர்களுக்குள்
கட்சி மோதல்கள்
வாகன விபத்துக்கள்
வீணாய்ப் போன அடிதடிகள்
சொற் போரென்று ஏதேதோ!...
விரோதங்கள் குரோதங்கள் எல்லாம்
தேர்தலுக்கு முன்னும் பின்னும்
அலை பாய்ந்து செல்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு வங்கிளை
பெற்றுக் கொள்ள
பருவங்கள் பல சுமந்த
மனிதரெல்லாம் – வாக்குச்
சாவடிக்குள் பதுங்கி வர...

முறையாய்– அதுவும் சரியாய்
மிக வேகமாய்த் தான்
சூடு பிடித்துத் தணியும்
தேர்தல் களங்கள்...
நல்ல வேட்பாளரை
தெரிவு செய்ய.

எந்தத் தேசத்திற்கும்
அவசியம் தேவை நல்லாட்சி...
அதுவும் வன்மம் துறந்த...
மதவெறி களைந்த – இன
வெறியெனும் வஞ்சம் துறந்த
நல்ல தலைமையே அவசியம் தேவை.

மனிதன்... நிஜத்தில் புரள்பவன்
தன் பலம் தெரிந்தவன்
தன் வாக்குப் பலத்தின்
சுயம் தெரிந்து– தம் தேசம்
காப்பவனே சிறந்த மனிதன்.

சுய புத்திக்குள் சுழன்று வந்தால்
சும்மாவும் வையாது
நம்மை நம் வாக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி நாற்காலிக்குள் பலரும்
போட்டியிட்டு வெல்வதும் தோற்பதும்
சகஜமாய் இருந்த போதும்...

மனிதன் மட்டும் எதிலும்
ஏமாளியாய் இருப்பது
சகலதிற்கும் முடமை.

அரசியல் சாணக்கியத்தில் – தேர்தலுக்கு
முன்னென்ன பின்னென்ன – எதிலும்
எவரும் வெல்வதும் தோற்பதும்
மனிதனின் மதிப் பலனின் வீரியம்
இது யாருக்கு புரியும்?

*2019. 11. 12 வியூகம் ரீ.வி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய் அல்லது செத்து மடி

உயிர்ப் பிறப்பின் மகத்துவம்
உலகினில் யாருக்கும்
உயர்வாய்த் தெரிவதில்லை.

ஏதோ!... பிறந்தோம் வளர்ந்தோம்
வாழ்ந்தோம் என்றே தான்
பலரும் நினைக்கிறார்கள்.

வாழ்வு பலருக்கு சொர்க்கம்
சிலருக்கு நகரம் – இன்னும்
பலருக்கு கொடுந் தீ.

இவை எல்லாம்
விதியின் விரலிடுக்கில்
சிக்குப் பட்ட நிலை.

ஆனாலும் இங்கே!...
அவரவர் வாழ்வுகள்
அலைந்தே தான் நெளிகிறது
அவனி மீதினில்.

மூளை இருந்தும் – முட்டாளாய்ப்
பலர் முடமாகிப் போகிறார்
மனதினில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிருந்தும் ... அறிவிலியாய்
அழிந்தே தான் வாழ்கிறார்
அவனி மீதினில் இன்னும் சிலர்.

வாழ்வின் எல்லையில் - அகோர
மரணங்கள் பல - அழுத்திப் பிடித்து
அடுத்தவரைக் கொல்லும் வரை
பலருக்குப் புரிவதில்லை
வாழ்வியலின் உண்மை.

ஆக்கத் திறன்கள்
பல கொண்டு- அகிலத்தில்
திரிபவரும் பலருண்டு.

சோதனைக் களங்களை
வாழ்க்கைப் போரில் சந்தித்து
வேதனைகள் பல கடந்து
சாதனைகள் பல படைத்த
சரித்திர மேதைகளும்
இப்பாரினில் பலருண்டு.

வாழ்க்கை சந்தோசத்தின்
உச்சம் என்றே தான்
பலரும் அதை நோக்கி
ஓடோடிப் போகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும்... அங்கே பலர்
ஓடி ஒழிந்துகொள்ள – சிலர்
தடுக்கி விழ – இன்னும் பலர்
விழுந்தெழுந்து ஓடவென்று...

அவரவர் வாழ்க்கைப் பாதைகள்
பள்ளமும் படுகுழியும்
முட்புதருமாய் சிதறிக் கிடக்கிறது.

விதி... கொடியது மதியை விட
அதன் விரலிடுக்கில்
சிக்கிக் கொண்ட நாம்...
சிந்தித்தே தான் வாழ்வியலில்
சிறந்து விளங்க வேண்டும்.

எடுத்தோம் கவிழ்த்தோமென்று
வாழப் போனால்... எல்லாமே
எமக்குள் ஏமாற்றம் தான்

முதல் தோல்வி – வாழ்வில்
முழு தோல்வியல்ல
முதல் வெற்றி– வாழ்வில்
முழு வெற்றியும் அல்ல.

அந்த யதார்த்த உலகில் பலர்
பட்டுத்தேறி பாடம் படித்த
வாழ்வியலின் தொடர் கதையிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால்... மனிதன்...

தன் வாழ்வின் முழுமையை

முழுசாய் உணர... முழு மனதும்

பசுமையாய் இருத்தல் நன்று.

அதில்.... நல்லுரங்களை

சேர்த்தலும் நன்று– அந்த

விளை நிலத்தில் – புத்தாக்க

சிந்தனைகளை விதைத்தலும் நன்று.

கலியுகத்தில்

காலம் போகப் போக

காணாமல் போய் விடும்

கறை படிந்த உள்ளங்கள்.

அதில்... தழைத்தெழும்

ஆல விருட்சமாய்

நல்ல சந்ததிகள்.

சமூக மேம்பாடு– நல்ல

மனங்களில் தான் தஞ்சமடைகிறது

பொதுச் சேவைகள்

பொன்னான மனங்களின் தான்

குடி கொள்கிறது.

நான் – நீ – நாமென்னும்

எல்லை கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் மனம் மட்டும்
தூரமாய் சென்றால் தான்
நம் வாழ்வியலில் சகலதும்
சகலருக்கும் நன்றாய் வரும்.

ஆதலால் மனிதா நீ!
நல்லதையே நினை
நல்லதையே செய்
அதுவும் இன்றே செய்
அதையும் நன்றாய் செய்.

செய் அல்லது
செத்து மடி என்பது
வெறும் வாய் வார்த்தையல்ல
அது தான்...
தன்னம்பிக்கை விழுதுகளில்
தொங்கியழும் விடுகதை
இதைப் புரிந்து தெளிதலே
எல்லோரதும் வாழ்வாகட்டும்.

*2019. 12.12 கல்முனை கலாச்சார மத்திய நிலையம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை

காலத்தின் கோலமதில்
கண் கெட்டுப் போகிறது
கண்டதை உண்ணும்
மானிடர் வாழ்வு
அதைக் கண்டவரெல்லாம்
கண்ணீர் சிந்த.

ஊரைச் சுற்றி இங்கே
ஊர் காவல் நடக்கிறது
ஊரில் உள்ள பலதும்
உண்டு மகிழும்
பல்லின போதை தனில்...
உருமாறிப் போய்விட்டது
உள்ளதனைத்தும் என்று.

அகப்படும் தெருக்களில் எல்லாம்
அதிரடி இராணுவ வேட்டை
அடிக்கடி தொடர்கிறது
அச்சத்தோடு பலரும் பகிர்ந்துண்ணும்
பல்லினப் போதைகளால்.

தவறான சகவாசங்கள்
தலைகால் புரியாமல்
பலரையும் சூழ்கிறது
படுகுழியில் மற்றவரை வீழ்த்த.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய உலகில் இளம் சமுதாயம்
இறந்து கொண்டிருக்கிறது...
இழந்து போகும் இளமையோடு
எல்லாமே தொலைந்து போக.

கட்டுப்பாடுகள் எதனை
விதித்த போதும்...
சிறைக்கூடங்களை அடிக்கடி
எட்டியே பார்க்கிறது
சின்னஞ் சிறுசுகள்...
எதிலும் திருந்தாத ஜென்மங்களாய்
போதை சிதைந்த
செல்களோடும் – மனங்களோடும்.

மாற்றம் நிகழும் உலகில்
மாறியே போகட்டும் மானிடர் வாழ்வு
போதை தொலைந்த சமூகமாய்
மாயை தெளிந்த மனங்களாய்.

*2023. 11. 28 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் அவன்!...

பாவம் அவன்!...
எல்லாம் இழந்து விட்டு
ஏமாந்து நின்றான் வாழ்வில்
வெறுமையாய்.

மனம் செத்து
உயிர் செத்து
உடல் செத்தென...

பாவம் அவன்!...
எல்லாம் இழந்து
வெறுமையாய்
நின்றான் வாழ்வில்.

பிறப்பும் இறப்பும் இறைவனின்
தீர்ப்பென நினைத்தே அவன்
எல்லாம் தொலைந்தும்
தில்லாய் நின்றான் வாழ்வில்.

மனமென்ற ஒன்று அவனுள்
கல்லாய்ப் போய் – அதில்
வேருன்றி நின்றது தன்னம்பிக்கை.

அதை இறுக்கிப் பிடித்தே
அவன் வாழ்வில் திடமாய்
நின்று கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் அவன்!...
எல்லாம் தொலைந்தும் – தில்லாய்
வாழ நினைத்தான் வாழ்வில்.

காலக் கரைவினில்...
அல்லாஹ்!... அவனுக்கு
நல்லதொரு வழிவிட...

மீண்டும் அவன் இப்புவி தனில்
தழைத் தெழுந்தான் நல் மனிதனாய்
விதி வலிதாக.

*2323. 02 02 பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வு

அடிக்கடி அகிலத்தை
உரசிப் பார்ப்பதில்
அல்லாஹ்வின் அற்புதம்
அபாரமாகி விடுகிறது.

அடிக்கடி அகிலத்தில்
அங்கும் இங்குமாய்
அதிர்வுகள் ஏற்பட...

அதனுள்ளே ஆயிரமாயிரம்
அழிவுகளும் ஏற்பட – அதில்...
அதிர்ந்து தான் போய்விடுகிறது.
எஞ்சிய உயிர்கள்.

அகலத் திறந்த
அன்னைப் பூமியின் வாய்க்குள்
அனைத்தும் அமிழ்ந்தும் விட...

அனுதாப அலைகள்
அங்கும் இங்கும் எழ...
அழிவுகள் அனைத்தும்
அடுத்தவரை சூழவென்று...

அல்லாஹ்வின்
அதிரடி கெடு பிடியில்
அதிர்ந்து விடுகிறது மனிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தின் ஓரத்தில்
பதுங்கியவ ரெல்லாம்...
பல நாள் சென்ற பின்
பலதையும் மறந்து தான் போகிறார்கள்...
வாழ்வியலில் எல்லாமே சகஜமென்று.

எத்தனை அழிவுகளை
இங்கே! நடாத்திய போதும்...
எந்த மாற்றங்களும் எங்கேயும்
வரவில்லை என்றே தான்
இன்னும் இன்னும் எழுகிறது
இயற்கை அழிவுகள் எங்கும்

இனியேனும் மனிதன் திருந்தட்டும்
இறையோனின் இனிய பார்வை
எங்கும் விழட்டும்
அதில்..... அகிலமே செழிப்புற.

*2023. 02.08*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வெட்டு

விட்டு விட்டுத் துடிக்கும்
இதயம் போல்...
மின்னி... மின்னி... மறையும்
மின்னல் போல்...

நம் தேசத்தில் அடிக்கடி
வந்து வந்து போன
மின்வெட்டில்
வெந்து தான் போய் விட்டது
இன்றைய மனிதம்.

ஏதோ!... வெறி பிடித்த
மின்னலாய் அது மாறி
நொடிக்கு நொடி– விலை
ஏற்றத்தை கூட்டி விட...

அது இப்போது
உறுஞ்சிக் கொண்டே நகர்கிறது
மனிதனின் உயிரை.

ஆதிவாசி போல்
மனிதரின்று
மாறியே போகிறார்கள்
எதையும் முறையாய்
செய்ய முடியாமல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றோ!...
பல கோடிகளில் புரண்டு
பல கோடிகளை
மென்று விழுங்கிய
கொரோணா வைரஸ்
சப்பித் துப்பிய...

மிச்சம் மீதி வாழ்வும் இன்று
மின் வெட்டில்
மண்ணாய்ப் போன தென்று
புலம்பியே அழுகிறது மனிதம்...
விடியல் தேடும் விட்டில்களாய்.

*2323.02.23. பிறை எப்.எம் (கவிப்பட்டறை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

சுருண்டு சுருண்டு
வீழ்கிறது விழிகள்...
தூக்கம் அதனை
சூழ்ந்து கொள்ள.

தலைப்பகுதி எங்கும்
ஒரே வலி
ஓயாத சிந்தனையால்.

உடம்பெல்லாம்
ஒரே அசதி – ஏதோ!...
அடித்துப் போட்ட
அசதியாட்டம் அது
தளர்ந்தும் போகிறது.

சிக்கெடுக்க முடியா
சிக்காய் சிந்தனைகள்
நம்மை சூழும் போது...
இப்படியே எல்லாம்
சிதைவுற்றுப் போகிறது
சரியாய்... சிந்திக்க முடியாமல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கம்... அசதியின் மருந்தாய்

நிம்மதியின் மருந்தாய்

மாறி விடுகிறது எப்போதும்.

உடற் கூறுகள் கூட

நிம்மதிக் காற்றை

சுவாசிக்கவே விரும்புகிறது

நொடிக்கு நொடி.

இது...

எப்போது கிடைக்கும்

எம்மவர்க்கு?...

*2023.10. 21 பிறை எப்.எம் (சந்தனக்காற்று)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரை சாலையோரம்

காலம் மாறிப் போச்சு...
இயற்கையும் செயற்கையும் இன்று
போட்டி போடும் காலமும் ஆச்சு.

காலம் கடந்து போக
அதனுள் சகலதும்
தொலைந்தும் தான் போகிறது.

வாழ்ந்து முடித்தவரும்
வாழத் துடிப்பவரும்
வாழ்ந்து கொண்டிருப்பவருமென்று...

எவரும் பேதங்கள் ஏதுமின்றி
இன்னும் இன்னும் வாழ்வை முழுசாய்
வாழ்ந்து தான் பார்க்கத் துடிக்கிறார்கள்
நோய் நொடிகள் ஏதுமின்றி.

இறைவனின் ஏட்டினில்
ஆறிலுஞ் சா– நூறிலுஞ் சா
என... ஆன போதும்

அறிவுள்ள மனிதரெல்லாம்
அழகாய் வாழ்ந்தாலும்
அற்புதமாய் உண்டாலும் உறங்கினாலும்
அரிய வகை நோயினங்கள் பல
உடலில் கலந்து
உயிரை வருத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்து வருகிறது
எதற்கு வருகிறது
எப்படி வருகிறதென்ற– வழி
வகைகள் புரியாமலே பலரும்
புலம்பித்தான் சாகிறார்கள்
பலவித நோய்களில் சிக்கி.

ஏதோ!... வந்த நோயை குணப்படுத்த
சங்கிலித் தொடராய் பலரும்
கடற்கரை சாலையோரம் தினம்
ஓடித் தான் போகிறார்கள்
உடல் வியாதி தணிய

நடைப் பயணம் பலருக்கு
வேலை – வெட்டி சிலருக்கு
நக்கலும் நையாண்டியும்
இன்னும் சிலருக்கென்று
சாலையோரம் தினம்
சனம் நிரம்பி வழியுது.

கடற்கரை தனில்
காதலும் கத்தரிக்காயும்
கடலை போட...

சின்னஞ் சிறுசுகள் பல
ஓடிப் பிடித்து விளையாடி மகிழ
மன ஆறுதல் தேடி
இன்னும் பலர் அங்கே செல்ல...
பொழுது போக்கென்று
இன்னும் பலர் உலா வர...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் வீட்டுப் பீத்தல் அலச
ஊர் வம்பளக்க– உலக நடப்பு
நாட்டு நடப்பு அலசவென்று
இன்னும் பலர் செல்லவென...

கடற்கரை சாலையோரத்தில்
சரமாரியாய் தினம்
செறிந்து தான் கிடக்கிறது
மனித வெள்ளம்.

இயற்கையை ரசிக்கும்
இளகிய மனதின் ஓரத்தில்
ஆயிரம் கதை பேசிச் செல்கிறது
அழகிய கடற்கரை.

ஓராயிரம் மர்மத்தை
தன்னகத்தே கொண்டிருக்கும்
எங்கள் கடல் மாதாவின்
கல்பு தனை
யார் தான் கண்டறிவார்?

இயற்கை அழகியது
அதனுள் மூழ்கும் போதெல்லாம்
மனம் லேசாகிப் போகிறது.
சகலதும் மறந்து – இதற்குள்...
இந்த கடல் மாதா மட்டும்
விதி விலக்கா என்ன?

*2020. 12. 20*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதந்தி

காற்றாய் பறக்கிறது வதந்தி...
மண்ணைத் தொட்டு
விண்ணைத் முட்டி மோதியது
மீண்டும் திரும்புகிறது எய்தவனிடமே...
அது இல்லாத பாவம்
பழிகளை சுமந்த படி.

எதிர்பாரா பாவம் பழிகளில்
சிக்கிக் கொண்டோர் புண்பட்டழ
எதிராளி எங்கெங்கோ வெருண்டோட.

வதந்தி பிழிந்தெடுக்கும்
பாவமும் பழியும் பச்சையாய்
பாரினிலே அலைகிறது
பலரையும் பந்தாடிட.

சமூக அரங்கினில்
அறிவிலிகள் அதிகம் – சமூகத்
தொடர்பு குன்றி விட்ட
பல ஜென்மங்களால்...
படு குழியில் வீழ்த்தப்படுகிறது
பலரது வாழ்வுகள்...

சமூகத்தில் வந்தலைந்த
வதந்திகளின் காரணங்கள்
எதுவும் புரியாமலேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர் வாழ்வில்
மண்ணள்ளிப் போடுவது பலருக்கு
கை வந்த கலையாகி விடுகிறது.

இதை நாம்
தூக்கிப் பிடிக்க– அது
எமக்குள் எமனாகி விடுகிறது.

ஆதலால் மனிதன் – தம்மீது
தவறின்றிப் போகும் போது
எதற்கும் அஞ்சாது வாழ்வதே
பெரும் ஜெயமாகி விடுகிறது.

வதந்திகள் வந்த வழி போக
வைதவர் வாழ்வதனை
வல்லோன் பார்த்துக் கொள்ள
நம் வாழ்வியலும் நலம் பெற
நாம் எதிலும் அறிவுள்ளோராய்
வாழ்தலே நமக்கென்றும் ஜெயமாகிறது.

பின்னாளில்...
வதந்தியை வழியனுப்பிய
நல் வாழ்வாய் அது
மாறியும் விடுகிறது.

*2023. 03. 15. பிறை எப். எம். (மகளிர் மட்டும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு வதனம்

ஒட்டியுலர்ந்து
ஓடாய்த் தேய்ந்து– நீ!...
உருமாறி நின்ற காட்சி
உள்ளத்தை வருத்தி
உயிரையும் வாட்டியது.

காரணங்கள் தேடி நான்
களைத்துப் போன போது
கண்ணீரே எனக்குள் மிச்சமாச்சு.

உறுத்திய உன் பார்வையும்
உதறி எறிந்த உன் துடிப்பும்
என்னை வெகு தூரமாக்கி
அழ வைத்ததை
நினைக்க..... நினைக்க...
நெஞ்சு வெடித்துப் போனது.

ஒரு பிளவின் பின்னனி
இன்னும் சரியாய்
எனக்குப் புரியவில்லை...
எங்கே போய்த் தேடுவேன்
இதற்கான பதிலை?...

எல்லோரும் நலமுடன் வாழ்தலே
எல்லாவற்றுக்கும் சிறப்பாகிறது
நடக்காததை நடந்ததாய் நினைப்பதும்
நடந்ததை நடக்காததாய் நினைப்பதும்
எல்லோராலும் முடியாத காரியமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கேயோ வலித்தது
உயிர் துடித்தது
உள்ளே அழுகை வெடித்தது
விழியிடுக்கில் ஒழுகி வடி(ழி)ந்தது
உயிரைப் பிழைந்த கண்ணீர் மழை.

ராத்திரி எனக்குள் விடியலானது
எதை எதையோ யோசித்து யோசித்து
மூளைக் கலங்கள் நொந்தது
இறுதி வரை எனக்கு– உன்...
வெறுப்பின் காரணங்கள் புரியவில்லை.

உன்னை தூக்கி எறிய
என்னால் முடியவில்லை– ஏதோ!...
ஒரு முள்ளாய் உள்ளே கிடந்து
நீ என்னை விறாண்டுகிறாய்.

அரிப்புத் தான் அலுக்கவில்லை...
சலிப்புத் தான் வெறுப்பில்லை – உன்...
பிஞ்சு வதனத்தை மறக்க முடியவில்லை.

காலம் மட்டும் கடந்துவிட்டது
காயங்கள் ஏனோ!... ஆறவில்லை
கடமைகளும் ஏனோ!... முடியவில்லை.

காத்திருக்கும் எனக்குக் கூட
கருணையுள்ள அல்லாஹ்!...
எதையேனும் அருளவுமில்லை...
என்று தான் எனக்குள்
இக்கொடுமை மாறும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேஷம்

மனிதரின் வேஷங்கள் புரியவில்லை
நொடிக்கு நொடி மாறும் உலகில்
மனிதரின் பண்புகளின் நளினங்கள்
மாபெரும் நடிப்புக்கள் புரியவில்லை.

அடையாளம் தெரியாத
அடுத்தவரின் அழகிய நடிப்புக்களில்
அமிழ்ந்தே போகிறது நம் மனது
அதனுள் அழியப் போகும்
நமதான நிலைகளை மறந்த படி.

மற்றோரின் வஞ்சம் கலந்த
வேஷம் கலையும் போது
விம்மி வெடிக்கும்
நம் அழுகுரலின் அவலங்களை
வாய் விட்டு எம்மால்
வெளியே புலம்ப முடியவில்லை.

முடிவில்... தன்மானச் சிக்கலாய்
வெட்கம் அது உருவெடுத்து
நம்மை தட்டிப் பணித்திடும்.

எல்லா வலியும் எம்முடனேயே
அடங்கி விடுகிறது
எந்த இழப்புக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் சொல்ல முடியாத படி
எந்த அவமானங்களையும்
வெளியிட முடியாத படி
அது நம்மை கட்டியும் போடுகிறது.

பல அவஸ்தைகளை
பொறுக்க முடியாது நாம்...
வெளியே எதையேனும்
கொட்டி விட்டால்...
நம்மை நோக்கியே அது
மீண்டும் தாவுகிறது
நம் இயலாமையின்
எதிரொலியாய் அது மாற.

வலிகளையும் வடுக்களையும்
உருவாக்கிய படி உறவுகள் உடைய
உடைப்பெடுத்து நகர்கிறது உறவுகள்
வேஷம் போடும் உறவுகள்
எதற்கும் வேண்டாமென்று.

பிறருடன் பழகும் போது நாம்
எதையும் பார்த்துப் பழகுதல் நன்று
பிறர் நம்ப நட
பிறரை நம்பி நடவாதே என்ற
முதுமொழிக் கொப்ப நாமும்
பழகிக் கொள்வோம்...
பல துயர்கள் நம்மை
அண்டாத படி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும் புளியம் பழமுமாக
உறவுகள் உள்ள வரை
உபத்திரவம் சற்றே
குறைந்தே தாக்கும் நம்மை.

மனிதரின் பண்புகளில்
மாற்றங்கள் வராத வரை
சமூக வாழ்வியலில் நாம்
எச்சரிக்கையாய் இருத்தலே
எதற்கும் சிறப்பு
நம்மை நாம் காப்பாற்ற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாறை மாவட்டம், மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கவிதாயினி எம்.ஏ. மாஹிறா, ஹில்மா, கலீறா எனும் புனைப்பெயர்களில் இலக்கிய உலகில் அறிமுகமாகி பன்முக ஆளுமையாகத் திகழ்கிறார்.

தனக்குள் இருக்கும் கருவளத்தன்மையை மொழிக்குள் புகுத்தி கவிதை வானில் சிறகடிப்பவர். கவிதை எழுதும் ஆள்புலமை உத்தி ஆரம்பத்தில் இருந்தே இவருக்கு கைவந்திருக்கிறது. இவருடைய கவிதை எழுத்துக்கள் ஒவ்வொரு கவிதை நயத்தையும், கவித்துவத்தையும் கொண்டுள்ளது. அத்தோடு தத்துவார்த்த ரீதியான சொல்லாட்சியை தனக்குள் இருத்தி இலகுபடுத்தியிருக்கிறார்.

கவிதைகளை வலிந்து செதுக்காமல் மென்மையான சொல்லாட்சியில் எழுதிச் செல்வது இவரது சிறப்புமிகு அம்சமாகும். 1985 இல், இவரது முதல் கவிதைப் பிரவேசம் இலங்கை வானொலியில் எனினும் 2011.01.02 இல் "கசங்கிய காதல்" கவிதை மூலம் வீரகேசரியில் பெறுமானப்படுகின்றார். தலைப்புக்கேற்ப இவரது கவிதைகளின் உள்ளார்ந்த சக்தி கடந்து செல்வதை வாசிக்கும் போது உணர்வில் தட்டுகிறது.

இவரது கவிதைப் பயணத்தில் பல பட்டங்களையும், பல விருதுகளையும் பெற்றவர். தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும், வானொலிப் பண்பலை களிலும் தனது சுய ஆக்கங்களுக்கு களம் கண்டவர். கலைத்துறை சார்ந்த அமைப்புக்கள் பலவற்றில் உறுப்புரிமை பெற்றிருப்பதோடு பல சமூக சேவைகள் சங்கங்களிலும் இணைந்து செயலாற்றி வருகின்றார். கவிதாயினி மாஹிறா இன்னும் பல தொகுப்புக்களை நமக்குத் தரவேண்டும். இவரது கலைத்துவப் பயணம் தொடர வாழ்த்துக்கள்.

**கவிஞர் விஜிலி**

செயலாளர்,
நூல் வெளியீட்டாளர்,
அம்பாறை மாவட்டம்.

**Rs. 1000/=**

9 786245 224050

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org